
# குந்தி இருக்க ஒரு குடிநிலம்



செங்கை ஆழியான்

கமலம் பதிப்பகம்

# குந்தி இருக்க ஒரு குடிநிலம்

## சிறுகதைகள்

### செங்கை ஆழியான்

கமலம் பதிப்பகம்
75/10A, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்
தொ.பே. இல.
021 222 9881

குந்தி இருக்க ஒரு குடிநிலம்
© செங்கைஆழியான்
முதற் பதிப்பு - 2006
**ISBN 955 - 1624 - 00 - 9**

**இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு**

குந்தி இருக்க ஒரு குடிநிலம்
செங்கைஆழியான்
யாழ்ப்பாணம் - கமலம் பதிப்பகம், வெளியீடு 2006
ப.118; ச. மீ. 18
ISBN 955 - 1624 - 00 - 9 விலை : ரூ 180/=
i 894.811 டிடிசி 21 ii தலைப்பு
1. தமிழ் இலக்கியம் - சிறுகதை பற்றியது

அச்சகம் : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட், கொழும்பு 13.
வெளியீடு : **கமலம் பதிப்பகம்,**
75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- Title: Kunthyirukka Oru Kudinilam
- Subject : A Collection of Short Stories
- Author: Sengaiaaliyan
  (Dr.K.Kunarasa, B.A.Hons.(Cey), M.A.,P.hd,SLAS.)
  (C) Mrs.Kamalambikai Kunarasa
- Language: Thamizh
- Publication: January, 2007.
- Edition: First
- Published by: Kamalam Pathippakam,
  Brown Road, Jaffna.
- Type setting & Cover design: K.Uthayakumar
- Printed by: Unie Arts (Pvt) Ltd, Colombo.
- Price: Rs 180/=

**ISBN 955 - 1624 - 00 - 9**

இந்நூல்
இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இங்குள்ள விடயங்கள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# முன்னுரை

'குந்தியிருக்க ஒரு குடிநிலம்' என்னுடைய ஐந்தாவது சிறுகதைத் தொகுதியாகும். ஏற்கனவே இதயமே அமைதி கொள், யாழ்ப்பாண இராத்திரிகள், இரவு நேரப்பயணிகள், கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் என என் நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. இந்த ஐந்தாவது தொகுதி இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இவ்வாண்டு வெளிவருகின்றது. இத்தொகுதி முற்றிலும் வித்தியாசமான ஒரு தொகுதியாகும். ஏனெனில் இத்தொகுதியில் எனது பல்வகைப் பரிமாணச்சிறுகதைகள் இடம் பிடித்துள்ளன. ஆடுகால் துலா, ஆவுரோஞ்சிக் கல், குட்டுக்காய், வேலிப்பொட்டு ஆகிய நான்கு சிறுகதைகள் யாழ்ப்பாணத்துச் சமுகத்தின் குறியீடுகளையும் பண்பாட்டுக் கோலங்களையும் நினைவு படுத்துவன. வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்தவை. கிராமத்துள் புகுந்த மாய மனிதன், ஊர்பார்க்க வந்த யானைகள் ஆகிய இரு சிறுகதைகளில் முன்னது ஈழநாட்டிலும் பின்னது சிரித்திரனிலும் வெளிவந்த நகைச்சுவைக் கதைகளாகும். நகைச்சுவை யூடாக நமது அறியாமையை இச்சிறுகதைகள் கிண்டல் செய்கின்றன. சேது பந்தனம், கண்ணுக்குத் தெரியாத தளை, என்னைத்தேடி, அபகமம், நிசப்தநகரம், தண்ணீர் தண்ணீர், பிரபஞ்ச இரகசியம் என்பன அறிவியற் சிறுகதைகளாகும். முன்னைய கதைகள் கலைக்கதிரிலும் பிரபஞ்ச இரகசியம் கலைமகளிலும் வெளிந்துள்ளன. இத்துறையில் ஈழத்தில் எவரும் சிறுகதைகள் படைக்கவில்லை. குந்தியிருக்க ஒரு குடிநிலம், மனிதம் ஆகிய இரண்டு சிறுகதைகளும் பேசுகின்ற சமகாலச் செய்திகள் இன்னொரு வகையான அனுபவத்தினைத் தருவன. எனவே எனது பல்வகைச் சிறுகதைகளின் தொகுப்பாக 'குந்தியிருக்க ஒரு குடிநிலம்' அமைகின்றது.

செங்கை ஆழியான்
75/10 A, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்
01.01.2007

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆடுகால் துலா (வெளிச்சம்) | 5 |
| 2. | ஆவுரோஞ்சிக்கல் (வெளிச்சம்) | 14 |
| 3. | குட்டுக்காய் (வெளிச்சம்) | 23 |
| 4. | வேலிப்பொட்டு (வெளிச்சம்) | 30 |
| 5. | சேதுபந்தனம் (கலைக்கதிர்) | 38 |
| 6. | கிராமத்துள் புகுந்த மாய மனிதன் (சிரித்திரன்) | 45 |
| 7. | கண்ணுக்குத் தெரியாத தளை (கலைக்கதிர்) | 51 |
| 8. | ஊர்பார்க்க வந்த யானைகள் (ஈழநாடு) | 58 |
| 9. | குந்தியிருக்க ஒரு குடிநிலம் (தீராநதி) | 65 |
| 10. | என்னைத்தேடி (கலைக்கதிர்) | 76 |
| 11. | மனிதம் (ஈழநாடு) | 83 |
| 12. | அபகமம் (கலைக்கதிர்) | 92 |
| 13. | நிசப்தநகரம் (கலைக்கதிர்) | 98 |
| 14. | தண்ணீர் தண்ணீர் (நுண்ணறிவியல்) | 107 |
| 15. | பிரபஞ்ச இரகசியம் (கலைமகள்) | 112 |

# ஆடுகால் துலா

அருளம்பலத்தார் இடிந்தே போய்விட்டார். வெளிவிறாந்தையில் இடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தபடி தூரத்தே அடிவளவில் தெரியும் கிணற்றையும் கண்முன்னால் கூட்டித்துப்பரவாக்கி வெளிக்கேற் வரைவிரிந்து கிடக்கும் முற்றத்தையும் அடங்காக் கவலையோடு பார்த்தபடி நிலைக்குத்தியிருந்தார். எல்லாம் முடிந்துவிட்டன.

"மாமா." என்றழைத்தபடி பாக்கியம் உள்ளிருந்து வந்தாள்:"இந்தாங்கோ தேத்தண்ணி. வந்ததிலிருந்து எதுவுமே வாய் நனைக்கவில்லை. இந்த அற்ப விடயத்திற்குப்போய் இப்படி இடிந்து போயிட்டியள். அவர் இந்த வீட்டையும் இடித்துவிட்டு மோடோனா ஒரு அப்பஸ்ரயர் கட்டப்படம் போட்டிருக்கிறார், மாமா."

அவரின் இதயத்தில் சன்னம் பாய்ந்த மாதிரியான உணர்வு.

"இதுக்காகவா பிள்ளை..என்னைக் கனடாவிற்கு அனுப்பி வைச்சியள்?"

"என்ன மாமா கதைக்கிறியள்.? உங்கட கடைசி மோன் தம்பிராசா உங்களை அங்க வந்து ஒரு மாதம் தங்களுடன் இருக்குமாறு வற்புறுத்தினதால போனியள். பேரப்பிள்ளையள் 'ஒருக்கா வாருங்கோ கிறாண்ட் பா' என்றதால் போனியள். இப்ப நாங்க வற்புறுத்தி அனுப்பினமாதிரிக் குற்றம் சொல்லிறியள் மாமா"

“ஒரு மாதம் அங்க இருந்தன். அதுக்குள்ள இவ்வளவும் செய்திட்டியள்? “ என்றார் விரக்தியோடு.

“உங்களுக்காகத் தான் மாமா அவர் இவற்றினைச் செய்திருக்கிறார். துலாக் கிணத்தில நீங்க அள்ளிக் குளிக்கிறதைப் பார்த்துவிட்டு இந்த வயதில நீங்க கஷ்டப்படவேண்டாமென்று தான் தண்ணித்தாங்கி கட்டிப் பைப் பூட்டி விட்டிருக்கிறார். தேத்தண்ணியைக் குடியுங்கோ..” அவள் நீட்டிய தம்பளரை வாங்கி காலடியில் நிலத்தில் வைத்தார். மருமகள் உள்ளே திரும்பிச் சென்றாள்.

அவர் விழிகள் சோகத்துடன் கிணற்றடியைப் பார்க்கின்றன. துலாவைத் தாங்கி நின்ற ஆடுகால் அங்கிருக்கவில்லை. அந்தப் பொளி கல்லுக்கிணற்றினையும் ஆடுகால் துலாவையும் அவரின் தகப்பனார் ஆறுமுகத்தார் இரசித்து இரசித்துக் கட்டுவித்தார். அவருக்கு அப்பொழுது வயது பத்து.

**ஓ**ருநாள் அதிகாலை அவர் பாயிலிருந்தெழுந்து வெளியில் வந்தபோது அடிவளவில் நிறைகுடம், விளக்கு என்பன தலைவாழை இலையில் வைக்கப்பட்டிருந்தன. சாணத்தில் பிள்ளையார் அறுகம்புல் தலையுடன் காட்சிதந்தார். சாஸ்திரியார் தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டிவிட்டு அரையிலிருந்த சால்வையைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு வலது கையில் பெருவிரலிற்கும் சின்ன விரலுக்குமிடையில் தென்னீக்கு ஒன்றினை வில்வளைவாகப் பிடித்தபடி வளவெல்லாம் நடக்கத் தொடங்கினார். அப்புவும் அவருக்குப்பின்னால் நடந்தார். ஓரிடத்தில் இப்பொழுது கிணறிருக்கின்றவிடத்தில் சாஸ்திரியார் தரித்து நின்றார்.

அவர் கரத்தில் விரல்களிடையே வில்லாகப் பிடித்திருந்த தென்னீக்கு அங்குமிங்குமாக ஏணையாடுவது போல ஆடியது.

“ஆறுமுகம் இங்க பார்..ஈக்காடுகிறதை..இங்கதான் நல்ல தண்ணியிருக்குது ..இங்க கிணற்றைக்கிண்டு.”

“அங்கயும் ரெண்டு முண்டிடத்தில ஆடீனது..”என்றார் பத்து வயது அருளம்பலம்.

“ஓமோம்..அங்க இப்படி ஆடவில்லை. இந்த இடத்தில திறமான ஊற்றிருக்குது. அது தான் இப்படி ஆடுது. நம்பிக் கிண்டு ஆறுமுகம்.”

தரைக்குக் கீழிருக்கிற அமிர்தத்தை ஈக்கின் மூலம் சாஸ்திரியார் எப்படிக் கண்டறிந்தார் என்பது அவருக்கு இப்பவும் புரியவில்லை. அதோ கிணறு வெட்டுதல் தொடங்கிவிட்டது. சாஸ்திரியார் காட்டிய மையத்தில் தறி அடித்து அதில் ஒரு இழைக்கயிற்றினைக் கட்டிவிட்டு இழைக்கயிற்றினைப் பற்றியபடி சின்னவன். கனகனைப் பார்த்தான். கனகன் அப்புவைப் பார்த்தான்.

“பதின்மூன்டு முழம் கிண்டினால் தான் தண்ணி வரும்..” என்கிறார் அப்பு.

“அப்ப ஏழு முழத்தில கிணத்தின்ர சுற்று இருக்க வேணும். பொளி கல்லுக் கட்டு. விட்டுவீதியா நிண்டுகட்ட பதினான்கு முழத்தில சுற்று வரையடா சின்னவா..”

சின்னவன் முழங்கை அளவாகப் பதினான்குதரம் இழைக்கயிற்றில் அளந்து அந்தத்தில் சுட்டி அலவாங்கினைப் பிணைத்துக்கொண்டான். தறியிலிருந்து இழைக்கயிறு தொய்ந்து போகாத இழுவையோடு அப்படியே ஒரு சுற்றுச் சுற்றி வந்தான். கிணற்றின் வட்ட வடிவம் மண்ணில் கீறப்பட்டுவிட்டது. கிணறு தோண்டப்படுகின்ற வேலையை அப்பு இரசனையோடு அவதானித்து வந்தார். அவரும் அவரோடு சேர்ந்து கொள்வார்.

நான்கு அடிவரை கபிலநிற மேல்படை மண். அடுத்து இரண்டடிகளுக்குப் பெருங்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அதன்பின்னர் மக்கி. அதன்பின்ன மக்கியின் இறுக்கமான பகுதி. இருபதடி ஆழம் வரையில் கிண்டப்பட்டது.

“என்ன கனகு..அசுகையைக் காணவில்லை..”என்று ஆறுமுகத்தார் கேட்கவும் சின்னவன் ஓங்கிப்போட்ட பிக்கான் ‘கணீர்’ என்று ஒலி எழுப்பியது. அப்புவின் முகம் மலர்ந்தது: “சரி சரி..கண்ணாடிப்பார் வந்திட்டுது..இனி ஊற்றுத்தான்..”

மரக்கப்பி பொருத்தித் தேடாவளையக்கயிற்றின் மூலம் கிணற்றிற்குள்ளிருந்து அகழ்ந்த மண், மக்கி என்பன மேலே தூக்கி வகை வகையாகக் கொட்டப்பட்டன. தேடாவளையக் கயிற்றின் அந்தத்தில் மான் கொம்புக் கவர் ஒன்று பொருத்தப்பட்டது. அனலைதீவு நார்க்கடகத்திற்கு மேலதிகப் பலத்திற்குச் சாக்கு அணைத்துக் கடக மட்டையோடு பனை ஈர்க்கினால் இறுகக்கட்டப்பட்டது. அத்தோடு மான் கொம்புக் கவரில் கொழுவிவிடுவதற்கு வசதியாக ஒவ்வொரு நார்க்கடகத்திற்கும் மட்டக்களப்புக் கயிற்றினால் தாங்கு தூக்கிக் கொழுவிப் பொருத்தப்பட்டது

**அ**வருக்கு இன்றும் நன்றாக நினைவு இருக்கிறது. கப்பியில் மாட்டப்பட்டிருந்த தேடாக்கயிற்றின் ஒரு அந்தத்தில் பிணைக்கப்பட்ட இழுதடியைப்பற்றி இருவர் இழுக்க கிணற்றிற்குள்ளிருந்து மக்கி நிரம்பிய கடகத்தினைக் கொழுவிக் காவியபடி மான் கொம்புக் கெவர் மேலே வரும்.

கிணறு அகழப்பட்டு வரும் நிலையில் ஒருநாள் பொளிகற்களுக்கான சுண்ணப்பாளங்கள் வண்டில்களில் கொண்டு வரப்பட்டு பறிக்கப்பட்டன. கல் தச்சர்களின் பொளியும் ஓசை பல நாட்கள் அந்த வளவில் எழுந்து கொண்டிருந்தது. எத்தனை நுட்பமாக அவர்கள் கிணற்று வளைவைக் கணக்கிட்டு பொளிகற்களைப் பொளிந்தனர்?

கிணற்றில் ஊற்று தென்பட்டதும் அவ்விடத்தில் குதூகலம் பொங்கியது. அப்புவின் முகம் பிரகாசமாகியது. பொங்கலிட்டு ஊற்றுக் கங்கையை வரவேற்றமை மறக்கக் கூடியதன்று. பொளிகற்களைப் பொருத்திக் கிணறு கட்டி முடிக்கப்பட்டது. மிதிகல்., சலவைக்கல்., தொட்டி என்பனவும் கிணற்றுக்கட்டும் பூர்த்தியாக்கப்பட்டன.

அடுத்தபணியை அப்பு தொடங்கியிருந்தார். ஆடுகால் அமைக்கின்றபணி.

அருளம்பலத்தாரின் நெஞ்சு கனக்கின்றது. இன்று அந்த ஆடுகாலில்லை. துலாவைத் தாங்கி நின்ற ஆடுகால் பூவரச மரங்கள் அனைத்தும் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன. அவ்விடத்தில் தண்ணீர்த்தாங்கி ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. :"உங்களுக்காகத் தான் மாமா" என்கிறாள் மருமகள் பாக்கியம். அந்த ஆடுகால் அவர் அப்புவின் கரம்பட்ட பூவரச மரங்களைக் கொண்டது. அதில் அப்புவின் உழைப்பிருக்கிறது. மூச்சிருக்கிறது. அப்பு கிராமம் முழுவதும் அலைந்து தேடி வேலிவேலியாகத் தெரிந்தெடுத்து வெட்டி எடுத்துக்கொண்ட வந்த முற்றிமுறுகிய பத்து முழுப் பூவரசந் தடிகள் ஆடுகாலிற்காக அவரால் நாட்டப்பட்டன.

"கனகு, ஆடுகால் தடிகள் வளர்ந்து பலம் பெறும் வரை ஐந்தாறு காட்டுத் தடிகளையும் நட்டுவிடு.."

அப்பு சொன்னவாறு ஆடுகாலமைந்தது. ஐந்தடி இடைவெளியில் இரண்டு வரிசையில் ஆடுகால் மரங்களும் பூவரசந் தடிகளும் நாட்டப்படடன. துலா அச்சுலக்கையைத் தாங்குகின்ற பக்க மரங்கள் தெரிந்தெடுத்து இழைக்கயிற்றினால் வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டன. ஒவ்வொரு நாளும் இழுவாளியால் கிணற்றிலிருந்து நீரள்ளி ஆடுகால் தடிகளுக்கு மறக்காமல் அப்பு நீர்வார்த்தார். பூவரசந்தடிகள் துளிர்த்தபோது அவர் பிரகாசமானார்.

இன்று அவையில்லை. ஆடுகாலிருந்தவிடத்தில் கொங்கறீற் தூண்கள் எழுந்து நீர்த்தாங்கியொன்றினைக் காவி நிற்கின்றன. ஆடுகால் பூவரச மரங்கள் தறிக்கப்பட்டு ஓர் ஒதுக்கில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

ஐம்பது வருடங்களுக்கு மேல் அவர்களுக்காக உழைத்த துலா கழற்றப்பட்டு முற்றத்தில் வெறுந்தரையில் புரட்டிவிடப்பட்டிருக்கிறது. அச்சுலக்கை கழற்றப்பட்டு ஒரு பக்கத்தில்

கிடக்க துலா பரிதாபமாகக் கிடந்தது. அவருடைய அப்புவைத் தூக்கி வளர்த்தியதான பிரமை அவருக்கு ஏற்பட்டது. அந்தத் துலாவிற்காக அப்பு எடுத்த கரிசனை அவருக்கு இப்பவும் நினைவிலாடுகிறது.

பனந்துலாவினைப் போடுவதாக முடிவாகியதும் அரியாலை வேலுப்பிள்ளை அழைத்துவரப்பட்டார். அக்கிராமத்தில் அவர் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட துலாக்கள் தாம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்றன. அரியாலை வேலுப்பிள்ளையின் துலா என்பதை அத்துலாவின் எழுதகத்திலிருந்து எவரும் புரிந்து கொள்வர். துலாவின் நுணியில் சுற்றப்படும் துலாக்கயிறு நழுவாதிருப்பதற்காக சீவப்பட்டிருக்கும் சிறபப் பொதிகைதான் எழுத்தகம். துலாவிலுள்ள எழுதகத்தினைப் பார்த்து அத்துலாவின் சிறபன் வசாவிளானைச் சேர்ந்தவரா, நல்லூர் அரசடியைச் சேர்ந்தவரா, கைதடியைச் சேர்ந்தவரா என்பதை இனங்காண அப்புவால் முடியும்.

வேலுப்பிள்ளையை அழைத்துக்கொண்டு தனது பனந்தோப்புக்கு அப்பு போனார். அவரும் பிடிவாதமாகக் கூடவே போனார். அவர்களிடமிருந்து பல விடயங்களைக் கற்ற முடியும் என்பது அருளம்பலத்தாரின் நம்பிக்கை.

துலாவிற்கான பனை தெரிவுப்படலம் ஆரம்பமாகியது.

"இது எப்படி வேலுப்பிள்ளை?"

"இது மரவைப்பனை கமக்காரன். அடி ஒடுங்கி உச்சி பருத்திருக்குது பாத்தியளே? முரவைப்பனைகள் வலிமை குறைந்தன. துலாவிற்குச் சரிவரா."

"அப்ப இது?"

"நீங்கள் என்னைச் சோதித்துப் பார்க்கிறியள் போல. அடியும் தலையும் ஒரே தடிப்பில் இருக்கிற செங்காலிப்பனையை ஆராவது துலாவிற்கு எடுப்பினமோ? துலாவிற்கு வால்கால் பனை தான் ஏற்றது.

இந்தா பாருங்க இந்தப்பனையை.'' வேலுப்பிள்ளை ஒரு பனையைச் சுட்டிக்காட்டினார்: ''அடிப்பனையின் சுற்று ஒன்றரை அடிக்கு மேலும் அப்படியே உச்சிவரை சீராக ஒடுங்கியும் இருக்கிற இந்த வால்கால் பனை தான் ஏற்றது..''

அந்த வால் கால் பனை தறிக்கப்பட்டு வீட்டு வளவிற்குக் கொண்டு வரப்பட்டது. துலா வடிவு பெறத்தொடங்கியது. எட்டு இரும்பு ஆப்புகளும் இரண்டு மரஆப்புகளின் துணையுடன் வெகு அற்புதமாக அந்தப்பனை இரு சம பாதிகளாகப் பிளக்கப்பட்டது. வேலப்பிள்ளை ஓயாது பேசிக்கொண்டு வேலைசெய்தார்.

''பனையை இரு சம பாதிகளாகப் பிளப்பதற்குப் பயிற்சி தேவை, தம்பி. கொஞ்சம் பிழைச்சாலும் துலாவின் சமநிலையும் இறுக்கமும் பிழைச்சுப்போகும். ''

''எப்படி துலாவின் நீளம் கணிப்பியள்?''

வேலுப்பிள்ளை சிரித்தார். ''கிணற்றின் ஆழத்தைப்பொறுத்து நிச்சயிப்பம். உங்கட கிணற்றிற்கு பதினான்கு முழத் துலா தேவை. அச்சுலக்கைக்கு அடிப்பாகம் ஐந்தரை முழம் இருக்கும் அச்சுலக்கைக்கு அங்கால உச்சப்பகுதி எட்டரை முழமாக அமையும் கண்டியோ தம்பி.''

பிளக்கப்பட்ட பனை மரம் வாச்சியைக் கொண்டு சீவப்பட்டது. கால்களை அகட்டி அவற்றின் இடையில் பனைமரப்பாதியை வைத்து வாச்சியால் வேலுப்பிள்ளை சீவியபோது அவருக்குக் கூச்சமாகவிருந்தது. எங்கு வாச்சி தவறி வேலுப்பிள்ளையின் காலைக் காயப்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. இரண்டு பாதியும் சீவிமுடிக்கும் வரை அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. இடையிடையே கோடரியும் உளியும் பயன்படுத்தப்பட்டன. அச்சுலக்கை பொருத்தப்பட்டு இரண்டு பாதிகளையும் இணைத்து நெம்புகள் இறுக்கி கடையாணிகள் இறுக்கப்பட்டன.

துலாவேளை முற்றுப்பெற்றது. அப்பு கடைசியாகப் பார்த்தார். வேலுப்பிள்ளை கீறாணியை எடுத்து அடித்துலாவிலிருந்து நுணித்துலாவரை இரண்டு பாதிகளும் பொருந்தியவிடத்தில் கீறியிழுத்துச்சென்றார். கீறாணி, பிளவுப் பொருத்துள் சிறிதளவும் உள்ளிறங்கவில்லை.

“நல்ல திறமான வேலைப்பாடு வேலுப்பிள்ளை..”

அப்புவால் மெச்சப்பட்ட அந்தத்துலா இன்று முற்றத்தில் மண்ணில் கிடக்கிறது. அவரின் இதயம் கனக்கிறது.

“மாமா..இதென்ன தேத்தண்ணி குடிக்காமல் ஆறிப்போய்க்கிடக்குது? வேறை ஊத்தி வாறன்.” என்றபடி குனிந்து தம்ளரை எடுத்தாள். பாக்கியம்.

“வேண்டாம் பிள்ளை. மனசு சரியில்லை..”

“போய் குளிச்சிட்டு வாருங்கோ மாமா..”

“எங்கை?”

“பாத் ரூமில தான்..”

அவர் மருமகளை ஏறிட்டுப் பார்த்தார். துலாவை இறக்கி வாளியில் தண்ணீர் அள்ளி தலையில் ஊற்றுகின்ற சுகம் எதிலும் வராது. அரையில் துவாயோடு அரைக்கிணற்று நீரை மொண்டு குளிப்பது போல வருமா?

முற்றத்தில், துலா கழற்றிப்போடப்பட்டிருக்குது. இப்படியே கிடந்தால் நிலக் கறையான் ஏறிப்படர்ந்து சிதைந்து போய்விடும். அரிகற்களில் தூக்கி வைக்கவாவது வேண்டும்.

அவர் எழுந்து சென்று அரிகற்களைத் தூக்கி வந்து முற்றத்தில் போட்டார்.

“என்ன மாமா செய்யிறியள்? அதைத்தான் விலைக்கு வித்திட்டம்.”

அப்புவை விற்றது மாதிரி உணர்வு. “என்ன?”

வெளிக்கதவைத் தள்ளித்திறந்துகொண்டு மாணிக்கன் வந்தான்.

“தங்கச்சி..இப்ப ஆர் பழந்துலாவை வாங்கினம். முதலில ஓமெண்ட சதாசிவத்தார் இப்ப வேண்டாமாம். பம் வைச்சு தண்ணித்தாங்கி கட்டப்போகினமாம். விறகாகக் கொத்திப்போட்டு விடுகிறன் தங்கச்சி..”

மாணிக்கனின் கன்னத்தில் அருளம்பலத்தாரின் அறை மின்னல் வேகத்தில் படிந்தது. “போடா இங்க இருந்து..நிண்டியெண்டால் கொலை விழும்..”

அவர் அப்படியே தளர்ந்து போய் சாய்வு நாற்காலியில் அமர்ந்து சரிந்து கொண்டார். கண்கள் கலங்கி நீரைக் கொப்புளிக்கத் தொடங்கின. எப்படி அயர்ந்து போனார் என்பதோ எப்படி விழிப்பு வந்ததென்பதோ அவருக்குத் தெரியவில்லை. கண்களை விழித்தபோது மூத்தவன் கலங்கிய விழிகளுடன் அவர் முன் நின்றிருந்தான். முற்றத்து மண்ணில் கிடந்த துலா அரிகற்களில் தூக்கி வைக்கப் பட்டிருந்தது.

“மன்னியுங்கோ ஐயா. உங்களைப் புரியாமல் உங்களுக்கு நன்மை செய்யிறதா எண்ணிப் பிழை விட்டிட்டம். இனி அப்படி நடக்க மாட்டம். நீங்க வாழ்ந்த வீட்டை அப்படியே வைச்சிருப்பன். பரம்பரை பரம்பரையாக வைச்சிருக்கச் செய்வன். எழுந்து வாருங்கோ..”

அவர் தன் முகத்தினை அழுத்தித் துடைத்துக்கொண்டார்.

*- வெளிச்சம் 2005*

# ஆவுரோஞ்சிக்கல்

எல்லாப்பிள்ளைகளும் கைகளை விரித்துவிட்டார்கள்.

"ஐயா ஏன் உங்களுக்கு இப்ப காசு? தங்கச்சிமாருக்குக் கொடுக்கப் போறியளோ? எங்களுக்கு வலு கஷ்டம். சாப்பாட்டிற்கு வழியில்லையெண்டால் அனுப்புறன்." என்று கனடாவில் இருக்கிற மூத்தவன் எழுதிவிட்டான்.

"விசர் வேலை பார்க்கிறியள்? இப்ப உது தான் அவசரமோ? இந்தக்காலத்தில உதெல்லாம் ஆருக்குத் தேவை. ஊராக்கள் சிரிக்கப்போகினம்." - இது இரண்டாவது மகன்.

"சீவிக்கவே வழிதெரியாமல் இருக்கிறம். நீங்க இப்பவும் சின்னப்பிள்ளையாட்டம். பேசாமல் எங்களோட வந்திடுங்கோ.." பெண்பிள்ளைகள் ஒரே குரலில் சொல்லி விட்டார்கள். மொத்தத்தில் எல்லாரும் கைவிரித்துவிட்டார்கள்.

அவருக்கு நெஞ்சு கனக்கிறது. அப்படியே அழியவிட்டுவிடுவதா? அவர் மூதாதையர்கள் அதற்காகவா அவற்றினை அமைத்தார்கள்?

ஒரு மாதத்திற்கு முன் வயல்வெளிப்பாதை அதிகாலைப்பனியில் குளித்துக் கொண்டிருந்த வேளை.

தம்பையாக்கிழவர் தடியை அவதானமாக ஊன்றியபடி விளைந்து குடலை கக்கியிருந்த நெற்கதிர்களைப் பார்த்தபடி காலாற நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் ஓடி விளையாடிய வயல் வரம்புகள். மாடுகள் பூட்டி அவர் உழுத வயல்கள். விதைகளை அள்ளிப் பக்குவமாக ஈரமண்ணில் தூவிய கரங்கள். குனிந்து இடக்கரத்தால் விளைந்து தலைசாய்த்த கதிர்களைப் பற்றி வலக்கரத்தால் அரிவுசெய்த உடம்பு. தொன்னூறு வயதிற்குப் பிறகும் வயலில் இறங்கி வேளாண்மை செய்ய மனதில் ஆசையிருந்தும் உடலில் தெம்பில்லை.

அரையில் வேட்டியும் தோளில் கொய்து இட்ட சால்வையுமாக வயல் வெளிப் பாதையில் பனிக்குளிரில் நடந்து வரும் தம்பையாக்கிழவரை சின்னப்பு எதிர் கொண்டான்.

"ஏன் அம்மான்..சேட்டுக்கீட்டை பெனியன் கினியனைப் போடக் கூடாதே?"

"ஏன்ராப்பா? உனக்கென்ன குளிருதே? இது கண்டியோ வயிரம் பாய்ந்த உடம்பு. குளிரும் மழையும் ஒண்டும் செய்யாது." என்றபடி கிழவர் அவனைக் கடந்தார். சற்றுத் தூரம் நடந்ததும் ஓரிடத்தில் அவர் தரித்து நின்றார். அவர் விழிகளில் இருந்தாற்போல் பிரகாசம் படர்ந்தது. கண்கொட்டாது பார்த்தபடி நின்றிருந்தார். ஒவ்வொரு நாளும் இவ்விடத்தில் அவர் கால்கள் கட்டப்பட்டு நின்றுவிடும்.

அவர் வயலின் தொடக்கத்தில் பாதையோடு நெருங்கியதாக ஒரு துரவு நீண்டு கிடந்தது. சுற்றிவர கேணிக்கட்டும் ஒருபக்கத்தில் மாடுகள் இலகுவாக இறங்கி நீரருந்த வசதியாகச் சாய்தளமும் இன்னொருபக்கத்தில் மனிதர் இறங்கி கால் முகம் கழுவ வாய்ப்பாகப் படித்துறையும் அமைக்கப்பட்டிருந்தன. துரவுக்கேணியின் அருகில் ஒன்றரையடிச் சுற்றில் நான்கடி உயரத்தில் ஒரு குத்துக்கல் ஆவுரோஞ்சிக் கல்லாக நாட்டப்பட்டிருந்தது.

வானம் பார்த்த வயல்கள். மாரியில் விளைந்துவிட்டு அல்லது குடலையாகக் கருகிவிட்டு கோடையில் காய்ந்து வறள் புற்களோடு காட்சிதரும். அக்காலத்தில் ஊர்மாடுகள் எல்லாம் வயல்தரையில் மேய்ச்சலிற்கு வந்துவிடும். வெயில் மேலைவானில் சரியத்தொடங்கியதும் ஒவ்வொன்றாக துரவை நாடி வரத்தொடங்கும். ஒவ்வொன்றாக மேய்ச்சல் உடல் திணிவைத் தணிக்க அல்லது மயிர்களுள் புகுந்து கடிதரும் பேன்களையும் உண்ணிகளையும் களைய ஆவுரோஞ்சிக்கல்லில் வளம் மாறிமாறி உரஞ்சிக் கொள்ளும். பின்னர் வரிசையாக துரவின் சாய்வுத் தளத்தில் இறங்கி ஆவலோடு நீரை அருந்திவிட்டு பட்டிக்குத் திரும்பத் தொடங்குவர்.

எவ்வகைக்கோடையிலும் அவர் துரவு வற்றிவிடுவதில்லை. எப்பொழுதும் நீருடன் தளதளவென விளங்கும்.

ஆம் அது அவர் துரவுதான். அவர் கொள்ளுப்பேரன் வேலுப்பிள்ளைக்கமக்காரன் ஊர்ச்சனத்திற்காகவும் ஊர்மாடுகளுக்காகவும் கட்டிவிட்ட தருமச்சாதனம் அது. அதன் பெயரே பெரிய கமக்காரன் துரவு. அத்துரவிற்கு அருகில் அவருடைய பேரனார் மயில்வாகனத்தார் புன்னாலைக்கட்டுவனுக்கு வண்டில் கட்டிச் சென்று, ஒரு நாள் முழுவதும் மினக்கெட்டு தேடிஎடுத்துப் பொளிவித்து கொண்டுவந்து நாட்டியது இந்த ஆவுரோஞ்சிக்கல். தம்பையாக்கிழவரின் தகப்பனார் அடிக்கடி இத்துரவினதும் ஆவுரோஞ்சிக்கல்லினதும் பெருமைகளை சொல்லிப் பூரித்துப்போவார்.

“அதையேன் கேக்கிறாய் ராசா. கோடையில தண்ணி குடிக்க இல்லாமல் ஊர்மாடுகள் பட்ட அவஸ்தையைக்கண்டு என்ர பூட்டனார் வேலுப்பிள்ளைக்கமக்காரர் இந்தத்துரவைத் தன் செலவில் வெட்டுவித்தார். கிணறுகள் கூட சிலவேளை கோடையில் வற்றிவிடும் ஏன்றால் பாரன். தண்ணிக்கு அப்படியொரு கஷ்டம். இந்தத்துரவு வெட்டிக்கட்டப்பட்டதும் ஊர்க்கிணறுகளிலும் கோடையில தண்ணி வத்தவில்லை. வேலியலிலும் பனைகளிலும் மேய்ச்சல் மாடுகள் உடம்பைத் தேய்ப்பதைக் கண்ட என்ர பேரனார் மயில்வாகனத்தார் இந்த ஆவுரோஞ்சிக்கல்லைப் புன்னாலைக்கட்டுவனெல்லாம் அலைஞ்சு திரிஞ்சு கொண்டு வந்தார். நம்பமாட்டாய் இந்தக்கல்லின்ர நீளம் எவ்வளவு தெரியுமே? ஏழடி....மூண்டடி நிலத்துக்குள்ள தாட்டிருக்குது.

இல்லாட்டா உடல் உளைவுக்குத் தேய்க்கிற மாடு கல்லோட சரிஞ்சு விழுந்திடுவினம்.''

நீள்கயிற்றில் பிணைத்திருந்த மாடொன்று கல்லில் உடலைத் தேய்த்துக் கொண்டது. பின்னர் மேயத்தலைப்பட்டது. தம்பையாக்கிழவருக்குத் தன் மூதாதையர்களை நினைக்கப் பெருமிதமாகவிருந்தது. எத்தகைய நிலையான தர்மகைங்கரியம் செய்திருக்கிறார்கள்.? அவருடைய தகப்பனார் காலம் வரை அத்துரவைக் கண்போலப் பேணிப் பாதுகாத்திருக்கின்றனர். அத்துரவின் கேணிக்கட்டிலோ படியிலோ சிறுசேதம் ஏற்பட்டாலும் துடித்தப்பதைத்து உடனே மேசனை அழைப்பித்துத் திருத்தம் செய்துவிடுவார்கள். அவரும் அதற்குப் பின்னிற்பவரல்லர். பலதடவைகள் அவர் திருத்துவித்திருக்கிறார். அவருக்குப் பின் அவர் பிள்ளைகள் இத்துரவைக் கவனிப்பார்களா?

நினைவே வலியைத் தந்தது. படிப்புத்தந்த கௌரவத்தால் இரண்டுபிள்ளைகள் வெளிநாட்டிற்கு ஓடிவிட்டார்கள். அவர்கள் அதற்குச் சொன்ன காரணம் -'இங்க இருக்கவா முடியும்?' ஒருவன் கொழும்பில் பெரியதொரு உத்தியோகம் பார்க்கிறான். அவன் சொல் கிற காரணம் - 'அப்பு பாவம் தனிச்சுப்போனார். கொள்ளி வைச்சு அனுப்பிவிட்டு உங்களோட கனடாவுக்கு வாறன்.' யாழ்ப்பாணத்திற்குள் ஒவ்வொருவனுக்கு வாழ்க்கைப் பட்டு பிள்ளைகுட்டிகளோடு வாழ்கிற மூன்று பெண்பிள்ளைகளும் எப்போதாவது வந்து அவரை எட்டிப்பார்த்தவிட்டு வெட்டி வைத்திருக்கின்ற தானியங்களைப் பங்கு போட்டுக் கொண்டு போய்விடுவார்கள். அவர்கள் வலிந்து கூப்பிட்டாலும் அவர் ஊரைவிட்டு எங்கும் போகத் தயாராகவில்லை.

அவர் தாயின் உதரத்திலிருந்து விழுந்த மண் இது. அவர் ஓடியாடி விளையாடி வளர்ந்த நிலம். அவர் அங்கேயே மண்ணில் சரிய வேண்டும். இந்த வயல் வெளியில் நடக்கும்போது. இந்தப் பயிர் தழுவிய காற்றைச் சுவாசிக்கும்போது, அவர் மூதாதையர் கட்டிய இத்துரவின் கரையில் நிற்கும்போது, ஆவுரோஞ்சிக்கல்லில் ஊர்மாடுகள் தம் உடலைத்தேய்க்கும்போது ஏற்படும் மகிழ்விற்கு இணை உலகில் எங்குமில்லை என்பது அவர் திடமான நம்பிக்கை.

இச்சூழலின் காற்று அவர் உடலைத் தழுவும்போது அவர் மூதாதையர்கள் அவரைத் தடவுவதாக அவர் உணர்கிறார்.

அவர் கொள்ளுப்பேரனார், பேரனார், தகப்பனார் ஏன் அவர் கூட ஏதோ ஒரு வகையில் ஊராக்களுக்கும் பிள்ளைகளுக்கும் இந்த ஆவுரோஞ்சிக்கல் போல விளங்கியுள்ளனர். துயரென்று உதவிநாடி அவர்களை நாடி வந்தவர்கள் ஏமாற்றத்துடன் சென்றது கிடையாது. ஊராக்களின் சுகதுக்கங்களுக்கு வாரிக் கொடுத்த கரங்கள். சென்ற மாதம் கூட மூத்தவள் ஒருநாள் பதகளிப்புடன் ஓடி வந்து அவரிடம் எஞ்சியிருந்தவற்றையும் பேத்தியின் கலியாணத்தைச் சாட்டிக் கொண்டுபோனாள். பேணிக்காத்து வைத்திருந்த மனைவின் நகைகளையும் தூக்கிக் கொடுத்துவிட்டார். அதைக்கேள்விப்பட்டு ஓடி வந்த இரண்டாவது மகள் அழுது மாய்மாளம் கொட்டி எஞ்சியிருந்த தோட்டக்காணியை விற்பித்துக் காசாக்கிக்கொண்டு போய்விட்டாள். கனடாவிற்குப் போவதற்காக வயல் காணியில் பெரும் பகுதியை மூத்தவன் விற்றுப் பணம் பெற்று புலம் பெயர்ந்துவிட்டான். இப்போது அவருக்கென எஞ்சியிருப்பது பத்துப்பரப்பு வயல் துண்டு மட்டுந்தான். 'அப்புவுக்குத் தோட்டந்துரவு இருக்குது. சாப்பாட்டிற்குக் காணும்' என்று பிள்ளைகள் எதுவும் அனுப்புவதில்லை. ஏதோ அவர் காலம் எவரிடமும் கையேந்தாமல் ஓடியது.

அவருடைய பத்துப்பரப்பு வயலையும் எப்படியாவது வாங்கித் தன்வயலோடு சேர்த்துவிடவேண்டுமென்று வேலாயுதம் ஓயாமல் அவரை நச்சரித்துத் திரிவது வேறு கதை.

"உதேன் அம்மான்..எனக்குத்தந்திட்டு காசை வாங்கி பாங்கில போட்டிட்டு கடைசி காலத்தில ராசா மாதிரி இருக்காமல்.."

"பத்துப்பரப்பு வயல் வித்து வாற காசு இருந்து சாப்பிடக் காணுமென்கிறாய்..விசரா? அதைமட்டும் கேக்காதை. என்ர எஞ்சிய சொத்து அந்த வயலும் இந்தத் துரவுந்தான். துரவு ஊர்ச்சொத்து. வயல் துண்டு எஞ்சியிருக்கிற என்ர உசிர். இரண்டையும் விக்கேலாது. நான் செத்தபிறகு பிள்ளையள் எதாவது செய்திட்டுப் போகட்டும்."

என்று திடமாகக் கூறிவிட்டார்.

அவர் நெடுமூச்சுடன் நிமிர்ந்தபோது துரவின் எதிர்ப்பக்கத்தில் சண்முகத்தான் கண்ணில் பட்டான். வயல் கரையில் எங்கோ குந்திவிட்டு துரவைநோக்கி வந்தவன் கிழவர் நிற்பதைக் கண்டு சற்றுத் துணுக்குற்றான்.

"உனக்கு சண்முகம் எத்தனை தரம் சொல்லிப்போட்டன். .இதில வந்து அடிகழுவாதை எண்டு.. கேக்கிறாயில்லை. மாடுகளும் மனிசரும் பாவிக்கிற நீர்நிலை கண்டியோ?.." என்று தம்பையாக்கிழவர் பொரிந்து தள்ளினார்.

"நான் அதுக்கு வரவில்லை அப்பு. ஒரு ஊமல் எடுத்தால் விசயம் முடியுது. உன்ர துரவுத் தண்ணியே வேணும்.." என்று கத்திய சண்முகம், "இஞ்ச வடகிழக்குப்பக்கத்தில உன்ர கேணிக்கட்டு பிளந்து பாறிக்கிடக்குது. நீ அப்பு காணலையே?" என்றான்.

கிழவர் துடித்துப்போனார். அப்படியே நிலம் பிளந்து அதில் தான் புதைந்தது போன்றதொரு உணர்வு.. வேகமாப் பதைபதைப்புடன் ஓடிவந்தார். சண்முகம் கூறியது உண்மைதான். கேணிக்கட்டின் ஒரு பகுதி தண்ணிக்குள் சரிந்து கிடந்தது. அவருடைய தந்தை சரிந்து கிடப்பது, போல..அவருடைய பேரனார் சரிந்து கிடப்பது, போல.. அவருடைய கொள்ளுப்பேரனார் சரிந்து கிடப்பது போல உணர்வு.

'எப்படியாவது கட்டிவிடவேணும்.'

பிள்ளைகள் எல்லாரும் கைவிரித்துவிட்டார்கள்.:"ஐயாவிற்கு விசர்..கேணி திருத்தப்போறாராம்.. கேணி. அது ஆருக்கு இப்ப வேணும்? அதை இப்ப ஆர் பயன்படுத்துகினம்? ஊரில பெரிய மாட்டுப்பட்டி இருக்கிறதாக ஐயாவுக்கு நினைப்பு. மாடெல்லாம் கசாப்புக் கடைக்குப் போட்டுது. உழவு மாடுகளையே ஙகரர் வாங்க வித்துப் போட்டான்கள். ஊர்க்கிணற்றில தண்ணி நிக்க துரவு வேணுமாம். பைப்பைப்பூட்டி

தண்ணியுள்ள இடத்திலிருந்து வீட்டுக்குள்ளயே பைப் வைக்கலாம். நவீனகாலம் உவருக்கு விளங்கவில்லை. சாப்பிட்டமா இருந்தமா என்றில்லாமல் கிழவன் கேணி திருத்தப் போறாராம். அதுக்குக் காசு அனுப்பட்டாம்..” பிள்ளைகளின் பேச்சின் எழுத்தின் சாராம்சம் இது தான்.

**ஊ**ராக்களிடம் கேட்டுப் பாக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு வந்தது.

“உதுக்கு நாங்க இப்ப செலவழிக்கத் தேவையில்லை. ஏஜிஏயிட்ட எழுதிக் கொடுத்தால் திருத்துவிப்பது அவர் கடமை அப்பு. இந்தத் துரவு எனனத்துக்கு அப்பு? மண் போட்டு மூடினால் ஒரு பொலிபோல் கிறவுண்ட கிடைக்கும். நல்ல இடம்..” என்றான் சனசமுகநிலையத் தலைவன் கனகசூரியன். அவனைக் கோபத்துடனும் பரிதாபத்துடனும் அவர் பார்த்தார்.

சரிந்துகிடக்கும் கேணிக்கட்டினைப் பார்க்க அவர் உடல் பதறியது. நெஞ்சம் கனத்து இருள்கிறது. இப்படியே விட்டால் படிப்படியாகத் துரவுக்கட்டுகள் சிதைந்து ...அழிந்து போகவேண்டியது தான். பையன்கள் இவற்றின் பாரம்பரியப் பெறுமானம் தெரியாமல் மண்ணிட்டு மேடாக்கி பொலிபோல் பந்து விளையாடுவார்கள். எண்ணமே அவரை வருத்தியது. ‘ஒரு போதும் அழியவிடமாட்டேன்.’

அவர் மெதுவாக கிழக்கு நோக்கி நடக்கிறார். அவர் வயல் துண்டு அறுவடை முடிந்து ஆறிக்கிடக்கிறது. பக்கத்து வயலில் வேலாயுதம் எள் விதைப்புக்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறான்.

“தம்பி வேலாயுதம் இஞ்ச ஒருக்கா வா மோனை..” அழைக்கும்போதே குரல் தளுதளக்கிறது.

வேலாயுதம் அவரிடம் விரைந்து வந்தான்.

“என்ன அம்மான்?”

“என்ர வயல் துண்டை உனக்கு விக்கிறதாக முடிவுசெய்திட்டன்..”

வேலாயுதம் அவரை வியப்புடன் ஏறிட்டான்.

“இப்ப வேண்டாமென்று மட்டும் சொல்லிடாதை..” குரல் எந்த நேரத்திலும் உடைந்து விடலாம்.

“ஏன்?..இப்ப என்ன அவசரம் வந்தது அம்மான்?”

“துரவைத் திருத்த எனக்குக் காசு வேணும். வேலாயுதம். எனக்கு வேறு வழி தெரியவில்லை.” அவர் விழிகள் கலங்கித்தவித்தன.

வேலாயுதம் அப்படியே சில்லிட்டு நின்றுவிட்டான். அவரை ஏறிட்டுப் பார்த்தான். அவர் சிகரத்தைத் தொடுமாப்போல உயர்ந்து நிற்பதாகப் படுகிறது.

“என்ன வேலாயுதம் பேசாமல் நிக்கிறாய்? ஓமென்டடா மோனை..”

“சரி நான் வாங்கிக் கொள்கிறன் அம்மான். ஆனா ஒரு நிபந்தனை..”

“சொல்லு அப்பன்.”

“நீங்க இருக்கு மட்டும் அந்த வயல் துண்டு உங்களிடமே இருக்கட்டும். அது உங்கட உசிர் எண்டனீங்கள் அம்மான். அதைப் பறித்துவிட எனக்கு விருப்பமில்லை.”

வேலாயுதத்தின் கரங்களைத் தம்பையாக்கிழவர் பற்றிக் கொண்டார்.

“மோனை எனக்குப் பிறகு இந்தத் துரவுக்கும் ஆவுரோஞ்சிக் கல்லுக்கும் நீ தான் பொறுப்பு. அழியவிடாமல் பார்த்துக் கொள். அவை எங்கட முதுசொம். எங்கட அடையாளம்.” விழிகள் கலங்கித்

தவிக்கின்றன.

(குறிப்பு: வேலாயுதத்திடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு தம்பையாக்கிழவர் அவ்விடத்தில் பூரண திருப்தியோடு இறந்து போனார் என்பது தான் உண்மை வரலாறு.)

*- வெளிச்சம் 2005*

# குட்டுக்காய்

அரசாங்க எசென்டர் துவைனம் துரை தன் அலுவலக அறையில் அமர்ந்திருந்தவாறு ஜன்னலூடாக வெளியே பார்வையை மேயவிட்டார். கண்டி வீதிக்கு வடக்கே பாரிய மரங்களைக் கொண்ட பூங்காவின் ஒரு பகுதி விரிந்து கிடக்கின்றது. வீதியோரமாக அவரை நன்கு கவர்ந்த குட்டுக்காய் மரம் காட்சி தருகின்றது. தொட்டாற் சுருங்கி இலைகளின் பெரிய வடிவ இலைகள். நீண்ட ஒரு தண்டும் அதன் நுனியில் மிகச்சிறிய பந்தளவினதான ஒரு காயையும் கொண்ட பல காய்த்துத் தொங்கின. அவ்வழியாகப் பாடசாலைக்குச் செல்கின்ற பையன்கள் நிலத்தில் விழுந்து கிடக்கும் தண்டுடன் கூடியதான காயை எடுத்து இன்னனொருவனின் தலையில 'ஙொங்' என அடிப்பதை அவர் கண்டிருக்கிறார்.

இருந்தாற்போல துவைனத்திற்கு ஓர் ஆசை ஏற்பட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று கச்சேரி விடுமுறை நாள். மெதுவாக வீதிக்கு வந்தார். வீதி ஆழ்ந்த அமைதியில் கிடந்தது. தூரத்தில் பாரவண்டிகள் செல்லும் கடமுட சத்தம். எவருமில்லை. குட்டுக்காய் மரத்தடிக்கு வந்தார். நிலத்தில் விழுந்து கிடந்த குட்டுக்காய் ஒன்றினை எடுத்து. வலக்கரத்தால் தண்டினைப் பற்றி தன் தலையில் 'ஙொங்' என்று அடித்துப்பார்த்தார். அப்பா என்ன வலி?

இருந்தாப்போல களுக்கெனச் சிரிப்பொலி எழுந்தது. திரும்பிப் பார்த்தார். அவருடைய மனைவி இசெபெல்லா சிரித்தபடி நின்றிருந்தாள். அவரை வெட்கம் கவ்விக் கொண்டது.

"என்ன செய்யிறியள்? குழந்தைகள் போல.."

குடடுக்காய் மரத்தினைப் பார்க்கும்போது அன்றைய சம்பவம் நினைவுக்கு வருகின்றது. எனினும் இன்று அவர் மனதினை ஆழப் பாதித்த சம்பவம் ஒன்றிருந்தது.

**1878,** கார்த்திகை 21 ஆந் திகதி. இன்று காலை தனது ஐம்பத்தேழாவது வயதில் ஆறுமுகநாவலர் காலமாகிவிட்டார் என்ற செய்தி அவரைச் சூழ்ந்து கொண்டுள்ளது. மனதினை வேதனையில் ஆழ்த்தியது. இத்தனைக்கும் ஆறுமுகநாவலர் அவர் நட்புக்குரியவரல்லர். அவரது நிர்வாகத்திற்குப் பெரும் சவாலாக விளங்கியவர். அவருக்கெதிராக எத்தனை பெட்டிசங்களைக் கவனர்களுக்கு எழுதியிருப்பார்? எதையும் மறக்கலாம். ஆனால் ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகம் குறித்து அவர் கூறியவை சாதாரணமானவையா?

" இக்கச்சேரி நிர்வாக நிலைக்களமல்ல. இங்கு நீதியும் நியாயமுமில்லை. இது கள்வரின் ஆடசிக்குகை." என்றார். தள்ளுகதவைத் திறந்தபடி சிவப்புத்தொப்பி அணிந்த பியோன் பவ்வியமாக நுழைந்தான்.

'துரை அவர்களே வலிகாமம் மேற்கு மணியக்காரர் இரகுநாதமுதலியாரும் அவருடன் மற்றும் நால்வரும் தங்கள் தரிசனத்திற்கு வந்தள்ளனர்.'

"வேறு யார்?"

" கச்சேரி முதலியார் சவிரிமுத்தப்பிள்ளை, யாழ்ப்பாண தலைமைப்பீட மணியக்காரர் கணபதிப்பிள்ளை, பண்டசாலைப் பொறுப்பாளர் குட்டித்தம்பி, சிறுதெருக்களின் மேற்பார்வையாளர் சந்திரசேகரம்..." என்றான் பியோன்.

"நிற்கச் சொல். கூப்பிடுகிறேன்" என்ற துவைனம் சிந்தனையிலாழ்ந்தார். அவர்கள் அவரின் முக்கியமான ஆலோசகர்கள்.

நாவலர் சொல்லியவாறு, "அரசாங்க அதிபர் தமக்குப் பிரியமான சில கீழதிகாரிகளின் சொல்லையே கேட்டு நடக்கிறார். இப்பிரியமான கீழதிகாரிகளாகிய சூத்திரதாரிகளுக்கு ஏற்றமுறையில் அரசாங்க அதிபராகிய பாவை ஆடிவருகிறது." தான் நடக்கின்றேனோ என துவைனம் எண்ணத் தலைப்பட்டார். நாவலர் குறிப்பிட்ட அச்சூத்திரதாரிகள் அவரைக் காண வந்திருக்கிறார்கள். தன்னை ஒரு பொப்பெற (பாவை) என அவ்வேளை நாவலர் குறிப்பிட்டபோது ஏற்பட்ட கோபம் இப்பொழுது அவர் மரணத்தின் பின் கழிவிரக்கமாகப் பட்டது. அவர் சொன்னதில் நியாயம் இருக்கிறது. தன்னுடைய நிர்வாகத்தில் வலிகாமம் மேற்கு மணியக்காரன் ரகுநாதமுதலியாரின் செல்வாக்கும் யாழ்ப்பாணத் தலைமைப்பீட மணியக்காரன் கணபதிப்பிள்ளையின் செல்வாக்கும் அதிகமென்பது இன்று துவைனத்திற்குப் புரிகிறது. சுதேசியப்பிரபுக்களின் ஆதரவின்றி ஆங்கிலேயர் இங்கு நிர்வாகம் செய்ய முடியாதென அவர் எண்ணினாரோ?

இன்று கச்சேரி தலைமைப்பீட மணியக்காரனாக விளங்கும் கணபதிப்பிள்ளை உண்மையில் அப்பதவிக்கு உரியவரல்லர். அவர் மன்னார் வாசி. அவருடைய மகன் யாழ்ப்பாணத்தில் வலிகாகம் மேற்கு மணியக்காரன் ரகுநாதனின் மகளைக் கலியாணம் கட்டியதால் யாழ்ப்பாணியாகிவிடுவாரா? அப்பதவி காலியானபோது தகுதியான பலர் அப்பதவிக்கு விண்ணப்பித்தார்கள். அவற்றை உதாசினம் செய்து மன்னார் கணபதிப்பிள்ளையை மணியக்காரனாக நியமிக்க ரகுநாதமுதலியாரின் நச்சரிப்புக் காரணமாகிவிட்டது. நாவலர் சொன்னதுபோல அவர் தவறிழைத்துத் தான் விட்டார்.

சிவப்புத் தொப்பி தள்ளுகதவினைத் திறந்து எட்டிப்பார்த்தது.

"அவர்களை வரச்சொல்.."

நால்வரும் வெகு பணிவாகவும் அதேவேளை ஆரவாரத்தோடும் உள் நுழைந்தனர். ரகுநாதமுதலியார் சந்தோசத்துடன் சொன்னார்: "ஒரு குட் நியூஸ் துரை அவர்களே..நமது

நிர்வாகத்திற்குபபெரும் இடைஞ்சலாகப் பெட்டிசம் எழுதிக் கொண் டிருந்த நல்லூர் ஆறுமுகம் செத்துப்போய்விட்டான். பிரச்சினை ஓழிந்தது..''

துவைனம் அவரை ஏறிட்டுப்பார்த்தார்.

தலைமைப்பீட மணியக்காரர் கணபதிப்பிள்ளை முகமலர்ச்சியுடன், ''கச்சேரி நிர்வாகம் பற்றியும் துரை அவர்கள் பற்றியும் கிறிகறி கவனருக்கு முதலிலும் ஜேம்ஸ் லோங்டன் கவனருக்குப் பின்னரும் விளாவாரியாக உங்கள் மீது இருபத்தொரு குற்றச்சாட்டுகளை அபாண்டமாகச் சுமத்தினார்.. மறந்திட்டியளா?'' என்றார்.

''தேர்வு வைக்காமலேயே உடையார், விதானையார் முதலிய சுதேசத் தலைவலர்களை நீங்கள் நியமித்தீர்களாம். கரையூரில் பேதி நோய் பரவியபோது அங்குள்ள வீடுகளையும் வேலிகளையும் துணிமணிகளையும் தீயிட்டுக் கொளுத்தினீர்களாம். ஏல்லாரையும் அம்மை ஆஸ்பத்தரிக்குக் கொண்டு போனீர்களாம். வாந்தி பேதி பரவியதற்குக் காரணம் உங்கள் நிர்வாக அலட்சியம் தானாம்'' என்றார் குட்டித்தம்பி.

''தீவுப்பகுதிகளுக்குரிய மணியக்காரன் செத்தபோது புதிதாக ஒருவரை நியமிக்காமல் வலிகாமம் மேற்கு மணியக்காரர் ரகுநாத முதலியாரையே அதற்கும் நியமித்தியளாம். என்பது ஆறுமுகத்தின் குற்றச்சாட்டு. இனிப் பிரச்சினை இல்லை. தொல்லை தீர்ந்தது''

துவைனம்துரை அவர்களை நிமிர்ந்து பார்த்தார். விழிகளில் கவலையும் வெறுப்பும் தெறித்தது.

''நாவலர் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் என்ன பிழை இருக்கிறது முதலியார். உங்களை நம்பி நான் மோசம் போனேன் போலப் படுகிறது. பஞ்சம் வந்தபோது மக்களுக்கு விதைப்பதற்கு விநியோகிக்குமாறு உங்களிடம் வழங்கிய விதை நெல்லில் எவ்வளவு

மக்களுக்கிடைத்தது.? நீங்கள் நியமித்த உடையார்களின் உறவினர்களை நொத்தாரிசுகளாக நியமித்திருக்கிறியள். காணி உரிமைகளை வழங்குவதிலும் உறுதிகள் தயாரிப்பதிலும் என்னென்ன மோசடிகள் செய்தியளோ?" என்று துவைனம் கோபத்துடன். கத்தினார்.

மணியக்காரர்கள் திகைத்துவிட்டனர்.

"உங்களுடைய அனுமதி அங்கீகாரத்துடன் தான் செய்தம் துரை.."

"எல்லாரும் சேர்ந்து நிர்வாகத்தைத் தப்பான வழியில் நடத்திவிட்டோம். அதைத் தான் ஆறுமுகநாவலன் சுட்டிக்காட்டினார்."

"எங்களுக்கு அவர் செய்த அவமரியாதைகளை மறந்திட்டியள் துரை"

"அவர் ஓர் ஒழுக்கமான பிரமச்சாரி. வசன நடை கைவந்த வல்லார். தானம் எல்லாவற்றிலும் வித்தியாதானமே மேல் என் நம்பிய பெருமகன். மதச்சீர்திருத்தவாதி. சைவத்தையும் தமிழையும் கண்களாக மதித்தவர்." என்றார் துவைனம்.

அவ்விடத்தில் வியப்பு.

'ஆறுமுகம் அவற்றோடு நின்றிருக்கலாம் சேர். உங்கள் நிர்வாகத்தில் தலையிட்டது தான் பிழை."

"அதில ஒரு பிழையுமில்லை. அவரைப்போன்ற ஒருவர் அப்படியிருக்காவிட்டால் தான் பிழை. "என்றார் துவைனம்.

இவருக்கு இன்று என்ன பிடித்துவிட்டது?

"ஆறுமுகம் உங்களுக்கு அளித்த தீர்ப்பை மறந்திட்டியளா துரை? அநீதி,பொய்,கோள் முதலியன கற்பிக்கும் கல்லூரியாகிய

கச்சேரிக்குத் தலைவராகிய துவைனம்துரை செய்த குற்றங்களை விசாரித்து நீதி வழங்கில் அவருக்குப் பதவி நீக்கமும் உடற்றண்டமும் கிடைக்கும் என்றார். அதற்குப்பிறகுமா இப்ப அவருக்காக பேசுகிறியள்?" என்றார் குட்டித்தம்பி.

துவைனம் தலைக் குனிந்து கொண்டார்..

"நான் முடிவு செய்துவிட்டேன். முதலியார். இன்றைக்கு கச்சேரிக்கு விடுமுறை நாளாகப் பிரகடணப்படுத்துகிறேன். அனைத்து அரசாங்க அலுவலகங்களும் மூடப்படட்டும். எல்லாரும் ஆறுமுகநாவலரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளட்டும். "

அவர்களால் நம்பமுடிவில்லை.

"உண்மையாகச் சொல்லிறியளா?"

"யேஸ்...சுற்றறிக்கை அனுப்புங்கோ..நீங்களும் போங்கோ.."

அவர்கள் வெளியேறிய பின்னர் வெகுநேரம் துவைனம் அப்படியே அமர்ந்திருந்தார். நாவலரின் எண்ணமே மனதில் எழுந்து கொண்டிருந்தது. எவ்வளவு பெரிய மனிதர்?

ஜன்னலுக்கு வெளியே பார்த்தபோது குட்டுக்காய் மரம் தெரிகிறது. எழுந்து மரத்தடிக்கு வந்தார்.

நிலத்தில் நீண்ட தண்டுகளுடன் குட்டுகாய்கள் விழுந்து கிடந்தன. தன்னையறியாமல் ஒரு குட்டுக்காயை எடுத்தார். அதைக் கையில் வைத்துக்கொண்டு தயங்கி நின்றார். தலையில் அடித்தால் வலிக்குமோ? அதனை வீசிவிட்டு நன்கு கனிந்த இன்னொன்றினை எடுத்துக்கொண்டார்.

'ஆறுமுகம் என்னை மன்னியும்' என்றபடி தண்டில் பற்றி குட்டுக்காயைப் பலமாகத் தலையில் அடித்தார். குட்டுக்காய் 'நொங்' கென்று தலையில் பட்டு வலிக்க வைக்கவில்லை. தலையில் பட்டதும்

உடைந்து இதழிதலாகச் சிந்தியது. பூமாரியாக உலிர்ந்தது.

(குறிப்பு- யாழ்ப்பாணம் புதிய கச்சேரி வளாகத்தில் குட்டுகாய் மரம் ஒன்று இப்பொழுதுமுள்ளது. இது ஓர் அற்புதமான மரம். இலங்கையில் வெறெங்குமிருப்பதாகத் தெரியவில்லை.)

- ***வெளிச்சம் 2006***

# வேலிப்பொட்டு

காரைநகரில் பஸ்சிலிருந்து இறங்கிய என்னை நண்பன் சுரேந்திரன் எதிர்கொண்டு வரவேற்றான். இளம் வயதில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் நாங்கள். யாழ்ப்பாணத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றி வந்தான். அந்தக்காலத்தில் 'போஸ்ரல் கிளறிக்கல்' எனப் புறம்பான ஒரு பரீட்சை தபால் திணைக்களச்சேவைக்கென இருந்தது. அப்பரீட்சையில் சித்தியடைந்து பணியை ஏற்றதால் எங்களுடன் திறமையாகக் கல்வி கற்ற சுரேந்திரன், கனகலிங்கம், மார்க்கண்டு ஆகிய மூவரையும் இலங்கைப் பல்கலைக்கழகம் இழந்தது. 'ஜெனரல் கிளறிக்கலில்' சித்தியடைந்ததால் வைத்திலிங் கம் என்றொரு திறமைசாலியையும் அது இழக்க நேர்ந்தது. இந்தக் காலம் மாதிரி பல்கலைக்கழகத்தையும் ஏமாற்றி அங்கு உள்வாரி மாணவராகக்கல்வி கற்றபடி, உத்தியோகம் பார்க்கிற திணைக்களத்தையும் ஏமாற்றி சம்பளத்தோடு பட்டம் பெறும் வாய்ப்பு அன்றிருக்கவில்லை. இருந்திருந்தால் முன் குறித்த நால்வரும் பட்டதாரிகளாக இருந்திருப்பார்கள்.

சுரேந்திரன் என்னைப் பார்த்துச் சிரித்தான். "போவம் வா." என்றபடி இறங்கிய இடத்தில் வீதியோரம் இருந்த ஒரு படலையைத் திறந்து உள் சென்றான். நான் தொடர்ந்தேன்.

"இது தான் உன்ர வீடாடா?"

"இல்லையடா. கனதூரம் போகவேணும். வளவுகளுக்குள்ளால பொட்டுகளூடாகப் போனால் கிட்ட."

நான் தொடர்ந்தேன். நாங்கள் முதலில் நுழைந்த வளவுக்காரர் எங்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தம்வேலைகளில் ஈடுபட்டனர். முற்றத்து நாய் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டது. அந்தக் காணியின் அடிவளவை நோக்கி சுரேந்திரன் நடந்தான். வேலியில் ஒருவர் குனிந்து நுழைந்து அப்பால் வெளிப்படக் கூடிய அளவிற்கு ஒரு பொட்டு இருந்தது. அதனுடாக இருவரும் புகுந்தோம்.

கிணற்றடியில் ஒரு நடுத்தர வயதான பெண் குறுக்குக்கட்டுடன் குளித்துக் கொண்டிருந்தாள். அவள் எங்களைப் பார்த்துப் பதட்டமடையவில்லை.

"என்ன தம்பி இண்டைக்கு வேலையில்லையே?"

'இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை அக்கா. விடுமுறை.."

"ஓமோம். ஊதார் புதாள்?"

"இவன் என்ர பிரெண்ட அக்கா. யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறான்"

நாங்கள் இவ்வாறு வளவுகளுக்கூடாக வேலிகளில் காணப்பட்ட பொட்டுகள், கண்டாயங்கள் என்பனவற்றின் ஊடாகப் பயணப்பட்டு சுரேந்திரன் வீட்டு வளவிற்குள் புகுந்தோம். பொட்டுகளை இணைத்து ஒற்றையடி வழித்தடமே உருவாகியிருந்தது.

"ரோட்டால வாறதெண்டால் ஒரு மணி பிடிக்கும். பத்து நிமிசத்தில இப்ப வந்திட்டம்." சுரேந்திரன் சிரித்தபடி.

"முன்னர் யாழ்ப்பாணத்திலும் இப்படியான பொட்டுக்கள் இருந்தன. எங்கட சமூகம் எப்படி அன்னியோன்யமான உறவுகளைப்

பேணின என்பதற்கு பொட்டுகள் நல்ல உதாரணம். என்னுடைய அக்காமார் தங்கட சொந்தக்காரர் வீடுகளுக்கு ரோட்டுகளால ஒழுங்கைகளால போனதில்லை. ஒரு பொட்டால புகுந்து ஊரையே சுற்றி வந்திருக்கினம். இப்ப காலம் மாறிப்போச்சுது. உறவுகளின் பிடிமானம் அற்றுப் போய்விட்டது. பொட்டுகள் அடைத்து மூடப்பட்டுவிட்டன.'' என்றேன் கவலையோடு.

எனக்குத் தெரியத்தக்கதாக எனது ஊரில் பொட்டுக்கள் பல இணைப்புக்களாக விளங்கியுள்ளன. வீதியில் ஏறாமலேயே எங்கும் போய் வர முடிந்தது. நான் பத்தாம் வகுப்புப் படிக்கும் வரை எங்கள் வீட்டிற்கும் பக்கத்து அம்மான் வீட்டிற்கும் இடையில் முதலில் ஒரு பொட்டும் பின்னர் அது பெரியதொரு கண்டாயமாகவும் இருந்தது. அம்மான்மகளைக் கட்டிக்கொள்ள என் அண்ணன் மறுத்ததால் இருகுடும்பங்களுக்கும் சச்சரவு கிளம்பிப் பின்னர் பெரும் சண்டையாகிவிட எங்கள் ஐயா ஒரு நாள் எவர் தடுத்தும் கேட்காமல் பொட்டைக் கிடுகு வைத்து மறித்தடைத்துவிட்டார். அப்படி அடைத்தும் வடக்குப்பக்க சின்னம்மா வளவுப்பொட்டூடாக அம்மாவுக்கும் மாமிக்கும் இடையில் பேச்சு வாக்கு கொடுக்கல் வாங்கல் இருந்ததை அம்மானும் ஐயாவும் பல வருடங்களாக அறிந்திருக்கவில்லை.

பொட்டு அடைபட்டு இரு குடும்பங்களும் பிரிந்ததும் எங்கள் அம்மம்மா தனித்திருந்து அழுது புலம்பியது எனக்கு இன்னமும் நினைவிருக்குது.

“அழாதை ஆச்சி. நான் உன்னை மாமி வீட்டிற்கு ரோட்டால அழைச்சுப்போறன்.” என்று நான் எவ்வளவு எடுத்துக் கூறியும் அம்மம்மா சமாதானப்படவில்லை.

“உறவுகள் அறுந்தால் தான் யாழ்ப்பாணத்தான் பொட்டுகளை அடைப்பான். உனக்கு அது எங்க தெரியப்போகுது. நீ சின்னப்பிள்ளை. உன் கொம்மாவை உன் கொப்பர் பெண் பாத்தது எப்படித் தெரியுமே?”

"எப்படி?"

"தரகர் கந்தையா வீட்டிற்கு ஊர்ப்பொம்பிளைப் பிள்ளையள் பின்னேரங்களில தாயம் போட்டு விளையாடப்போவது வழக்கம். அது பெரியவளவு. எட்டுக்கோடு விளையாட ஊர்ப்பிள்ளைகள் வரும். ஐயனார்கோவிலடிப்பிள்ளையளும் வருவினமெண்டால் பாரன்."

"அதெப்படி ஆச்ச? நடுவில தார்றோட்டு.."

"தங்கட வீடுகளில இருந்து வருவினம். பொட்டுகளால வந்து றோட்டடியில அங்கால இங்கால பாத்திட்டு கண்ணில் எத்துப்பட்ட வளவுப்படலையைத்திறந்து புகுந்திடுவனம். பிறகென்ன..? ஆ என்னசொன்னன்..கொம்மாவைக் கொப்பர் பெண் பாத்த கதை. தாயம் போட கொம்மா கந்தையா வீட்டிற்குப் போக..அங்க கொப்பரைத் தரகர் அழைச்சு வைத்திருந்தார். 'உந்தச் சிவப்பிதான் ஆள்' என்று காட்டியிருக்கிறார். கொம்மாவுக்கு அசுமாத்தா விசயம் விளங்கிப் போச்சது. பொட்டுகளால புகுந்து ஓடி வந்திட்டா. முகமெல்லாம் வியர்த்து ஒழுகுது. பேச முடியவில்லை."

"பிறகு?"

"பிறகென்ன..உன்ர கோத்தை பின்னேரங்களில பொட்டுகளூடாகப் போறதும் உன்ர கொப்பர் ஏதாவது சாட்டோட கந்தையர் வீட்டிற்கு வாறதும்..ரெண்டு பேருக்கும் கட்டி வைச்சம்.."

"இந்தப் பொட்டுகளுக்குப் பின்னால பெரிய கதையள் இருக்குது அம்மா.." என்று நான் அம்மாவிடம் ஒருநாள் கேட்டேன்.

"அம்மம்மாவுக்கு என்ன வேலை. இதுகளை உங்களுக்குச் சொல்லிறதைவிட.." என்று அம்மா வெட்கப்பட்டார்.

ஆச்சிக்கு அம்மான் வீட்டுடனான தொடர்பு பொட்டு அடைபட்டதால் துண்டிக்கப்பட்டுப்போனதில் மிகுந்த கவலை.

"இவங்கள் ஒவ்வொருத்தனும் பிடிச்சுராவிகள். விட்டுக்கொடுக்க மாட்டான்கள். அடைச்ச பொட்டை ஒரு நாளைக்கு உன்ர அம்மான் பிய்த்தெறிவான் பார்.."

"எப்ப?"

"நான் மண்டையைப்போடுற அண்டைக்கு " என ஆச்சி திடமாகக் கூறியபடி ஒப்பாரியைக்கேட்ட அம்மான் பொட்டைப் பிய்த்தெறிந்தபடி ஓடிவந்தார். பிரிக்கப்பட்ட பொட்டு பின்னர் வெகு காலமாக அடைபடவில்லை. மச்சாளைக் கட்டிய கொழும்புக்காரன் 'அறுக்கையில்லை'என்று மதில் கட்டியபோது தான் உறவோடு அடைபட்டது.

"என்னடா பேசாமல் இருக்கிறாய்?"என்று கேட்டான் சுரேந்திரன்.

"இந்தப் பொட்டுகளை எண்ணிக்கொண்டன்.."

"மெய்யா யாழ்ப்பாணத்திற்கென இருக்கின்ற குறிகாட்டிகளில-ஐடன்டிட்டியில இந்தப்பொட்டுகளும் முக்கியமானவை. எங்கட சமூக உறவின் நெருக்கத்தை அவை பிரதி பலித்தன. ரவுன் பக்கங்களில இவை அருகிவிட்டாலும் கிராமப் புறங்களில் அரிதாக இருக்கின்றது. முன்னர்போல அதிக வளவுகளை இணைக்காவிட்டாலும் ஒன்றிரண்டு வளவுகளையாவது இணைக்கின்றன. இந்தப் பொட்டுகள் பற்றி பல சங்கதிகள் ஊரில இருக்குது.."

"எங்கட ஊரில ஆடுகால் மணியத்தார் பொட்டுப் புகுந்ததால அவதிப்பட்ட கதை ஒன்றுண்டு."

"சொல்லடா.."

“ஆடுகால் மணியத்தாருக்கு ஊரில ஒரு தொடுப்பு இருந்தது..அவற்றை வீட்டிலிருந்து ஏழாவது வீடு…நடுச்சாமத்தில மனிசன் பொட்டுகளால அங்க போய் வருவார். மணியத்தாரின்ர மனிசி தன் தமையனிடம் இதைச்சொல்லி அழுதாள். அந்தப்பாவி மனிசனைத் தடுக்க முடியவில்லை. அண்ணை. நீ தான் ஒரு வழி பண்ணவேண்டும்.”

ஆடுகால் மணியம் கடக்கிற பொட்டுகளில் ஒன்று அவருடைய மனைவியின் தமையன் வீட்டில் இருந்தது.

“ஆர் இந்த நேரத்தில பொட்டால போறது?” என்று கேட்டால் “அது நான்” என்றபடி குரல் தந்துவிட்டுப் போய் விடுவார்கள். ஓரிரு முறை மணியத்தாரும் குரல் தந்து சமாளித்திருக்கிறார். போகிற வருகிறவர்களிடம் காரணம் கேட்க மாட்டார்கள்.

அமாவாசை தினமொன்றில் ஆடுகால் மணியம் பொட்டால் தொடுப்பு வீட்டிற்குப் போனதைக் கண்ட மச்சான்காரன் தன் வீட்டில் எப்பவும் கட்டி நிற்கிற கடியன் கறுவல் நாயை பொட்டின் பக்கத்துக் கதியாலில் கட்டி விட்டார். அதுவும் பொட்டின் வாசலில் நிலத்தைக் கிண்டி குளிருண்டாக்கிக் கொண்டு படுத்துவிட்டது. கும்மிருட்டில் தொடுப்பு வீட்டிலிருந்து குசியாகத் திரும்பி வந்த ஆடுகால் மணியம் பொட்டுக்குள் நுழைவதற்காகக் குனிந்து கைகளை படுத்திருந்த நாயின் மீது ஊன்ற அது திடுக்கிட்டு மணியத்தாரைக் கவ்வியது. அதற்கு அகப்பட்டது மணியத்தாரின் மூக்குத்தான்.

ஆடுகால் அலறிய அலறலில் ஊரே விழித்துக் கொண்டது.

அரிக்கன் லாந்தரோடு மச்சான்காரன் ஓடிவந்தான்.

‘கவ்வ வேண்டிய இடத்தில கவ்வாது விட்டிட்டுது.”என்று தனக்குள் மச்சான் முணுமுணுத்துக் கொண்டான். ‘மூக்குப் போனாலும் பரவாயில்லை மனிசன் கிடைச்சாரே’ என்று மணியத்தார் மனைவி திருப்திப் பட்டுக்கொண்டாள்.

சுரேந்திரன் பெரும் குரலில் சிரித்தான். அடுக்களைக்குள்ளிருந்த மனைவி எட்டிப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லை அப்பா.."என்றான் சுரேந்திரன்.

"ஒண்டுமில்லாததுக்கே சிரிக்கிறியள்?"

சுரேந்திரன் சொன்னான்:" எங்க ஊரில ஒரு சோக சம்பவம் நடந்தது. பிராந்துக் கிழவியின் வளவு பென்னம் பெரியது. புளிய மரங்கள்,இலுப்பை மரங்கள் எனச் சோலையாக இருக்கும். புளியம் பழங்கள் சொரிகின்ற காலத்தில் அவற்றினைப் பொறுக்குவதற்கும் இலுப்பைப்பழம் பொறுக்குவதற்கும் அயல் அட்டையில உள்ள சிலர் விடியமுன்னம் பொட்டுகளுக்குள்ளால வந்திடுவினம். பொட்டுக்களை படலையிட்டு கட்டிவிட்டும் பயனில்லை. கிழவிக்குப் பொட்டுகளை அடைக்க விருப்பமில்லை. அதே நேரம் தன் ஒரே வருமானத்தை இழக்கவும் விருப்பமில்லை. ஒரு நாள் நாலாம் சாமம் ஓலைப் பெட்டியையும் தூக்கிக் கொண்டு சுப்பரப்பா கிழவியின் வளவிற்குள் பொட்டுக்குள்ளால புகுந்தார். புளியமரத்தடியில் வெள்ளைச்சேலை அணிந்த உயரமான ஒரு உருவம் ஆடிக்கொண்டு நின்றிருந்தது. சுப்பரப்பாவிற்கு புளியமரத்து முனிகளின் கதைகள் நினைவு வந்தன. ஆ என்றலறியபடி நிலத்தில் சரிந்தார். அவ்வளவு தான். ஓடி வந்த பிராந்துக் கிழவி அது நானடா என்று எவ்வளவு கூறியும் பயனில்லை. கள்ளரைப் பயமுறுத்த எண்ணிய கிழவியின் திட்டம் முதல் நாளே சோகத்தில் முடிந்தது.பொறுக்கிறவை பொறுக்கிக் கொண்டுபோகட்டும் என்று கிழவி பாராமுகமாக இருந்தாலும் சுப்பரப்பாவின் சாவிற்குப் பிறகு ஒருத்தரும் அந்த வளவுக்க வரவில்லை. புளியமரத்து முனியோடு சுப்பரப்பாவின் ஆவியும் அங்கு உலவுவதாக வதந்தி பரவிவிட்டது. "

"சாப்பிட வாருங்கள்"என்றழைத்தபடி என் நண்பனின் மனைவி வந்தாள்.

சாப்பிடும்போதும் பொட்டுகள் பற்றியே பேசிக்கொண்டோம்.

"பொட்டுகள் ஏன் குறைந்து வருகின்றன?"

"பொட்டுகளுக்குள்ளால சயிக்கில்கள் ஓட முடியாது."

"இப்ப ரோட்டுகள் வசதியாக அமைச்சிட்டினம்."

"பெண்புரசுகள் இப்ப வெளியில் சுதந்திரமாகத் திரிய முடிகிறது."

"அந்தக்காலத்தில பெரும்பாலும் எல்லாரும் அலுவல்கள் முடிஞ்சால் வீட்டிற்குள் அடங்கிவிடுவர். இப்ப பெண்புரசு ஆண்பிள்ளைகள் எல்லாம் ரோட்டில தானே?"

"இவையெல்லாம் காரணங்கள் என்றாலும் யாழ்ப்பாணத்தானின் விரிந்திருந்த மனம் இன்று ஒடுங்கிச் சுருங்கிச் சுயநலத்தோடு குறுகிவிட்டது தான். காரணம். நாங்கள் நாங்களாகவில்லை."

"இந்தியன் ஆமியும் எங்கட ஆமியும் யாழ்ப்பாணத்தில வைச்ச பொட்டுகளையும் கவனிக்க வேணும்." என்றாள் சுரேந்திரனின் மனைவி.

"நீர் இப்ப எந்தப் பொட்டைச் சொல்கிறீர்?"

"இரண்டையும் தான்."

வளவு வேலிகளில் பொட்டு வைத்து வந்து நெற்றிகளில் துப்பாக்கிப் பொட்டு வைத்த கதை அது.

*- வெளிச்சம் 2005*

# சேதுபந்தனம்

**கி.பி.2050.** ஓர் அதிகாலை.

மார்கழி மாதக்குளிருக்கு இதமாக கட்டிலில் முடங்கிக்கிடந்த இளவழகனார் தான் படுத்திருந்த கட்டில் ஓர் இமைப்பொழுது அசைந்து நிலைத்ததை உணர்ந்தார். சுவரில் மாட்டியிருந்த படங்களும் தமது நிலை பிறழ்ந்து சாய்ந்திருப்பது தெரிந்தது.

அவரை வயோதிபத்தினை மீறிய வியப்பு மேலோங்கியது.

'என்ன நடந்திருக்கும்?'

வீட்டைவிட்டு வெளியே வந்தார்.

அவருடைய வீடு கிழக்குப் பார்த்தமைந்திருந்தது. வெளிக்கதவைத் திறந்து கொண்டு முற்றத்தில் கால்களைப் பதிக்கும்போது கிழக்கு வானில் சூரியன் கதிர்களைப் பரப்பியபடி எழுந்துகொண்டிருப்பது மங்கலாகத் தெரியும் தரிசனமாகும். சீமேந்து ஆலையின் தூசுப்படிவுகள் மார்கழிமாதப் பனிப்புகாரோடு சேர்ந்து சூரியகதிர்களின் பூரணமான நிலத்தழுவலுக்குத் தடைவிதித்து வருகின்றன.

நவீனதொழில்நுட்ப முன்னேற்றம் உலகினைச் சுருக்கிவிட்ட அதே வேளை இயற்கைச் சூழலின் தூய்மையைக் கெடுத்து வருகின்றமை தவிர்க்கப்படவில்லை. ஓசோன் துளையின் விளைவான பயங்கரம் ஈழத்தின் வடமேற்குத் தீவுகளில் நான்கினைக் கடலிற்குள் ஆழ்த்திவிட்டது. கடல் நீர் ஒன்று தசம் மூன்றிரண்டு ஆறு மீற்றர்களுக்கு ஏறி மூடி நிற்கின்றது. நாகபூஷணி அம்மன் சமுத்திரநீரினுள் அமர்ந்திருக்க நேர்ந்துவிட்டது.

இன்று நயினாதீவின் கரையைச் சுற்றி இரண்டு மீற்றர் உயரத்தில் அணைய அமைக்கின்ற முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. காலங்கடந்த சிந்தனை.

இளவழகனார் கிழக்குவானச்சோதியைச் சற்றுநேரம் பார்த்துவிட்டு ஹோலுக்குத் திரும்பியபோது ரிவியோபோனில் கனடாவின் ரொறன்ரோ நகரத்தில் வாழும் பேத்தி லிலோ தெரிந்தாள். 79பாகை 36 கலை 14 விகலை கிழக்கு நெடுங்கோட்டுச் சுற்றில் பூமியை வலம் வரும் கிட்டு சற்றில்லைற் தொடர்பாடலைத் தெளிவாக்கியுள்ளது. அவர் உடனடியாக ரிவியோபோனின் பட்டனைத்தட்டி தன்னை உருத்தெரிநிலைக்கு நிறுத்திக்கொண்டார்.

"ஹலோ கிராண்ட் பா.." லிலோ கன்னங்களில் குழிவிழச் சிரித்தாள்.:"இப்போது தான் எழுந்தீர்களா?"

"ஓமடா ராசாத்தி.."என்று அவர் பேத்தியைப் பார்த்துச் சிரித்தார்: "ஏன்ரா நேற்று என்னோடு பேசவில்லை?"

"பிசி கிராண்ட் பா..ஒரு சங்கதி..பாக்கு நீரிணையில் இந்து சமுத்திரத்தில் 80 டிகிரி கிழக்கு மெரிடியனில் இன்று அதிகாலை மெல்லிய புவிநடுக்கம் ஏற்பட்டதாமே? தாப்பிரபோன் சனலில் சற்று முன் அறிவித்தார்கள். உண்மையா கிராண்ட் பா?"

இளவழகனார் சற்றுநேரம் அப்படியே உறைந்து போய் நின்றுவிட்டார்.

“கிராண்ட் பா..என்ன? :திரையில் பேத்தியின் விழிகள் வியப்பினைக் காட்டின.

“புவிநடுக்கமா?”என்று தயங்கினார். பின்னர், “அதுவாகத் தான் இருக்கும். என்ன காரணமாம்:.”

“தெரியவில்லை..கிராண்ட்பா..பை.பை..” என்றபடி அவள் திரையில் மறைந்தாள். அவள் இப்படித்தான். எப்போது பேசுவாள் எப்போது மறைவாள் என்றுகூறமுடியாது. வாயாடி. குறும்புக்காரி. மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் பெரியபிள்ளையானாள். ரிவியோ உருக்காட்டியில் பேத்தியின் சாமர்த்தியச் சடங்கினை முழுமையாக இங்கிருந்து பார்த்து ஆசீர்வதித்தார்.

## 2

தூத்துக்குடித் துறைமுகத்தின் நான்காவது கீழ்மாடியின் ஏர்கண்டிசன் அறை. வாசலில் சீ:ப் எக்சிகியூட்டிவ் மறைன் எஞ்சினியர் திலகவதி தயாளன், சி.ஈ.எம்.ஈ. என்ற அடக்கமான பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கிறது. அறையின் கணனி முன் அவள் அமர்ந்திருக்கிறாள். தூத்துக்குடிச் சூறாவளி அனர்த்தத்திற்கு ஈடு கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஏழுதட்டு மாடிக்கட்டிடம் தன் நான்கு தட்டுகளை மண்ணுள் புதைத்து நின்றது.

புதியதொரு பிரச்சினையின் அழுத்தம் தலையைப் பாரப்படுத்துகிறது. அப்படி நடந்திருக்குமா? நம்பமுடியவில்லை.

நடந்துவிட்டதே?

ஏதாவது தவறு நடந்துவிட்டதோ?

திட்டத்தை மீள ஒருதடவை பார்த்துவிடலாம்.

எ.்.ப். ஐ. ஈ.0003 குறியீட்டு இலக்க மைக்ரோடிஸ்கை எடுத்துக் கணணியிலிட, "பேசவாக..காட்டுவாக.."என்றது கணணி.

"பேசு.."என்றாள் அலுப்புடன் திலகவதி.

கணணி மௌனம் சாதித்தது.

"என்ன?"

"கட்டளை தவறுக" என்றது கண்ணி.

"பேசுக.."என்று திருத்திக்கொள்ள..

"திட்டப்பெயர் சேதுகால்வாய். அரபிக் கடலிலிருந்து வங்காளவிரிகுடாவை அடைவதற்கு ஸ்ரீலங்காத்தீவை வலம் வரும் கடற்பயணத்தைச் சுருக்கல். இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கின்ற பாக்குத்தொடுகடலில் ஆழமான ஒரு கால்வாய் அகழ்தல் மூலம் பாரிய கப்பல்களை அதனூடாகச் செல்ல வழிவகுத்தல். ஆதனால் தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் இடையிலான கடற்பயணம் 421 கடல்மைலாகக் குறையும்."

"ம்.."என்றாள் திலகவதி.

"வரலாறு: 1860 ஆம் ஆண்டு பிரிட்டானிய கடற்படைத்தளபதி ரெயிலர் சேதுகால்வாய்த்திட்டத்தை வகுத்தார். ஆனால் அது பற்றி ஆராய 1945 ல் தான் ஒரு குழு நியமிக்கப்பட்டது. நடைமுறைப்படவில்லை. 1955 ல் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் மீண்டும் சேதுகால்வாயின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதனால் 1963 ல் இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இதுசேர்த்துக் கொள்ளப்பட்டது. பின்னர் 1965ல் வீ சி. வெங்கடேஸ்வரன் தலைமையில் அதன்பின் 1981ல் இலட்சுமி நாராயணன் தலைமையில் கூடி..இறுதியாக 2040 ஆம் ஆண்டு

மார்ச் மாதம் 08 ஆந்திகதி தமிழ்நாடு அரசும் இலங்கை அரசும் இச்சேதுகால்வாயை அமைப்பதென முடிவெடுத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன."

"போதும் இனிக் கேட்பதற்கு மட்டும் தகவல் தருக."எனக்குறுக்கிட்டாள் திலகவதி.

"சரிக.."என்றது கணணி.

"சேதுகால்வாயின் இன்றைய நிலைக.."

"106.8 கி.மீ.நீளம்,1204.3 மீற்றர் அகலம், 219 மீற்றர் ஆழங்கொண்ட கால்வாயில் இன்று 90 சதவீதமான வேலைகள் நிறைவுற்றுள்ளது. இராமர் அணையின் கீழ்த்தளத்தில் காணப்படும் மூன்று பெரும் ஆழ்த்தீப்பாறைத் திணிவுகள் ஜி1, ஜி2, கே1 என்பன தகர்க்கின்ற வேலை நிகழ்கின்றது. ஆளணி விபரம் தேவையாக"

"வேண்டாம். நேற்று என்ன நடந்ததுக?"

"ஜி 1 ஆழ்த்தீப்பாறை தகர்க்கப்பட்டது. அதனால் 1. 20043 ரிச்சார்ட்ஸ்கேலில் புவிநடுக்கம் அவதானிக்கப்பட்டதுக. "

"சாத்தியமாக?"

"தெரியாதுக."

"இந்தியன் துணைக்கண்டமும் இலங்கையும் இந்தியன் ரெக்ரோனிக் பிளேற்றில் உள்ளனக."

"தெரியும்க."

"புவியோட்டுத் தடிப்பு பாக்குத் தொடுகடலில் எவ்வளவுக?"

"எ.்.ப் ஐ ஈ 0004 அந்தரங்கம் குறியீட்டுத் தட்டைப்போடுக" என்ற கணணி மௌனித்துக்கொண்டது.

"பொறுக" என்றபடி திலகவதி களநிலைக் கணப்பியின் திரையை ஒளிபெறச் செய்தாள். பாக்குத் தொடுகடல் தெரிந்தது. பாரிய மண்வாரிக்கப்பல்கள் இராமர் அணையில் நின்றிருந்தன. தமிழ்நாட்டுச் சீதா செய்ம்மதி நுட்பமாக ஒளிப்படத் தகவல்களைத் தந்தது.

ஜி2 பாறை தகர்க்கப்பட்டு கே1 பாறை தகர்ப்புக்கு ஆயத்தங்கள் நிகழ்வதைக் காணமுடிந்தது. ஏதோ இனந்தெரியாத பயத்தின் வயப்பட்ட திலகவதி களநிலைக்கணிப்பியை அப்படியே இயங்கவிட்டுவிட்டு எ.்.ப்.ஐ.ஈ 0004 டிஸ்கைக்கணணியில் செலுத்தினாள். திரையில் ஒளிச்செய்தி: " இரகசியமானது. பாக்குத் தொடுகடலில் சேதுகால்வாய் அமையுமிடத்து கற்கோளத்தடிப்பு . 6.23 கி.மீ.. மான்ரில் பாகு சீமா- திடமன்று. புவிநடுக்கம் தகர்ப்பின்போது ஏற்பட வாய்ப்புண்டுக."

"மைகோட்."என்றாள் அவள்: "இது பற்றி முன்னர் ஏன் தெரிவிக்கவில்லைக?"

"அரசியல். "என்றது கணணி:" பேராசிரியர் இராமகிருஸ்ணனின் கூற்று இன்னமும் சங்கடமானதுக."

"கூறுக.."அவள் குரலில் பதற்றம்.

"பேராசிரியர் இராமகிருஸ்ணன் கூறுகிறார்:'சேதுகால்வாய் அகழ்தலின் எதிர் விளைவு ஒன்றுள்ளது. மான்ரில் படையில் மிதந்து கொண்டிருக்கும் இந்தியன் ரெக்ரோனிக் பிளேற்றின் துண்டிப்பு சில வேளைகளில் துணைக்கண்டத்தைப் பாதிக்காது விடினும் இலங்கைத் தீவை நிலைமாற்றிவிடும் சாத்தியமுள்ளதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முக்கியமாக கே1 தகர்ப்பில் வடக்குத் தெற்காக நீண்டமைந்திருக்கும் அழகிய இலங்கைத்தீவு மெதுவாக இடம் வலமாகச் சுழன்று நகர்ந்து மேற்குக்கிழக்காக மாறிவிடலாம். அதனால்..."

"நிறுத்துக." என்றபடி களநிலைக்கணிப்பியிடம் விரைந்தாள். கே1 பாறையைத் தகர்ப்பதை நிறுத்தவேண்டும். அவள் முடிவு செய்வதற்கு முன் கே1 பாறை தகர்ந்து வெடிப்பது தெரிகிறது.

கடல் அலைகள் பொங்கி எழுந்தன. பாக்குத் தொடுகடலில் நின்றிருந்த கப்பல்கள் சூறாவளியில் சிக்கித் தத்தளிப்பதுபோலத் தவித்தன.

அவள் அந்த அற்புதத்தைப் பார்த்தாள். இலங்கைத்தீவு ஒரு அரைச்சுற்றுச் சுழன்றது. யாழ்ப்பாணக்குடாநாடு மேற்காயும் தேவேந்திராமுனை தெற்காயும் அசைய..

"ஓ..மை கோட்.."எனத்திலகவதி அலறினாள்.

## 3

தூக்கம் கலைந்து எழுந்த இளவழகனார் முற்றத்திற்கு வந்தார். சூரியனைக் காணவில்லை.

சூரியன் தெற்கில் உதயமாவதைக் கண்டு திடுக்குற்றார்.

- ***கலைக்கதிர் நவம்பர் 1994***

# கிராமத்துள் புகுந்த மாயமனிதன்

அதிகாலையிலேயே அந்தச்செய்தி கிராமத்தில் புற்றீசல்போலப் பரவிவிட்டது. அந்தச்செய்தியை யார் தொடக்கினார்கள் என்பதும் அச்செய்தியிலுள்ள உண்மைபொய் எவ்வளவு என்பதும் எவருக்குந் தெரியவில்லை.

பெண்கள் மிகுந்த பயத்தோடு அச்செய்தியை அக்கம் பக்கம் பார்த்துப் பேசிக்கொண்டனர். ஆண்கள் பலர் வியப்போடும் சிறிது கலக்கத்தோடும் பேச, சிலர் வீறாப்புடன் "வரட்டும் பார்ப்போம்"என்றனர். குமருகளை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோருக்கு அந்தச்செய்தி அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.

"உது விசர்க்கதை."என்றார் தாடிக்கார தர்மலிங்கம்.

"என்ன பேயன் மாதிரிக்கதைக்கிறாய்? பக்கத்து ஊரில ராத்திரி நடந்த விசயம். அதுக்குப் பக்கத்து ஊரில முதல் நாள் நடந்தது. சிவசத்தியமா அந்த ரெண்டு குமர்ப்பிள்ளைகளையும் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காம். ஒண்டுக்கு இன்னமும் நினைவு திரும்பவில்லையாம்."என்று அடித்துப்பேசினார். பீடிக்கடை வைரமுத்தர்.

"இந்தக்காலத்தில உப்படியெல்லாம் நடக்குமோ?

என்னென்டு அவன் பூட்டியிருக்கிற வீட்டிற்குள்ள ஒருவருக்கும் தெரியாமல் வாறான். வந்து சரியாகப் பெண்களுக்குப் பக்கத்தில போய்த் தூக்கிப்போறான்?"

"அது தான் சங்கதி. அவன் ஒரு மந்திரவாதி. மாயமனிதன். நினைச்சவிடத்துக்கு நினைச்சவுடன் போவான். விசயத்தைக் கேள் தர்மலிங்கம்., ராத்திரி கண்டியோ அந்தக்கிராமத்தில ஒரு வீட்டுக்கை அவன் புகுந்திட்டான். கண் விழித்த பெட்டை முன்னால ஒருத்தன் நிற்கிறதைக் கண்டு கத்தியிருக்குது. ஆக்கள் துரத்தியிருக்கினம். ஒரு பொடியன் பாய்ஞ்சு பிடிச்சிருக்கிறான். அவன் அப்படியே வழுக்கிக் கொண்டு ஓடிவிட்டான். அவனைக் கட்டிப்பிடிக்கவே முடியவில்லையாம். வழுக்கு மரம் மாதிரி பிடிக்கவே முடியவில்லையாம்."

"பேந்து?"

"ஆக்கள் பனை வடலி வயல்வெளி எல்லாம் துரத்தியிருக்கினம். அவன் இருந்தாற்போல குரங்காக மாறி மரத்தில தாவி இருட்டுக்கை மறைஞ்சிட்டானாம்."

"குரங்காக மாறியோ?"

"ஓமெண்டுறன்.."

அடுத்த நாள் பத்திரிகை ஒன்றில் பெட்டி கட்டி கொட்டை எழுத்தில் இச்செய்தி பெரிதாகப் பிரசுரமாகியிருந்தது. "பெண்கள் பயப்பிராந்தி", "மாயமனிதனின் திருவிளையாடல்", "குரங்காக மாறிய மாயமனிதன்". என்ற தலைப்புகளில் அப்பத்திரிகை அச்செய்தியைப் பரபரப்பாக பந்தி பந்தியாக வெளியிட்டது.

அக்கிராமத்தை இச்செய்தி மிகவும் கலக்கிவிட்டது. இளைஞர்களைக் கொண்ட ஒரு காவற்படையும் அமைக்கப்பட்டது. மூன்றாம் நாள் அந்த மாயமனிதன் பக்கத்துக் கிராமத்தைவிட்டு இக்கிராமத்தில் புகுந்துவிட்டதாகச் செய்திபரவியது.

விடியல் வேளையில் வடலிக்குச் சென்ற பீடிக்கடை வைரமுத்தர் தான் அவனைக் கண்டார். குந்தும்போது தூரத்தில் ஒரு மனிதன் வருவதைக் கண்டார். எழுந்தபோது பெரியதொரு கடுவன் குரங்கு அவர் முன்னுள்ள மரத்தில் தாவி ஓறி ஓடியதைக்கண்டார்.

மாயமனிதன் குரங்காக ஊருக்குள் புகுந்துவிட்ட பரபரப்பான செய்தியை வைரமுத்தர் ஊரெங்கும் அறிவித்தார்.

பயப்பிராந்தி ஊரைக் கவ்வியது. அன்று முழுவதும் ஊரெங்கும் இதே கதை தான். மாலையாகி இருள் கவியக் கவிய ஒவ்வொரு வீட்டிலும் ஏக்கமும் பயமும் குடிகொண்டன.

தாடிக்காரத் தர்மலிங்கத்தாருக்கு நான்கு குமருகள். மிகவும் பயந்து போனார். அலவாங்கொன்றை எடுத்து அருகில் வைத்துக்கொண்டார்.

"பிள்ளையள் ஒருத்தரும் ராவைக்குப் படுக்கேக்கை பாவாடை சட்டை போடாதையுங்கோ. அண்ணன்மாற்றை சாறங்களைக்கட்டி சேர்ட்டுகளைப்போட்டுக் கொண்டு படுங்கோ."என்று கட்டளையிட்டார். அதன் பிறகு அவருக்கு ஒரு திலுப்தி. நிச்சயமாக இந்த வீட்டில் பெண்பிள்ளைகள் இல்லையென்று மாயமனிதன் ஏமாந்து போவான்.

"வந்து பார்ப்பார் எல்லாரும் பொடியள் என்று கண்டு ஏமாந்து போவார்."

சங்கக்கடை சிங்காரவேலருக்கு ஒரு வயது வந்த பையனும் பெண்ணும் இருந்தனர். அவரும் மனைவியும் பகல் முழுவதும் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தனர். மகனைக் கூப்பிட்டு மகள் படுக்கிற அறையில் படுக்கவிட்டார். மகளை மகன் படுக்கிற ஹோலில் பாயில் படுக்கும்படி கூறினார்.

"சோக்கான யோசினை. உவர் ஏமாந்து போவார் வடுவா."

நடுராத்திரியில் சிங்காரவேலரின் மகன் வீரிட்டுக்கத்தினான்.

"என்ன என்ன?" என்றபடி கொடுவாக் கத்தியுடன் சிங்காரவேலர் ஓடிவந்தார்.

"ஆரோ முன்னால நின்டமாதிரி இருந்துது.."

'தூ தூ'என்று சொல்லி அவன் நெஞ்சில் தட்டிவிட்டுச் சிங்காரவேலர் காவல் இருந்தார்.

இன்னும் சிலவீடுகளில் பெண்கள் ரவுசர்களை மாட்டிக்கொண்டு உறங்கப்போயினர். பையன்கள் கவுன்களைப்போட்டுக் கொண்டு தூங்கினர்.

கனகசபை மாஸ்ரருக்கு நித்திரையே வரவில்லை. நாற்சாரம் வீடு. ஒரு விறாந்தையில் அவருடைய எட்டுப் பிள்ளைகளும் வரிசையாகப் பாய்களில் உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகில் அவருடைய மனைவி சரஸ்வதியும் இழுத்து மூடிக்கொண்டு படுத்திருந்தாள். வாங்கில் படுத்திருந்த வாத்தியாருக்கு நித்திரை வர மறுத்தது.

மெதுவாக எழுந்து நின்றார். இருந்தாற்போல யாரோ அவளுடைய காலைச் சுரண்டியது போல..

"என்ர ஐயோ..ஆராவது வாருங்களேன்.."என்று பெருங்குரலில் அவருடைய மனைவி கத்த...

"ஏன்ரி பாவி கத்துறாய். அறுவாளே அது நானடி.." என்று கனகசபை மாஸ்ரர் தவிக்க..

சத்தத்தில் விழித்துக்கொண்ட பிள்ளைகள் என்ன நடந்தது எது நடந்தது என்று அறியாமல் அலற....

ஒழுங்கையால் காவலுக்குப் போன பத்துப் பன்னிரண்டு பொடியன்கள் படபடவென்று உள்ளே நுழைந்து திகைத்து வியர்த்து நின்ற மாஸ்ரரை இருட்டில் மாயமனிதன் என்றெண்ணி வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார்கள்.

மில்காரச் சுப்பிரமணியத்தார் வீட்டில் இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது. அயலிலுள்ள பெண்கள் எல்லாரும் அவர் வீட்டு ஹோலில் படுத்திருந்தார்கள். ஆண்கள் எல்லாரும் தடி, பொல்லு, அலவாங்கு, கோடரி சகிதம் வீட்டைச் சுற்றிக் காவல் இருந்தார்கள்.

அரைச்சந்திர வெளிச்சம். நேரம் நள்ளிரவைக் கடந்துவிட்டது. காவலிற்கிருந்தவர்கள் சற்று அயர்ந்த வேளையில்...... வேலி வரிச்சல் மட்டைகள் படபடவென முறியும் சத்தம் எழுந்தது. எல்லாரும் விழித்துப் பார்த்தனர்.

வெள்ளை வெளேரென்று ஓர் உருவம்...எல்லாரும் ஆயுதங்களுடன் பாய்ந்தனர். அந்த உருவமும் பாய்ந்தோடத் தொடங்கியது. அந்த உருவம் வயலிற்குள் இறங்கியதும் தான் தெரிந்தது. அது தணிகாசலத்தின் நாம்பன் மாடு என்று.

ஊரெல்லாம் இப்படி அமளிப்பட வைரமுத்தர் மட்டும் மூன்று நான்கு இரவுகள் நிம்மதியாக நித்திரை செய்தெழும்பினார். ஊரெல்லாம் கொள்ளை..களவுகள். தான் தேடி வைத்திருப்பவற்றை யாராவது கள்ளர் அடித்துக் கொண்டுபோய்விடலாமென்ற பயத்தில் பல நாட்களாக யோசித்து இப்படி ஒரு புரளியைக் கிளப்பிவிட்டிருந்தார்.

இரவெல்லாம் ஊர் விழித்திருக்க அவர் நிம்மதியாக நித்திரை செய்தார். நான்காம் நாள் இருந்தாற்போல உறக்கம் கலைந்தது. மெதுவாக எழுந்து யன்னலால் பார்த்தார்.

வேலியைத் தாண்டி ஓர் உருவம் அவர் வளவிற்குள் குதித்தது.

'மாயமனிதனோ?'

'மாயமனிதனேயில்லை. அது நான் கட்டிவிட்ட புரளி.'

'கள்ளனோ?'

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. நாக்கு பயத்தால் மேலண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது. பயத்துடன் பார்த்தார். அந்த உருவம் மனிதனாக இருப்பதும்...சிறிது நடந்ததும் குரங்காக மாறுவதும்....பிறகு மனிதனாகி...குரங்காகி....?

- ***சிரித்திரன் 1976***

# கண்ணுக்குத் தெரியாத தளை

**2095** ஒக்டோபர் மாதம் 27.

சர்வதேசச் சுற்றுச் சூழல் ஒன்றியத்தின் தொண்ணூற்றி ஐந்தாவது கருத்தரங்கு வாஷிங்டனில் கியூசோமோ தலைமையில் கூடியிருந்தது. மாநாட்டு மண்டபத்தில் எழுபது நாடுகளின் விஞ்ஞானிகள் கூடியிருந்தார்கள். அவர்களை விட உலகின் பல பகுதிகளிலிருந்தும் தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட அறிஞர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த மாநாட்டு மண்டபத்தில் குழுமியிருக்கவில்லை. தத்தமது நாட்டின் தொலைத்தொடர்பு மையத்தில் இருந்து கொண்டு செய்மதியூடாக மண்டபத்தின் பிரமாண்டமான திரையில் அவசியம் ஏற்படும் போது தோன்றிக் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள். வாஷிங்டனின் மாநாட்டு மண்டபத்தில் நிகழ்கின்ற ஒவ்வொரு நிகழ்வும் உரையும் எண்பத்தேழு மொழிகளில் அந்த அந்த நாட்டுத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

ஈழத்தின் பிரதிநிதியாக சிவபுத்திரன் தொலைத்தொடர்பு மையத்தில் அமர்ந்திருக்கிறான். அந்தாட்டிக்காவிலிருந்து திரும்பியதிலிருந்து அவனது மனதில் குழப்பமான கருத்துக்கள் சூழ்ந்திருக்கின்றன. ‘அப்படியிருக்குமோ’? என அடிக்கடி அவன் தன்னைக் கேட்டுக் கொண்டான்.

கியூசோமா தனது தலைமையுரையை ஆரம்பிக்கிறார்.

'ஓசோன் படையின் துவாரம் முன்னர் எப்போதுமில்லாத வகையில் அதிகரித்து விட்டது. 1982 ஆம் ஆண்டு கலிபேகுடாவில் எடுக்கப்பட்ட முதற் படத்திலிருந்து காலத்துக்குக் காலம் எடுத்துப் பேணப்பட்டு வரும் படங்கள் இதனை நிரூபிக்கின்றன.குளிர்சாதனப் பெட்டிகளுக்கும் குளிரூட்டிகளுக்கும் வேறு பல தேவைகளுக்கும் பயன்படுத்திய குளொரோபுளோரோகார்பனின் தாக்கமே ஓசோன் படையின் துவாரம் என்றறியப்பட்டதும் நிருபணமாகியதும் இரண்டாயிரமாண்டளவில் சி.எப்.சி வாயுவின் உற்பத்தியினை முற்றாகத் தடை செய்தது. இந்த வாயு வளிமண்டலத்தில் நீண்டகாலம் தங்கியிருப்பதனால் ஓசோன் படையின் இரசாயன அமைப்பை ஊறு படுத்தியுள்ளது. அங்கு அவை அல்ராவயலற் கதிர்களை உறிஞ்சிக் குளோரின் அணுக்களை வெளிவிடுகின்றன. அவை இலட்சக் கணக்கான ஓசோன் தனிமங்களை அழித்து விடும் சக்தி வாய்ந்தவை. சி.எப்.சி வாயுவின் எப் 11 வாயு 75 ஆண்டுகளும் எப் 12 வாயு 10 ஆண்டுகளும் நிலைத்திருக்கக்கூடியவை. இக்கணக்கில் பார்க்கில் இன்று ஓசோன் படையின் துவாரம் எவ்வளவோ திருந்திச் சுருங்கியிருக்கவேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அதிகரித்து வருகிறது.''

"அவ்வாறாயின் சிஎப்சி வாயுவின் உற்பத்தி எங்கோ இரகசியமாக நிகழ்ந்த வருகின்றதா?" அமெரிக்கப் பிரதிநிதி கேட்டார். தலைவர் எதுவும் கூறாது மௌனமாக நின்றிருந்தார்.

மாநாட்டு மண்டபத்தில் சலசலப்பு எழுந்தது. ஓலியின் அதிகரிப்பை கணணி கட்டுப்படுத்தியது.

"அப்படித்தான் நானும் ஐயப்படுகின்றேன்.

"யார் தயாரிக்கிறார்கள்?"

"சரியாகச் சொல்லத் தெரியவில்லை."

"தலைவரின் பேச்சு எங்கள் நாட்டைச் சந்தேகிப்பதாக இருக்கின்றது'' என்றார் அமெரிக்க விஞ்ஞானி கோபத்துடன்.

"நான் எவரையும் சந்தேகிக்கவில்லை. எமது பூமிப்பந்திற்கு

ஏற்பட்டிருக்கும் தீங்கினைத் தான் சொல்கிறேன். இந்த உலகத்தின் உடனடிப் பிரச்சனை இனப்பிரச்சனையல்ல. சாதியும் அல்ல. பெண்ணியம் அல்ல. சூழலியம் தான் பிரச்சனை. இந்தப் பூமியைக் காப்பாற்றும் பணியில் நமது கடமையை நச்சுப்படுத்தக்கூடாது. எனவே உலக நாடுகளுக்கு நாம் ஒரு கோரிக்கையை முன் வைக்கவேண்டும். ஓசோன் படைக்கு தீங்கு புரியும் சி.எப்.சி வாயுவின் உற்பத்தியை நிறுத்துங்கள்."

சிவபுத்திரனால் பொறுக்க முடியவில்லை. தனக்கு முன்னாலுள்ள தொலைச் செலுத்தியை அழுத்தி வாஷிங்டன் மாநாட்டு மண்டபத் திரையில் தோன்றினான்.

'ஒரு சந்தேகம்...'

'என்ன கேளுங்கள்... ஓசோன் படையின் துவாரத்திற்கு சி.எப்.சி வாயுதான் காரணமா?'

"அதில் சந்தேசகமென்ன?"

"எனக்கு ஒரு ஐந்து நிமிடம் தாருங்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் அந்தாட்டிக்காவிலிருந்து திரும்பி வந்தேன். என்னிடம் வியப்பான சில செய்திகளுள்ளன."

'அவற்றை... சொல்லுங்கள்' எனப் பலர் ஆவலுடன் கேட்டனர்.

'என்னிடமுள்ள சீடியைப் போடுகிறேன்...' பாருங்கள்.

சிவபுத்திரன் தயார் நிலையிலிருந்த கணனியை தட்டி விட்டான். வாஷிங்டன் மாநாட்டு மண்டபத் திரைக்கு செய்மதி தாவிச் சென்றது. காட்சி அகல விரிகிறது.

'அந்தாட்டிக்காவின் பனி படர்ந்த பிரதேசம் தெரிகிறது. பனிக்கட்டிக் கவிப்பின் பரப்பும் தடிப்பும் குறைந்த மாதிரித் தெரிகிறது. ஓரிடத்தில் பென்குவின் பறவைகள் கூட்டமாக நிற்கின்றன. அவை சாதாரண பென்குவின் பறவைகளிலும் பார்க்க உயரமானவையாக இருந்தன. அவை நடக்கும் போது சற்றுத் தாவித் தாவி நடந்தன.பாதங்களை இயல்பாக எடுத்து வைக்கவில்லை. சந்திரனில் நடக்கும் போது ஏற்படும் தாவல்.' காட்சி மறைய அவ்விடத்தில்

சிவபுத்திரன் தோன்றினான்.

'ஓ மை காட்...' என்றார் தலைவர். 'இவை உண்மையா?'

'ஆம்' என்றான் சிவபுத்திரன்.

'அந்தாட்டிக்காவின் சில பகுதிகளிலுள்ள பென்குவின்களிலும் பார்க்க உயரம்...'

'அவை சாதாரணமாக நடக்கவில்லை. தாவி நடக்கின்றன.'

அந்த மண்டபத்தில் அமர்ந்திருந்த விஞ்ஞானிகளுக்குப் புதியதொரு விடயம் புலனாகிறது. அவர்கள் ஒருவரை ஒருவர் அச்சத்துடன் பார்த்துக் கொள்கிறார்கள்.

'அப்படியிருக்குமோ' எனத் தமக்குள் கேட்டுக் கொள்கிறார்கள். பூமியைச் சூழ்ந்துள்ள பயங்கரம் புலப்படத் தொடங்கியது.

"சிவபுத்திர, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

'அப்படியிருக்குமோ என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அந்தப் பென்குவின்கள் காணப்படுகின்ற பிரதேசத்தில் என்னாலும் சாதாரணமாக நடக்க முடியவில்லை. சாதாரணமாக நடக்க முயன்று தடுக்கி விழுந்தேன். காற்றில் தாவி 'சிலோமோச' னில் நடப்பது போலப் பாதங்களை வைத்து நடந்த போது தான் என்னால் சரிவர நடக்க முடிந்தது.'நிலாவில் நடப்பது போல'

'ஆமாம்...' சிவபுத்திரன் திரையில் மறைந்து போனான்.

பலத்த வாதங்களுக்கு பின்னர் முடிவாகியது. உடனடியாக அந்தாட்டிக்காவின் குறித்த அப்பிரதேசத்திற்கு முதல் தரமான விஞ்ஞானிகள் நால்வர் செல்வதென சிவபுத்திரனுக்கு செய்தி பறந்தது.

சிவபுத்திரன் வீட்டிற்கு வந்தபோது அங்கு நண்பர்கள் உறவினர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

'என்னடாப்பா... சர்வதேச சூழல் பாதுகாப்பு மாநாட்டைக் குழப்பி விட்டாய்?'

'அப்படியில்லை. எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அவர்கள் முன் வைத்தேன். அவர்கள் பதற்றப்பட்டதைப் பார்க்கும் போது எனது சந்தேகத்தில் தவறில்லைப் போலப்படுகின்றது.' என்று சிவபுத்திரன் சிரித்தான்.

'எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்படியிருக்குமோ என்றால் எப்படி?'

'நிரூபிக்கப்படும் முன் ஊகங்கள் வதந்திகளாகக் கூடாது'

'இருக்கட்டும். விசயத்தை எங்களுக்குச் சொல்லடா.'

சிவபுத்திரன் சற்று மௌனமாக இருந்தான். 'சொல் அப்பா' என்கிறாள் மகள்.

'பிரபஞ்சத்தின் வியத்தகு சக்தி ஈர்ப்பு விசையாகும். பூமியோடு நம்மை இணைத்து வைத்துள்ள சக்தி ஈர்ப்புத்தான். அது கண்ணுக்குத் தெரியாத ஒரு தளை கற்பனைக்கு அப்பாற்பட்ட சக்தி. பூமியைச் சுற்றி சந்திரனை வலம் வர வைத்திருக்கிறது. சூரியனைச் சுற்றிக் கோள்களைச் சுழல வைத்திருக்கின்றது. இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு உடுவும் கோளும் தத்தமது நிலையில் நிற்க சுழல ஈர்ப்பே காரணமாகிறது. பூமியைச் சூழ்ந்து போர்வையாக வளிமண்டலத்தை ஈர்த்து வைத்துள்ளது. மழையை இழுத்துச் சொரிய வைக்கிறது.'

'இதெல்லாம் தெரிந்தவை தான். விசயத்துக்கு வா.'

சிவபுத்திரன் சிரித்தபடி தொடர்ந்தான். 'மனிதனால் பூமியில் எந்தச் சக்திகளையும் உருவாக்க முடியும். மின்சக்தி, அணுசக்தி, ஒளிஅலைகள், எக்ஸ்ரே இந்தச் சக்திகளை அவனால் கூட்டவும் குறைக்கவும் முடியும் ஆனால் ஈர்ப்புச் சக்தியை மனிதனால் உண்டாக்க முடியாது. நிறுத்த முடியாது. மெதுவாக இயங்க வைக்க முடியாது. அது கண்ணுக்குப் புலப்படாத ஒரு தளை...'

'சொன்னதைத் திரும்பவும் சொல்லி ஆவலைத் தூண்டதை சிவா' என்று நண்பன் குறுக்கிட்டான்.

'இரு கொருள்களுக்கிடையிலான ஈர்ப்பு அப்பொருளின் திணிவிலும் நிலத்திற்கும் இப்பொருளுக்கும் இடையிலான தூரத்திலும்

தங்கியிருக்கிறது.'

'அலுப்புத் தட்டுகிறது'

'சரி விசயத்திற்கு வருவோம். எங்களுடைய நிறை, உயரம், ஆயுட்காலம் என்பவற்றை ஈர்ப்பு விசை நிர்ணயிக்கிறது. புவி ஈர்ப்பைத் தாங்கி எழுந்து நிற்பதற்காகத் தான் மனிதனுக்குப் பெரிய எலும்புகளும் தசைநார்களும்...'

'புவி ஈர்ப்புக் குறைந்தால் என்னவாகும்?'

'உயரமாக வளர்வோம்.. அந்தாட்டிக்கா பெங்குவின்கள் மாதிரி... சாதாரணமாக நடக்க முடியாது. தாவி நடப்போம்.'

'மைகாட்...' எனச் சிலர் அலறினர். "பொறு பொறு... பூமியின் ஓரிடத்தில் மட்டும் ஈர்ப்பு விசை குறைவது எப்படிச் சாத்தியம்? சாத்தியமேயில்லை.'

'சாத்தியமா இல்லையா என்பதல்ல பிரச்சனை. அந்தாட்டிக்காவின் அக்குறித்த பிரதேசத்தில் ஈர்ப்புக் குறைந்ததால் வளிமண்டலம் அவ்விடத்திலிருந்து அகன்று துவாரம் ஏற்பட்டு விட்டது. சி.எப்.ஸி வாயுவைப் பயன்படுத்திய பிரதேசங்களில் ஓசோனில் ஏன் துவாரம் ஏற்படட்டது. வேறேதோ காரணம் இருக்க வேண்டும். நீண்ட கால நிகழ்வு. அவ்விடத்துக்குப் பெங்குவின்கள் சாதாரண உயரத்திலும் பார்க்க உயரமாகி விட்டன. சாதரணமாக நடக்காது தாவி நடக்கின்றன."

எல்லோரது முகங்களிலும் பெயம் பரவத் தொடங்கியது.

'ஈர்ப்புக் குறைந்தால் வேறென்ன நடக்கும் அப்பா?'

'மனிதனுக்குத் தேவையான ஈர்ப்பு விசை இல்லாது போகிறது. நமது இரத்தத்தில் செங்குரதி அணுக்கள் குறையும். தசைநார்கள் தமது வலுவை இழக்கும்...'

'அப்பா இன்னமும் சில நடக்கும்...' என்கிறான் மகிந்தன்.

'சொல் மகி...'

'நாங்கள் படியேறி மாடிக்குச் செல்லத் தேவையில்லை. காற்றில் மிதந்த படி ஜன்னல் ஊடாக அறைக்குள் செல்லலாம்..

பதற்றத்தோடு சிவபுத்திரனின் மனைவி விரைந்து வந்தாள்.

'இங்கே வாருங்கோவன்... ரி.வி. யைப் பாருங்கோ...'

செய்தி ஒலிபரப்பாகியது.

'அரிசோனாசின் வான் பரப்பில் பழுதடைந்த விமானம் ஒன்று காகிதம் காற்றில் மிதப்பது போல மிதந்து வந்து நிலத்தில் விழுந்தது. வீதியில் நடந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் காற்றில் மிதக்கத் தொடங்கினர். ஈழநாட்டினைச் சேர்ந்த விஞ்ஞானி சிவபுத்திரனின் கணிப்புத் தவறவில்லை' என அறிவிப்புத் தொடர்ந்தது.

சிவபுத்திரன் திகிலுடன் பார்த்தான். எல்லாரது முகங்களிலும் பயக்களை.

'வாறம் சிவா...' என்றபடி நண்பர்கள் எழுந்தனர்.

அவர்களால் சரிவர நிற்க முடியவில்லை. பிரமை... பிரமை...

கதவைத் திறந்தபடி வெளியில் முற்றத்தில் கால் பதித்தனர்.

சிவபுத்திரன் பார்த்தபடிநிற்க, அவர்கள் மெதுவாக காற்றில் மிதந்து எழுந்தனர்.

*- நுண்அறிவியல் 2000*

# ஊர்பார்க்க வந்த யானைகள்

புலர்ந்தும் புலராத ஓர் அதிகாலைவேளையில் அந்த அற்புதத்தை முதன்முதல் கண்டவர் மறவன்புலத்து மாணிக்கராயராவார். கடற்கரையோரமாக அதிகாலை சென்றவர் பூநகரிப்பக்கமிருந்து குடாக்கடலில் இரு கரும்பாறைகள் மிதந்து வருவதைக் கண்டு வியப்படைந்து நின்றார்.

"இது என்ன கலிகாலம்? பாறைகள் மிதக்குமோ?" இப்படி ஒரு எண்ணம் அவருக்கு ஏற்பட்டதும் தன்மேல் அவருக்குச் சிறு சந்தேகமுமேற்பட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டு ஆழமாகப் பார்த்தார். சந்தேகமில்லை. பாறைகள் தாம் மிதந்து வந்தன. கிழக்கில் சூரியகதிர்கள் நன்கு பரவி ஒளிபரப்பவில்லையாயினும் இ.ரண்டு'பாறைகள்' மிதந்து வருவது நன்கு தெரிந்தது.

நீந்திவந்த பாறைகள் இருந்தாற்போல ஆழங்குறைந்த கடற்பரப்பில் கால்களை ஊன்றி நிமிர்ந்து நின்றன. பாம்புகள் போல இரண்டு தலைகளை உயர்த்தியதையும் மலைகளைப்போல எழுந்து நின்றதையும் கண்ட மாணிக்கராயர் சில கணப்பொழுது சிலையாகி விறைத்துவிட்டார்.

அவை யானைகள். பூநகரிக்காட்டிலிருந்து புறப்பட்டு குடாக்கடலை நீந்தி, யாழ்ப்பாணக்குடாநாட்டின் கரையில் ஏறத்தொடங்கியிருந்தன.

மீண்டும் ஒரு தடவை அவருக்கு வயிற்றைக் கலக்கியது. முதலில் குந்தியதற்கே நீரில் இறங்கவில்லை. நீரில் நின்ற இரண்டு கரிய உருவங்களும் அவரைத் தரித்து நிற்கவிடவில்லை. பயத்துடன் பாய்ந்து பற்றைகளைத் தாண்டி ஓடத்தொடங்கினார்.

கரையோரத்தில் ஒரு மனிதன் எழுந்து நின்றதையும் பின்னர் தலைதெறிக்க ஓடுவதையும் கடல் நீரில் நின்றிருந்த பெரிய கறுப்பனும் குஞ்சுக்குறுப்பியும் கண்டன. பெரியகறுப்பனிடம் சற்றுத் தயக்கம் காணப்பட, குஞ்சுக்கறுப்பியிடம் வியப்பே தெரிந்தது.

“ஆர் அப்படி எங்களைக்கண்டதும் ஓடுறது? குரங்கு மாதிரி இருக்குது..ஆனா எங்கட பூநகரிக் காட்டுக் குரங்குகளிலும் பார்க்கப் பெரிசாத் தெரியுது..வாலையும் காணவில்லை.” என்றது குஞ்சுக்கறுப்பி.

குஞ்சுக்கறுப்பியைப் பெரிய கறுப்பன் கவலையோடு பார்த்தது.

“உவயளைத்தான் மனிசன் என்கிறது. நம்பமுடியாத இனம். போல்லாத சாதி.”

“எங்களைக் கண்டிட்டுப் பயந்து ஓடுது. பொல்லாதது என்கிறியள்?”

“உது பயந்து தான் முதலில் ஓடும். பிறகு திரும்பி வரும். தனிய வராது. கூட்டமா வரும். நீ கெதியாகக் கரையேறு குஞ்சு. எங்கயாவது போய் ஒதுங்கிக் கொள்வம்.”

இன்று தான் மனிதனைக் குஞ்சுக்கறுப்பி பார்த்தது. இரண்டு கால்களால் இது எப்படி நடக்கிறது? மூக்கு நீளமாக இல்லாமல்

இப்படிச்சின்னதாக இருக்கிறதே? இது எப்படி மூக்கால் தண்ணி உறிஞ்சும்? பாவம் வாலுமில்லை. உடம்பில் ஈ மொய்த்தால் எப்படிக் கலைக்குமோ?''

குஞ்சுக்கறுப்பிக்கு மனிதனைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.

''கெதியா வாப்பா. என்ன யோசனை..''

''இந்தக்கடலை நீந்திக்கடந்ததில் களைச்சுப்போனன்.''

''நீ தான் காடு அலுத்துப்போச்சுது. எங்கையாவது போவம் என்றாய். ஒரு சேஞ்சுக்காக நாட்டுக்குக் கூட்டி வந்தன்.''

''முந்தி எங்கட ஆக்கள் ஆனையிறவுப்பாதையால தானாம் யாழ்ப்பாணத்திற்கு வாறவையாம். அந்தப்பாதை சுகமான பாதை. நீங்களேன் இந்தப்பாதையால கூட்டி வந்தியள்?''

''ஆனையிறவால இப்ப வர ஏலாது. அங்க இப்ப ஆனையள் இல்லை. ஆமியள் தான் இருக்கினம்.'' ஏன்றபடி பெரிய கறுப்பன் முன்னே நடந்தது.

மாணிக்கராயர் கூறிய செய்தியைக் கேட்டுப் பலர் நம்பாது சிரித்தனர். வியர்த்து விறுவிறுத்தவாறு மாணிக்கராயர் யானைகளைப் பார்த்த கதையைக் கூறினார்.

''அம்மான். விடியப்புறமே பொட்டிட்டார். போலக்கிடக்குது'' என்றான் சின்னத்துரை.

''பார்வை கொஞ்சம் குறைவு. அதுதான் எதையோ கண்டிட்டுப் பயந்திட்டார். இங்கயாவது ஆனையள் வாறதாவது? இது என்ன

பூநகரிக் காடே? விசர் மனிசன்'' என்று தம்பிநாதன் சிரித்தான்.

"சிவசத்தியமாக் கண்டனான் இரண்டு அலியன்கள். மதம் பிடிச்சதுகளாகத் தானிருக்கும். சங்குப்பிட்டிக்கரையிலிருந்து கேரதீவுக்கரைக்கு நீந்தி வந்தினம்.''

"சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவுக்கரைக்குப் படகு வரும் அல்லது பாதை வரும். ஆனை வராது அம்மான்.''

"எனக்கு அழுகை அழுகையாக வருகுதடா பொடி. நீங்க நம்பாட்டில் போங்கோ. நான் விதானையிட்ட போறன்.''

மாணிக்கராயர் புறப்பட்டபோது சீனியாத்தை வீட்டிலிருந்து குஞ்சுகுருமானெல்லாம் குய்யோ முறையோ என அலறுவது கேட்டது.

"ஆனையாக்கும்..''என்றபடி மாணிக்கராயர் பாய்ந்தோடினார். கூட நின்றவர்கள் எதிர்திசையில் ஓடினார்கள்.

கிணற்றிற்குள் தவறி விழுந்த சீனியாத்தை ஓரவிதமாகத் துலாக்கயிற்றைப் பிடித்தபடி நான்கு மணிநேரம் தொங்க நேர்ந்தது.

தூரத்தில் பெரிதாக ஏதோ சத்தம் எழுந்தது. அதைக்கேட்ட பெரிய கறுப்பனும் குஞ்சுக்கறுப்பியும் வீதியில் ஏறாது தயங்கி நின்றன. தூரத்தில் மனிதர் பலர் நடமாடுவது தெரிந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் சயிக்கிலில் ஒரு மனிதன் வருவது தெரிந்தது.

"உவர் என்னத்தில வாறார்?"

"உவரால நடக்க முடியாது. அதுதான் சயிக்கிலில வாறார்.''என்றது பெரிய கறுப்பன்.

கார் ஒன்று விரைந்து வந்தது. அதில் பலர் இருந்தனர்.

"ஐந்தாறுபேர் நடக்க முடியாவிட்டால் இதில வருவினம்."

"பாவங்கள்.."

தூரத்தில் பெரும் இரைச்சலோடு புகையைக் கக்கியபடி கேரதீவு பஸ் வந்தது. அதை வியப்போடு குஞ்சுக்கறுப்பி பார்த்தது.

"உது என்ன மிருகம்? எங்களிலும் பெரிதாக இருக்குது?"

"பயப்படாதை உது பசு.."

"அப்ப நாம்பன் எங்கை?"

"விசரி உது பசுவடி..ஐம்பது அறுபது பேர் நடக்க முடியாவிட்டால் இதிலதான் போவினம்."

"ஐயோ பாவங்கள். நான் நினைச்சன் ஏதோ பெரிய மிருகம் ஐம்பது அறுபது பேரை விழுங்கிவிட்டு ஓடுதாக்கும் என்று. உதுகள் இரண்டு காலில நடக்கத் தொடங்கியதால் தான் இந்தக்கதி. நாலாலையும் நடந்தால் என்ன?"

"உதுகளில சில தலையாலயும் நடக்குமாம்." ஏன்றது பெரியகறுப்பன்.

தென்னந்தோட்டம் ஒன்றிற்குள் இரண்டு யானைகள் நின்று அதம் செய்து ஓலைகளைச் சாப்பிடுகின்ற காட்சியைப் பலர் கண்டனர். மாணிக்கராயர் விடியப்புறமே போடவில்லை என்பது நிச்சயமாகியது.

விடியப்புறமாகக் களவாகத் தேங்காய் பறிக்க வந்த இருவர் மரத்திலேறி முட்டுக்காய்ப்பதத்தில் தேங்காய்களைப் பறித்துக் கீழே

போட்டுவிட்டு வேகமாக இறங்கியவர்கள் யானைகள் வருவதைக் கண்டு விறுவிறென மரத்தில் ஏறி வட்டுக்குள் பதுங்கிக் கொண்டனர்.

வீதியில் வந்த கார் ஒன்று யானைகளைக் கண்டுவிட்டு வேலியைப் பிய்த்துக் கொண்டு பாய்ந்து நின்றது. மினி பஸ் ஒன்றில் வந்தவர்கள் யானைகளைக் கண்டுவிட்டுக் கத்தினார்கள். பிரயாணிகள் கத்திய சத்தத்தில் அரைத் தூக்கத்திலிருந்த மினிபஸ் றைவர் மரமொன்றுடன் மோதி நிற்பாட்டினான். பிரயாணிகள் இறங்கியும் குதித்தும் திக்குத்திசை தெரியாமல் ஓடினார்கள்.

"யானை..யானை.."

'ஐயோ யானை.."

, "என்ர ஐயோ யானை.."

இச்சத்தத்தைக்கேட்டு யானைகள் இரண்டும் இன்னொரு திசையில் ஓடத்தொடங்கின. ஓட்டமோ ஓட்டம் அப்படியொரு ஓட்டம். யானைகள் நாட்டிற்குள் புகுந்த செய்தி எங்கும் பரவியது. விதானையார் உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்க..அவர் அரசாங்க அதிபருக்கு அறிவிக்க...அவர் யானைகளை மீண்டும் காட்டிற்குள் துரத்திவிட ஹேம் றேஞ்சர்களை நியமித்தார்.

யானைகளால் எங்கும் நிம்மதியாக நிற்கமுடியவில்லை.

"என்னால இனி ஓட முடியாது. களைச்சுப்போனன்." என்றது குஞ்சுக் கறுப்பி.

"எனக்குந்தான். நான் அப்பவே சொன்னன். நீ கேட்கவில்லை.

மனிசன் வலு பொல்லாதவன்."

தூரத்தில் பலர் துவக்குகளுடன் டிறக்குகளில் விரைவது தெரிந்தது.

"ஆரோ இரண்டுமனிசர் வருகினம்..மறையுங்கோ.." என்று குஞ்சுக்கறுப்பி பதறியது. இரண்டும் மரங்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டன.

அவற்றினை கடக்கும்போது ஒருவன், "புலிகளைப்பிடிக்கப் போகினமாம்" என்று கூறியபடி நடந்தான்.

குஞ்சுக்கறுப்பிக்கு வியர்த்துக் கொட்டியது. புலி என்றால் அதுக்குப் பெரும் கிலி.

"புலிகள் இங்க இருக்குதோ? " என்றபடி பெரியகறுப்பனைக் பார்த்தது. பெரிய கறுப்பனைக் காணவில்லை. தூரத்தில் அது சங்குப்பிட்டிக் கடலை நோக்கி ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

- ***சிரித்திரன் 1987***

# குந்தியிருக்க ஒரு குடிநிலம்

**வா**னம் கருமை பெறத்தொடங்கியதும் இராசதுரை துடித்துப் போனான். நிச்சயமாக இன்று வானத்தில் பரவிய கருமுகில் நேற்றுப்போல வாடைக்காற்றுடன் அள்ளுண்டு செல்ல வாய்ப்பில்லை. மூன்று நான்கு நாட்களாகப் பயமுறுத்திக் கொண்டிருந்த வானம் இன்று அவன் பிரார்த்தனைக்கு இரங்கும் என்ற நம்பிக்கையைச் சீர்குலைத்தபடி குளிர்காற்றுடன் இறங்கிய தூமிகள் மழைத்துளிகளாகி வானத்திலிருந்து கோடானுகோடி நீர்விழுதுகளை மண்ணில் அழுத்தின.

"ஐயோ..பிள்ளைகள் என்ன பாடோ?"

மழைத்துளிகள் பெருந்தாரைகளாகி முகத்தில் ஊசிகளாகக் குத்தின. இராசதுரை கரத்தில் காவிய பாண் சரையுடன் தன் இருப்பிடத்தை நோக்கி ஓடத்தொடங்கினான். நிலவொளியும் சூரியஒளியும் மண்தரையில் பொட்டுக்கள் இட்டன. இருக்க இடமளிக்கும் குடிசைக்கூரை. சென்ற வருடமே வேய்ந்திருக்க வேண்டும். அதற்கான பணத்தைத் திரட்ட அவனால் முடியவில்லை. அரசு தருகின்ற உலர் உணவு எத்தனை நாட்களுக்குப் போதும்? தாயில்லாத ஐந்து பிள்ளைகளையும் படித்து ஆளாக்கிவிடவேண்டுமென்ற ஆவேசம் அவன் உழைப்பினைப் படிப்புத் தேவைகளுக்காக விழுங்கிக் கொண்டிருந்தது. கூரை வேயவென பணத்தினை ஒதுக்க முடியவில்லை. கரையான் தின்று ஈக்குகளாக எஞ்சியிருக்கும் கூரையூடாக வானம் தெரியும்.

"பாக்கியத்தின் ஆத்மா அங்கு திரியுமா?"

மாவிட்டபுரத்தில் அவன் வாழ்ந்த வாழ்க்கை என்ன? அப்பு கட்டிவிட்ட இரண்டறைகள் விறாந்தை, தலைவாசல் கொண்ட கல்வீட்டில் வெற்றிலைத் தோட்டத்தின் சூழலில் வாழ்ந்தவன்.

பாயில் படுத்துக்கிடந்தபடி எத்தனை இரவுகள் அவன் வானத்தில் கண்சிமிட்டும் விண்மீன்களைத் துயரத்துடன் வெறித்துப்பார்த்தபடி கிடந்திருக்கிறான். மாவிட்டபுரம் கோயில் வீதியில் அமைந்திருந்த அவன் தகப்பனாரின் கல்வீட்டின் வெளித் திண்ணையின் வெறும் சீமேந்துத்தரையில் வானத்தையும் நிலவையும் பார்த்தபடி படுத்துக்கிடப்பதில் அவனுக்குப் பெரு விருப்பம். சிலவேளைகளில் அவன் அருகில் வந்து பாக்கியம் அமர்ந்து கொள்வாள்.

"என்னப்பா..ஆகாயத்தில தேடுறியள்.?" என்று கேட்டுவிட்டு ஒருநாள் சிரித்தாள். அவள் சிரிப்பில் அவன் கரைந்து போனான். அவனைத் தான் கலியாணம் செய்தால் கட்டுவேனெனப் பிடிவாதமாக நின்று அவனுக்கு வாழ்க்கைப்பட்ட அம்மான் மகள் அவள். அவன் மெதுவாகத் தன் தலையைத் தூக்கி அவள் மடியில் சாய்த்துக் கொண்டான்.

"உள்ளை அம்மான்..இன்னமும் நித்திரைக்குப் போகவில்லை."

"அதிலை என்ன? அவர் செய்யாததே?"

தன்மடியில் அவன் தலைவைத்துப் படுத்திருப்பதில் அவளுக்கும் சம்மதந்தான். மகிழ்ச்சிதான். அவன் தலைமயிரைக் கோதிவிட்டாள்.

"வானத்தில இந்த மண்ணில் உடலைக் கழற்றிவிட்ட ஆத்மாக்கள் உலவுவினமாம். அவர்களில் என் அம்மாவும் இருப்பா. குருக்கள் சொன்னவர்." என்றான் அவன்.

"விசர்.. இப்ப மாமி எங்கை பிறந்திருக்கிறாவோ?"

"எங்கயும் பிறக்கமாட்டா. உன் வயிற்றில தங்கி எங்களுக்கு மகளாகப் பிறப்பதற்குக் காத்திருக்கிறா.." அவன் இவ்வாறு கூறியபடி அவள் மணி வயிற்றினைப் பாசத்தோடு தடவிவிட்டான். அவள் அவன் தலையைத் தன்னோடு இறுக அணைத் துக்கொண்டாள்.

"மெய்யாகவா அப்பா.. அப்படி ஒருபேறு எனக்குக்கிடைத்தால் என்னைவிடப் பாக்கியசாலி வேறு எவருமில்லை."

பாக்கியம் விரும்பியபடி அவர்களுக்கு முதலில் பிறந்தது பெண் தான். மாவிட்டபுரத்திலிருந்து இராணுவத்தால் திடீரெனத் துரத்தப்பட்டு அனைத்தையும் இழந்து உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி அளவெட்டியில் முதலில் குடியேறி பின்னர் வலிகாமத்தின் பெரிய இடப்பெயர்வின்போது சாவகச்சேரிக்கு ஓடினார்கள். அங்கு தான் மூத்தவள் பிறந்தாள். துயரத்திலும் வாழவேண்டுமென்ற பிடிப்பை வசந்தி ஏற்படுத்தினாள். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இராணுவம் தென்மராட்சியை நோக்கி வருவதாக் கேள்விப்பட்டதும் கைக்குழந்தையைத் தூக்கி கொண்டு கிழவரையும் அழைத்துக்கொண்டு வன்னிக்கு ஓடினார்கள். அங்கு அவர்கள் கிழவரை மலேரியாவுக்குத் தொலைத்து விட்டனர். ஆனால் சத்தியன் அங்குதான் பிறந்தான்.

"அம்மானும் வந்திட்டார்." என்று பாக்கியம் பூரித்துப்போனாள். அவன் சிரித்தான். அவன் நடேஸ்வராக்கல்லூரியில் கல்வி கற்றவன். பகுத்தறிவால் ஏற்கக்கூடியவை எவை பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை எவை என்பது அவனுக்குத் தெரியாதவையல்ல. ஆனால் பாரம்பரியமாக நிலவுகின்ற பகுத்தறிவற்ற நம்பிக்கைகள் மக்களின் வாழ்க்கைத் துன்பங்களை மறக்கவும் வாழ்வின் திருப்திக்கும் உதவுமாயின் அவற்றினால் பாதகமில்லை என்பது அவனின் வாதம். நிறைய நூல்கள் வாசிப்பான். பாரதியார் கவிதைகள் மீத அளப்பரிய பிரேமை. அடிக்கடி பாரதியின் வரிகளைப் பாக்கியத்திற்குப் பாடிக்காட்டுவான்.

"தனிமனிதனுக்கு உணவில்லையெனில் இந்த உலகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதி."

"ஒருவனுக்காக உலகத்தை அழிக்கிறதே?" என்று பாக்கியம் சிரிப்பாள்.

"அப்படியல்ல பாக்கியம் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கவேணும் என்று அவாப்பட்டார்."

சத்தியனுக்குப்பிறகு வசந்தன், மாலினி, ரூபி மூவரும் வன்னியில் பிறந்தார்கள். குடும்பத்தில் எண்ணிக்கை அதிகரித்ததும் பிரச்சினைகளும் தோன்றத் தொடங்கின. வன்னியின் காட்டுச்சூழலின் காங்கை வெக்கையில் அவன் குடும்பத்திற்காக ஓயாது உழைக்க நேர்ந்தது. வேளாண்மைக்காலத்தில் தொழில் கிடைத்தது. ஏனையநாட்களில் கனகசபையோடு பட்டவிறகு தேடிச்சேகரிக்கக் காட்டிற்குள் அலைந்தான்.

பாக்கியம் மெலிந்து உருக்குலைந்துபோனாள். அடிக்கடி கடும் காய்ச்சலில் படுத்துக்கொள்வாள். அந்நேரங்களில் குடிசையில் தங்கி அவளையும் பிள்ளைகளையும் பராமரித்துக் கொள்வது அவன் பணியாகியது. எப்படி வாழ்ந்தவர்கள்? மாவிட்டபுரத்தில் வெற்றிலைத்தோட்டத்துடன் கூடிய விட்டார்தியான காணியில் அப்பு கட்டியவீட்டில் அமிர்தம் போன்ற கிணற்றுத் தண்ணீருடன் வாழ்ந்து சுகித்த குடும்பம். இன்று வன்னிக்காட்டிற்குள் பத்தடிபத்தடிக் குடிசைக்குள் மண்தரையில் பாய்களில் கிடக்க நேர்ந்துவிட்டது.

"எங்கட ஊருக்கு எப்படியாவது திரும்பிப்போய்விடவேணும், அப்பா. பிள்ளையளைப் படிப்பித்து ஆளாக்கிவிட வேணும்.. பாவம் செய்ததுகள். இங்கை வந்து எங்களுக்குப் பிறந்திருக்குதுகள்."

பாக்கியத்தின் ஏக்கம் மாவிட்டபுரமாகத் தான் இருந்தது. பிறந்த மண்ணைவிட்டு அகதிகளாக ஓடிவந்து எத்தனை வருடங்களாகிவிட்டன? மண்மீட்பிற்கான யுத்தம் நாலரை இலட்சம் மக்களை சொத்துச் சுகமிழக்க வைத்துவிட்டது. அறுபதினாயிரம்

மக்களைக் காவுகொண்டுவிட்டது என்பதை எண்ண மனம் வலித்தது.

"கெதியல போவம் பாக்கியம். சமாதானப்பேச்சு வார்த்தை நடக்குது. எங்களைப் பழையவிடங்களில இருக்க விடுவினமாம்." என்றான் நம்பிக்கையோடு இராசதுரை. அந்த நம்பிக்கையோடுதான் கண்டிவீதி திறக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்தார்கள். பூனை குட்டிகளைக் காவுவதைப்போல பிள்ளைகளைக் காவிக்கொண்டு ஓராயிரம் ஆசைக் கனவுகளோடு ஓடிவந்து ஏமாந்தார்கள். இருக்க இடமின்றி நடுத்தெருவில் நின்றார்கள்.

"இனிச் சண்டையில்லை. சமாதானமாம். அவையவை அவையின்ர வீடுகளில இருக்கலாம் என்றினமே?"

பெரும் ஏமாற்றம் அவர்களைத் தாக்கியது. இராணுவத்தினரின் முகாமுள்ளவிடங்களிலும் உயர்பாது காப்புவலயங்களுள்ளும் எவருக்கும் மீளக்குடியமர அனுமதி யில்லையாம். யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடபெரும்பகுதி அவர்களின் மாவிட்டபுரம் உட்பட இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கிக்கிடந்தது.

"வன்னியிலேயே இருந்திருக்கலாம்.." என பாக்கியம் விம்மினாள்.

"கெதியில விடுவினமாம். இங்கினேக்க இருப்பம்."

மாவிட்டபுரத்தினை இராணுவம் ஆக்கிரமித்ததும் அவர்கள் அடைக்கலம் தேடி அளவெட்டிக்குச் சென்றார்கள். அவர்களை முதலில் ஆதரித்த வெளிநாட்டுக்காரார் ஒருவரின் வீட்டில் அவனைப்போல ஆறுகுடும்பங்கள் இப்பொழுது குடியேறியிருந்தன. அங்கும் இருக்க இடம்கிடைக்கவில்லை. பரதவித்து நின்றபோது பழைய தோழன் பொன்னுத்துரை உதவ முன்வந்தான்.

"கவலைப்படாதை இராசதுரை. நாங்கள் களமேடு அகதிமுகாமில இருக்கிறம். எங்களுக்கு அங்க ஒரு நிறுவனம் சின்ன ஒரு வீடு கட்டிக்கொடுத்திருக்குது. நான் முதலில இருந்த குடிசையைப்பிரிக்காமல் வைச்சிருக்கிறன். அதில வந்து இப்போது பிள்ளையளோடு இரு. பிறகு பார்ப்பம்."

மீண்டும் குடிசைக்குள் முடங்கிக் கொள்ள நேர்ந்தது. எட்டுப்பரப்புக் காணிக்குள் முப்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் முடங்கிக்கிடந்தன. அசைய இடமில்லை. ஒரு குழாய்க்கிணறு நூற்றியிருபது பேருக்கு நாள் முழுவதும் நீரிறைத்து சிலவேளைகளில் காற்றினைக் குழாய் வழி கக்கியது. நான்கு மலசலகூடங்கள் காலைவேளைகளில் திணறின. மலக்குழிகள் வேறு அடிக்கடி நிரம்பிப் பிரச்சினை தந்தன.

**சி**றிது நேரமழைப் பொழிவில் நிரம்பிய வீதிவெள்ளம் பாதங்களை மூடிவிட்டது. இராசதுரை வேகமாக ஓடிவந்தான். ஈர்க்குக் கூரைக்குடிசைக்குள் பிள்ளைகள் என்ன பாடோ? இப்படி மழைபொழிந்த ஒரு மாரிப்பொழுதில் தான் நெஞ்சு வலிக்கிறதென்று மார்பினைப் பற்றியபடி சரிந்த பாக்கியம் மீண்டும் எழுந்துவரவில்லை. மாவிட்டபுரத்தில் மீளக்குடியேறும் கனவு நிறைவேறாமலே மண்ணில் எரிந்து சாம்பலாகிப்போனாள்.

எப்படி வாழ்ந்தவள்? ஐந்து பிள்ளைகளையும் அவன் பொறுப்பில் கொடுத்துவிட்டு மறைந்து போனாள். முழுப்பொறுப்பும் மூத்தவள் வசந்தி தலையில் விழுந்ததும் அவள் பாடசாலைக்குச் செல்லல் முற்றுப்பெற்றது. மாதாமாதம் கிடைக்காமல் எட்டிலதொட்டில கிடைக்கின்ற உலர் உணவுப்பொருட்கள் அவர்களுக்குப் போதுமானதாகவில்லை. அவன் நேரகாலம் பார்க்காமல் உழைக்க நேர்ந்தது.

மாரிமழை இரைச்சலுடன் மீண்டும் பாட்டம்பாட்டமாகப் பொழியத்தொடங்கியது. தூரத்தில் அவன் வாழ்கின்ற அகதி முகாம் வெள்ளத்துள் மூழ்கிக்கிடப்பது தெரிகிறது. கூரையை மழைக்கு முன்னர் வேய்ந்துவிட அவன் எவ்வளவோ முயற்சிகள் செய்தான்.

அவை பலிதமாகவில்லை. கிராமசேவகர் மூலம் ஏதாவது உதவிகள் கிடைக்குமா என்று பலதடவைகள் ஓடியலைந்தான்.

"இதோ பார் இராசதுரை. நீ உரியமுறையில் பதிந்து இந்த முகாமிற்கு வரவில்லை. அடாத்தாகக்குடியேறியிருக்கிறாய். அதனால அரசுசார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற உதவிகள் உனக்குக் கிடையாது. பாய், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், செமிபேமனன்ற் வீட்டிற்கான பணம்..எதுவும் கிடையாது." என்றார் விதானையார்.

"எனக்கு அலையள் கிள்ளிக்கொடுத்தவிட்டு அள்ளிக்கொண்டுபோகிற சங்கதிகள் பிரச்சினையில்லை. எங்கட துயரத்தை அந்த வெளிநாட்டு நிறுவனங்கள் வியாபாரமாக்கிவிட்டன. மீளக்குடியேற வருபவர்களுக்கு இருபத்தையாயிரம் அரசு கொடுக்குது. அதுதான் எனக்கு வேணும். தந்தியள் எண்டால் குடிசையைத்திருத்தி கிடுகு வாங்கிக் கூரையை மேய்ந்திடுவன்."

"நீ உன்ர சொந்தவிடத்தில குடியேறினால் தான் அது உனக்குக் கிடைக்கும்."

அவன் விக்கித்துப்போய் அவரைப் பார்த்தான்.

"குடியேற விடுங்களேன்? நாங்களா வேணாமென்றம்?"

இவன் பாதிக்கப்பட்டவன். அவன் ஆவேசத்தின் காரணம் கிராசேவையாளருக்குப் புரியாமலில்லை. அவனைப்போல எத்தனை மனிதர்கள் அங்குள்ளனர்? பார்த்துப்பார்த்து அவர்களின் துயரங்களைக் கேட்டுக்கேட்டு நெஞ்சமும் அவருக்கு மரத்துவிட்டது.

இராசதுரையை வியப்புடன் கிராமசேவையாளர் ஏறிட்டார். எவ்வளவு அற்புதமாக வெளிநாட்டு நிறுவனங்களை அவன் கணித்திருக்கிறான்.

"இராசதுரை, அப்படி முற்று முழுதாகச் சொல்லிவிடாதை. அந்த நிறுவனங்கள் இல்லாவிட்டால் இருக்கவும் இடமில்லாமல்

எத்தனை குடும்பங்கள் தவித்திருக்கும் தெரியுமா?"

"விதானையார் இப்ப இருக்கவிடமில்லாமல் தவிக்கிறது வலிகாமம் வடக்கு மக்கள் தான். நீங்கள் அல்ல. யாழ்ப்பாணத்தவரல்ல. வன்னி மக்கள் இல்லை. நீங்க எல்லாரும் உங்கட உங்கட வளவுகளில வீடுகளில இருக்கிறியள். நாங்க.. இருபது வரியமாக அலையிறம். உயர் பாதுகாப்பு வலயம் என்று ஒரு எல்லையை வகுத்து எங்கட வளவுகளையும் வீடுகளையும் அநியாயக்காரர் ஆக்கிரமித்ததால் அகதிகளாகியது நாங்கதான். வலி உங்களுக்கல்ல. எங்களுக்குத் தான். எங்களது போராட்ட உணர்வை மழுங்கடிக்க.. அகதி முகாம்.. உலர் உணவு. பிளாஸ்ரிக் பாத்திரங்கள்.. கூரை விரிப்புகள்.. என்று பிச்சை தந்து உணர்ச்சியை அடக்கிவிட்டினம். எங்களைத் தவிக்க விட்டிருந்தால் தெரிந்திருக்கும். எங்கட ஊருக்க புகுந்திருப்பம்.."என்றான் இராசதுரை ஆவேசமாக.

"ஆமி சுட்டுத் தள்ளியிருக்கும்.."

"எத்தனை பேரை? ஒரு நூறுபேரை? ஆயிரம் பேரை? அதுக்கும் கூட? .நாங்க அறுபதினாயிரம் பேர் எங்கட குடிநிலத்தை இழந்து தவிக்கிறம் விதானையார். நான் வாறன் விதானையார்.."

அவனைப்பார்த்தபடி அவர் நின்றிருந்தார்.

மழைவிடுவதாகவில்லை. பொழிந்து கொட்டியது.

அவன் வீட்டை அடைந்தபோது குடிசை வெறிச்சிட்டுக்கிடந்தது. 'ஐயோ' என இதயம் பதறியது. பிள்ளைகளின் பெயர் சொல்லி கூச்சலிட்டான். எவரையும் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். வெள்ளக்காடாக எங்கும் விரிந்துகிடந்தது. எவரையும் காணோம்.

"தம்பி இராசதுரை..எல்லாரும் பள்ளிக்கூடத்தில. ஒதுங்கிவிட்டினம். அங்க போ.."

"நீயும் வானை ஆச்சி.."

"நான் வாறன் நீ போ."

மனம் அமைதி கண்டது.

இரவு முழுவதும் விறைக்கும் குளிரில் நடுங்கியபடி அவர்கள் அப்பாடசாலைக் கட்டிடத்தில் அமர்ந்திருந்தனர். இராசதுரை நனைந்திருந்த பாணைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான். நாளை காலை பாடசாலை அதிபர் பிரதேசச்செயலரிடம் ஓடிப்போகப்போகிறார்.

"சேர் வந்து ஒருக்காப் பாருங்கோ..பள்ளிக்கூடமிருக்கிறநிலையை. அதுகள் அதுக்குள்ள வந்து தங்கி நாறிப்போய்கிடக்குது. இனித் துப்பரவாக்கிறதென்ன? பள்ளிக்கூடம் நடத்துறதென்ன?"

'அப்படிச்சொல்லிப்போட்டு வரட்டும். நாயை அடிக்கிறமாதிரி உதைக்கிறன். சொந்த வீட்டில சொகுசாக இருந்துகொண்டு..'

அடுத்தநாள் பலர் வாகனங்களில் பாடசாலைக்கு வந்திறங்கினர். பிரதேசச் செயலாளர். கிராமசேவகர், சமுகசேவை அதிகாரி.. இன்னும் ஒரு வெள்ளைக்காரர்.. அரசசார்பற்ற நிறுவனத்தின் ஒரு லொறி நிறைந்த பொருட்களுடன். .வந்திறங்கினர். .பிரதேசச் செயலரின் விழிகளில் பரிவு தெரிந்தது.

"எங்கட சொந்தவிடங்களில போய் இருக்க அனுமதி பெற்றுத் தாருங்க சேர்." என்று வேண்டினான் பொன்னுத்துரை:"நாங்க இருபது வரியமாக அனுபவிக்கிற வேதனை காணும். எங்களுக்கு ஒன்றும் வேண்டாம் சேர்..எங்கட இடம் தான் வேணும்."

"இப்ப சமாதானம் வந்திட்டுதானே!."

"ஆருக்கு சேர் வந்திருக்குது?" என இராசதுரை சத்தமிட்டான்: " உங்களுக்குத் தான் வந்திருக்குது. யாழ்ப்பாணத்தில வாழுகிறவைக்கு வந்திருக்குது..வன்னியில இருக்கறவைக்கு வந்திருக்குது...எங்களுக்கல்ல . வலிகாமம் வடக்குக்காரருக்கல்ல. அகதி முகாம்களில வாழுகிற எங்களைப் போன்ற பரதேசிகளுக்கல்ல. யுத்தமில்லாத இந்தக் காலத்தில உங்களுக்குத் தான் கொண்டாட்டம்.."

அவ்விடத்தில் அமைதி நிலவியது. அவனை எல்லாரும் வியப்புடன் பார்த்தனர்.

"ஓலைக்கூரை வீட்டுக்காரர் வாருங்கோ.. தறப்பாள் கொண்டு வந்திருக்கிறம். கூரைக்குப் போட்டு ஒழுகாமல் செய்திட்டு இருங்கோ."

ஏல்லாரும் வரிசையாக வந்து வாங்கிக் கொண்டனர். இராசதுரை எழுந்து வந்தான்.

"இராசதுரைக்கு இரண்டு தறப்பாள் வேணும் சேர். குடிசை அப்படிக் கூரையில.."என்று விதானையார் பரிந்துரைத்தார்.

"எனக்கெதுவும் வேணாம் சேர்."என்றான் இராசதுரை.

"தம்பி..கெதியில பேச்சு வார்த்தை புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மீண்டும் தொடங்க இருக்குது. சரியாக வந்திடும். எல்லாரும் அவரவர் இடங்களுக்குப் போகலாம்."

இராசதுரை பிரதேசச் செயலாளரை ஏளனமாகப் பார்த்தான்.

"நம்பச் சொல்லுறியளா சேர். ஏத்தனை வரியமாகச் சொல்லிறியள். எந்தச் சிங்கள அரசாவது நீங்க கேட்கிறதைத் தூக்கிக் கொடுத்தவிடப்போவதில்லை. சமாதானம் வந்திட்டுது

எல்லாரும் அவரவர் இடத்திற்குப்போகலாம் எண்டியள். நம்பி ஓடிவந்தம். இப்ப பேச்சு வார்த்தை...முடியட்டும் என்கிறியள்.. இந்தச் சமாதானம் பேச்சு வார்த்தை எதுவும் எங்களுக்கு வேணாம். எனக்கு என்ர மாவிட்டபுரம் வேணும்.. அங்க என்ர வளவு வேணும். இவங்க ஒருபோதும் தரப்போவதில்லை. நாங்களாத் தான் எடுத்துக்கொள்ள வேணும். என்னைப்பொறுத்த வரையில் இன்னமும் சண்டை முடியவில்லை. சேர். சமாதான சுகத்தையும் போரில்லா இனிமையையும் நாங்க அனுபவிக்கவில்லை. தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த உலகத்தையே அழித்திடச் சொன்ன பாரதியைத் தெரியுமா சேர்?, நீங்க எழுத்தாளர் உங்களுக்குத் தெரியும் நாங்க ஒருவரல்ல அறுபதினாயிரம் பேர்.. எங்கபிரதேசத்தை மீட்டுத்தாருங்க உங்களோட சேர்ந்து நாங்களும் சுகத்தை அனுபவிக்கிறம். இல்லாட்டில் எங்களோட சேர்ந்து நீங்களும் அழியத் தயாராகுங்க. போங்க சேர். நாங்க இப்பவும் அடிமைச்சாதியள்."

"அதுகளைவிடு..இந்தா இந்தத் தறப்பாளை வாங்கிக் கொள் தம்பி."

நீட்டிய தறப்பாளை வாங்கிய இராதுரை அவற்றினை அப்படியே முற்றத்தில் தேங்கிக்கிடந்த வெள்ளத்தில் வீசிவிட்டு.."வாருங்கோ பிள்ளையள்." என்றபடி மழையில் இறங்கி நடக்கத் தொடங்கினான்..

ஓய்ந்திருந்த மழை மீண்டும் பொழியத்தொடங்கியது.

*- தீராநதி பெப்ரவரி 2005*

# என்னைத்தேடி...

அந்த வானத்தில் சூரியன் மேற்கே தோன்றி கிழக்கே மறைந்தான். தென் முனைவில் மட்டும் பனிக்கட்டிக் கவிப்புகள் காணப்பட்டன. இவ்விரண்டையும் தவிர வேறு எந்தவித மாற்றங்களும் பூமிக்கும் வைஎம் 500/24 ற்குமில்லை.

விமலை வியப்பு ஆட்கொண்டது.

அவனது விண்வெளிப்பயணம் கி.பி.2014 இல் தொடங்கி மூன்றாண்டுகளாகின்றன. பூமியில் தும்பாவிலிருந்து ராம் ஜெட்டில் புறப்பட்டு, ப்ராக்சிமா சென்டாரி கலெக்சியிலுள்ள தியோகு கோளத்தில் இறங்கி பின்னர், அங்கிருந்து வைஎம் 500/4 இலக்கினை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

விண்வெளியிலுள்ள ஹைட்ரயன் துகள்களை விழுங்கி எரிபொருளாக்கியபடி நொடிக்கு 30 ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் பயணத்தைத் தொடங்கிய ராம் ஜெட் ஒவ்வொரு 12.38 மணிநேரத்தில் தனது வேகத்தை இரட்டிப்பாக்கி மூன்றாண்டுகளுக்குப் பின் தனது இலக்கினை நோக்கி அடைந்து கொண்டிருக்கின்றது.

எதிரில் தெரிவது பூமியா? வைஎம் 500/4 கிரகமா? அவனால் இனங்காண முடியவில்லை. அவனை அறியாமலேயே பயணப்பாதை தியோகுவிலிருந்து புவியை நோக்கித் திரும்பிவிட்டதோ?

"பயண இலக்கு சரியா?உறுதிப்படுத்துக.."என்று தியோகு விண்வெளித் தளத்தை அவசரமாகக்கேட்டான். அங்கிருந்து தகவல் வந்தது.

"கேலக்சி அன்ரோமிடோ.. மண்டலம் வைஎம் 500. கிரகம் வைஎம் 500/4 "

"இல்லை இது பூமிதான். அமெரிக்கக் கண்டங்கள் தெளிவாகத் தெரிகின்றன. மை கோட்..இந்தியா...இலங்கை...இதோ தெரிகின்றது. தும்பாவுடன் தொடர்பு கொள்க. மீண்டும் உறுதிப்படுத்துக." என அலறினான்.

மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. தளத்திலிருந்து ராம் பேசியது.

"வியப்புக்குரிய சங்கதி தான். பூமி மாதிரி பிரபஞ்சத்தில் இன்னொரு கோளா? விமல், தரையிறங்கும் இடத்தை நீயே தெரிவு செய்து கொள்."

"தெரிவு செய்துகொண்டேன். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வல்லை வெளியில் நள்ளிரவு இறங்கப்போகிறேன்."

சிலநொடிப்பொழுதில் ராம்ஜெட்டிலிருந்து பிரிந்த ஒரு சிறு விண்கலம் ஐம்பது வயது விமலுடன் வைஎம் 500/4 கோளத்தின் வல்லைவெளியில் இறங்கி மண்ணுள் புதைந்து காணாமல் போனது.

விண்ணிலிருந்து ஓர் ஒளிப்பொட்டு சுழன்றபடி தரையை நோக்கி வருவதை வல்லை வெளியின் அயற்கிராமமான அச்சுவேலியில் நின்றிருந்த இருபது வயது விமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

“சந்தேகமில்லை. இது எனது ஊர் தான்.எனது பூமிதான் “எனவிமல் திடமாக நம்பினான். ஏதோ தவறு நடந்துவிட்டது.

வீதியிலேறி அச்சுவெலியை நோக்கி நடந்தான்.அவன் அலைந்து திரிந்த வீதி. அதே முனியப்பர் வீதி.

அச்சுவெலிச்சந்தியில் சிறியதொரு ஹோட்டல் மின்விளக்கில் தெரிந்தது. “ராகுல் கபே” என்பது நியான் ஒளியில் கண்சிமிட்டியது. இரவு பகலாக இயங்குகின்ற ஹொட்டல் அது. அதற்குள் நுழைந்தபோது கவுண்டரில் சுப்பையர் அமர்ந்திருந்தார். சீச்சி..அவரல்லர். அவருக்கு இப்போது வயது அறுபதிருக்கும். இங்கிருப்பவருக்கு முப்பது வயதிருக்கலாம்.

“நீங்கள் சுப்பையா அண்ணரின் மகனோ?”என வினவிய அவனை அவர் கவலையுடனும் வியப்புடனும் பார்த்தார்.

“என்ன பகிடியா விடுகிறீர்? நான் சுப்பையா..இனித்தான் மகன் பிறக்கவேணும்.”

விமலை வியப்பு ஆட்கொண்டது. உள்ளே நுழையும்போது எதிரில் மாட்டப்பட்டிருந்த கலெண்டர் கண்ணில் பட்டது. மிகப்பழைய கலெண்டர். நாட்காட்டி. பையன் ஒருவன் சூடாகத் தேனீர் கொண்டு வந்து விமல் முன் வைத்தான்.

“தம்பி, இதென்ன 1987 ஆம் ஆண்டுக் கலெண்டரை மாட்டியிருக்கிறியள்? முப்பது வருஷப் பழங்கலண்டர்..”

“உங்களுக்கென்ன விசரே?”என்று பையன் சிரித்தான்:” இப்ப 1987 ம் ஆண்டுதான்.”

விமல் ஒருகணம் உறைந்து போனான்.

“நீ இருப்பது எங்கு தம்பி?”

"யாழ்ப்பாணம்.."

"யாழ்ப்பாணம் இருப்பது?"

"யாழ்ப்பாணம் இருப்பது இலங்கையில்..இலங்கை இருப்பது ஆசியாவில்..ஆசியா இருப்பது உலகத்தில்...உலகம் இருப்பது பூமியில்..போதுமா? சரியா?"

"சரி சரி மெத்தச்சரி..சூரியன் எத்திசையில் உதிக்கும்?"

"சூரியன் உதிப்பது மேற்கில்..மறைவது கிழக்கில்.."

"அப்படியானால் இது நம்ம பூமியல்ல.."என்று விமல் தனக்குள் சொல்லிக் கொண்டான். தேனீருக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தான்.

எதிரில் வந்தவரைக் கண்டதும் திகில் பற்றிக் கொண்டது.

"கந்தையாண்ணை..உது நீங்கள் தானே? நீங்கள் செத்தெல்லோ போட்டியள்? உங்கட செத்த வீட்டிற்கு நான் வந்தனான்.."

கந்தையா அவனைக் கோபத்துடன் பார்த்தார். பார்வையின் காங்கையைத் தாங்க முடியாமல் விமல் சொன்னான்:" நான் ஆறுமுகத்தாற்றை மகன். விமல்.. தங்கம்மாவின் மகன்.."

"உனக்கென்ன விசரே? விமலை எனக்குத் தெரியாதா? அவன் சின்னப் பொடியனல்லோ?"

விமலுக்கு இப்பொழுது புரிந்தது. தலையைத் தொங்கப்போட்டபடி நடந்தான்.

**வி**டியும் நேரத்தில் தன் கிராமத்தை அடைந்தான். எதிரில் காரை ஓட்டி வந்த இராசையா ஐந்து வருடங்களுக்கு முன்னர் இறந்து போயிருந்தார். அவரது கார் எதிரில் வந்த லொறி ஒன்றுடன் மோதிச் சுக்குநூறாகியிருந்தது. பாம்பு தீண்டி மரணமடைந்திருந்த அவனது நண்பன் சோமு சயிக்கிலில் வந்தான்.

"சோமு.."என்று விமல் அழைத்தான். சயிக்கலை நிறுத்திய சோமு "நீங்கள் ஆர்?" என்று கேட்டான்.

"என்னைத்தெரியவில்லையா?"

"இல்லைப் பெரியவர்.."

"உதாலை போகாதை சோமு. உன்னைப் பாம்பு தீண்டிவிடும்."

"விசர்.. .."

விமல் கவலையுடன் நடந்தான்.

**கோ**யில் கிணற்றில் கனகா நல்ல தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள். பதினெட்டு வயது. அக்கிராமத்தின் அழகி. அவர்கள் எவ்வளவு அன்னியோன்யமாகப் பழகினார்கள். ஒருவர் மேலொருவர் உயிரையே வைத்திருந்தார்கள். அவனின் வீட்டார் எதிர்ப்பால் அவள் இந்தக் கோயில் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். கிணற்றுக்கட்டோடு தலையை மோதி அலறிய அவலம். இன்னமும் நினைவில் அழியவில்லை.

அவளையே கண்ணிமைக்காமல் அவன் பார்த்தான்.

"தண்ணி வேணுமா?' என அவள் கேட்டாள். அவள் விழிகள்

கலங்கின. அவள் போகும் வரை அவளையே பார்த்தபடி அவன் நின்றிருந்தான்.

**ஒ**ரு பெரியவர் தங்கள் கால்களில் விழுந்து வணங்கியதைக் கண்டதும் ஆறுமுகமும் தங்கம்மாவும் சிலிர்த்துப் போனார்கள்.

"இதென்ன ஐயா? நீங்கள் எங்களிலும் பார்க்கப் பெரியவர்..எங்களை வணங்குவதா?"

"நான் உங்கள் பிள்ளை அம்மா.."

"சித்தர் ஆக்கும். முற்பிறப்பைச் சொல்கிறார் போலிருக்கிறது." என்றார் ஆறுமுகம்: "யாரைத் தேடி வந்தியள்?"

"என்னைத் தேடி வந்தேன். விமலைப் பார்க்க வந்தேன்." என்றான் விமல்.

"அவன் இப்ப வந்திடுவான். இருங்கோ. கோப்பி கொண்டு வாறன்."

அவன் எங்கு சென்றிருப்பான் என்பது அவனுக்குத் தெரியும். கனகாவைச் சந்திக்கச் சென்றிருக்கிறான். ஆ..இன்று 1987 ஜனவரி 17..இன்று தான் மாந்தோப்பில் அந்தத் தவறு நடந்தது. கனகா அவளை அவனிடம் தன்னை முழுமைகளாக ஒப்படைத்த நாள்.

விமல் வந்தான்.

"உன்னைத்தேடி இவர் வந்திருக்கிறார் விமல்."

"என்னையா?"

பெரிய விமல் தலையை அசைத்தான்.

"உன்னுடன் சிறிது தனிமையில் பேசவேண்டும். "என அவன் எழுந்துமுற்றத்தில் மாமரத்தின் கீழிருந்த வாங்கில் அமர்ந்தான். அவன் அருகில் விமல் அமர்ந்து கொண்டான்.

"விமல் நான் தான் நீ. நீ தான் நான்"

சின்னவிமல் சிரித்தான்.

"நீங்கள் தத்துவம் பேசிறியள். எனக்கு அது புரியாது. நான் விரும்புகின்ற விண்வெளி பற்றிக் கூறுங்கள்..புரியும்."

அவன் அவனை வியப்புடன் பார்த்தான்.

"இந்த அன்ரோமிடியோ கலெக்சிக்கு அப்பால் ப்ராக்சிமா சென்டாரிக் கலெக்சியைக் கடந்ததும் மில்க்கிவே கலெக்சியுள்ளது. அதில் சூரிய மண்டலம். அதில் பூமி என்றொரு கிரகம். அதிலிருந்து வந்தேன்.."

"இதுவும் பூமி தான்."

'ஆனால் அங்கு 2017 ம் ஆண்டு நடக்கிறது. இங்கு 1987 ம் ஆண்டு நடக்கிறது. இங்கு இனி நடக்கப்போவதை நான் கூற மாட்டேன். அவை நடந்தே தீரும். ஆனால் ஒருநாள் நீ பூமிக்கு வந்து எ(உ)ன்னைத்தேடுவாய்.'. காணமாட்டாய்.."

"ஏன்?"

"நான் செத்துப்போயிருப்பேன்" என்று விமல் சிரித்தான்.

**அ**ன்றிரவு ஒரு ஒப்ஜெக்ட் (பறக்குந் தட்டோ?)தரையிலிருந்து வானில் கிளம்பியதை இளம் விமல் கண்டான்.

*- கலைக்கதிர் யூன் 1994*

# மனிதம்

நெஞ்சம் கனத்து முகம் இறுகிக் கொள்கிறது. முகமாலை சூனியப் பிரதேசத்தின் வன்னிப்பக்க ஏ9 வீதியின் அந்தத்தை எங்களது பிக்கப் வாகனம் அடைந்த போது நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும். எங்கள் வாகனத்திற்குப் பின்னால் இன்னொரு பிக்கப்பும் ஹைஏஸும் அணிவகுத்து வந்தன. பிக்கப்வாகனத்தின் ஹெட்லையிற்றின் பிரகாசத்தில் வீதிக்குக் குறுக்கே இடப்பட்டிருந்த தடைத் துலாவிற்கு முன்னால் கரங்களில் துப்பாக்கிகளை ஏந்திய இராணுவச் சீருடை தரித்த இளம் பெண் பிள்ளைகள் நால்வர் நின்றிருந்தனர். வானத்தில் கருகுமெனக் கவிந்திருக்கும் இருட் பரப்பை ஊடுருவிக் கண்சிமிட்டும் உடுக்களும் அவற்றின் கீழ்ப்பரப்பில் அலையும் வெளவால்களும் சூழ்ந்திருக்க எல்லைக்காவலிற்குக் கரத்தில் ஆயுதமேந்தி அவர்கள் நின்றிருந்தமை ஹெட்லையிற் வெளிச்சத்தில் நன்கு புலனாகியது.

ஏன் இவர்கள் இங்கு நிற்கிறார்கள்? மனம் கனத்துக் கொள்கிறது.

அனுராதபுரத்தில் நடந்து முடிந்த பிரதேசச்செயலாளர்களுக்கான கருத்தரங்கு முற்றுப் பெற நண்பகல் ஒருமணியாகிவிட்டது. அவசர அவசரமாக மதிய உணவை விழுங்கி விட்டு பிக்கப்பில் ஏறிக்கொண்டேன். என்னுடன் மூவர் ஏறிக்கொண்டனர்.

“வின்சன், எப்படியாவது ஐந்தரைக்குள் முகமாலையை அடைந்துவிட வேண்டும்.” என்று எனது வாகன சாரதிக்கு கூறினேன்.

பிக்கப் வேகமாகப் புறப்பட்டது. எங்களுக்குப்பின்னால் மேலதிக அரசாங்க அதிபரைச் சுமந்தபடி இன்னொரு பிக்கப்பும் ஏனைய பிரதேசச்செயலாளர்களைச் சுமந்தபடி ஹைஏஸ் வானொன்றும் சீறிக்கொண்டு வந்தன. எப்படியும் வவுனியாவைக்கடந்து புளியங்குளத்திற்குள் புகுந்துவிடலாம். முகமாலையை ஐந்தரைக்குள் எப்படியும் அடைந்துவிட வேண்டுமென்ற அவசரம் எங்கள் எல்லாரிடமும் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு எப்படியாவது சென்று கட்டிலில் விழுந்தால் தான் நிம்மதி ஏற்படும்.

பிக்கப் மிகவேகமாக வீதியில் விரைந்தது.

"முப்பது நிமிடங்கள் நாங்க பிந்திப்போனாலும் பரவாயில்லை. முப்பது வரியங்கள் முந்திப்போகக் கூடாது" என்றார் ஒரு பிரதேசச்செயலாளர் சிரித்த படி. ஆனால் பிக்கப்பின் வேகம் அவருக்குக் கலக்கத்தைத் தந்திருக்க வேண்டும். வின்சனின் வேகம் குறைந்தது.

"மெதுவாகப்போனாலும் நேரம் இருக்குது. போயிடலாம். தடைமுகாம் ஐந்ரைக்குத்தான் மூடப்படும். அப்ப ஆறுமணிக்குத்தான் வன்னியில மூடப்படும். தமிழீழ நேரத்திற்கும் ஶ்ரீலங்கா நேரத்திற்கும் அரைமணி வித்தியாசம்."

எல்லாருக்கும் மனதில் சற்று நிம்மதி விரிந்தது.

"பறியர்போடப்பட்டால் மருதங்கேணிக்குப் போய் ஏஜியோட தங்கலாம்."

"அதுக்கு வேறு தனியாகப் பொடியளிட்ட பேமிசன் எடுக்க வேணும். தெரியுமே?"

"ஏ9 றோட் திறந்தும் நிம்மதியாகப் பயணம் செய்ய முடியவில்லை. எத்தனை மினக்கேடு.? எத்தனை சோதனை? முன்னர் எங்களது பயணம் எவ்வளவு சுலபமாக இருந்தது?"

பிக்கப் பளைக் கடைமுகாமை அடைந்தபோது சரியாக மாலை ஐந்துமணியாகியிருந்தது. எங்களது வாகனத்திற்காகவே காத்திருந்ததுபோல பையன்கள் வீதிக்குக் குறுக்கே தடைத் துலாவை இறக்கிக் கட்டினார்கள்.

பிக்கப்பிலிருந்து அனைவரும் வேகமாக இறங்கினோம்.

“எங்களைவிட்டிட்டு பறியரைப்போடுங்கோ தம்பிமார். இப்ப உங்கட நேரம் ஐந்து தானே? ஐந்தரைக்குத்தானே மூடவேணும்..”

“உங்கட புதியநேரம் ஐந்தரையெண்டால் எங்கட பழையநேரம் ஐந்து தான். ஐந்துக்குத் தான் பறியர் மூடுகிறது. உங்களை இப்பவிட்டால் அங்க சூனியப்பிரதேசத்தில ஐசிஆர்சி இல்லை. அங்கால ஆமி தயாராக நிற்குது. சூடு தான் படுவியள்..”

“நீங்க விடுங்கோ..நாங்க அதைப் பார்த்துக் கொள்ளுறம். அவங்கள் விடுவாங்கள்”

அந்த இளம்பிள்ளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் படிந்திரந்த உணர்வினைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

“மன்னியுங்கள் ஐயா. உங்களை பறியரைத் திறந்து அங்கால விட எங்களுக்கு அதிகாரமில்லை. “

“ஆரிட்ட கதைக்க வேணும்..?”

“அங்க பணிமனையில பொறுப்பாளர் இருக்கிறார். போய்ப் பேசுங்கோ..” அவன் ஒரிடத்தைச் சுட்டிக்காட்டினான். அவனைக் கோபத்துடன் ஏறிட்டுவிட்டு நாங்கள் இருவர் அவ்விடத்திற்குச் சென்றோம்.

மேசை லாம்பின் முன் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவனது கரத்தில் வாக்கிரோக்கியோ மொபைல் தொலைபேசியோ இருந்தது.

"இருங்கோ ஐயா" என்றான்:" அங்கால இனிப்போக முடியாது. ஐசிஆர்சிக் காரர் போயிட்டினம். ஆமி வீதிக்குத்திரைபோட்டு சுருள் கம்பிகளை இழுத்துவிட்டு பறியர் போட்டுடிருப்பினம். போக முடியாது.."

"நாங்க டீ எஸ் மார்..கனபேர் இருக்கிறம். எங்க தங்குறது..?"

"எனக்கு அதிகாரமில்லை. நான் ஒரு தொலைபேசி நம்பர் தாரன். பளைக்குப் போய் அங்க இருக்கிற தொலைத்தொடர்பு நிலையத்தில பேசிப்பாருங்கோ."

"ஆற்ற நம்பர்..?"

"ஐஆர்சியின்ர.."

நாங்கள் ஏமாற்றத்தோட திரும்பி வந்து வாகனத்தில் ஏறி பளை நகரத்திற்கு வந்தோம். குறித்த இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டபோது அவர் அங்கில்லை எனப் பதில் வந்தது.

"இவங்கள் இப்படித்தான். பொடியள் அலைக்கழிக்கிறான்கள்."

3

**மீ**ண்டும் பளை பறியரை அடைந்தபோது கச்சேரி வாகனங்கள் வந்திருந்தன. அவற்றிலிருந்து இறங்கி பிரதேசச்செயலர்கள் நின்றிருந்தனர்.

"அவர் கதைக்கப்போயிருக்கிறார். பொறுப்பாளரை அவருக்குத் தெரியுமாம்."

"தெரிஞ்சவர் தெரியாதவர் என்ற கதை பொடியளிடமில்லை."

இரவு வேகமாகப் பற்றிப்படர்ந்து கொண்டிருந்தது. சென்றவர் திரும்பி வந்தார். முகத்தில் வாட்டம் தெரிந்தது.

"சரி வராது போலவிருக்கு. நிற்கட்டாம்."

"எங்க நிற்கிறதாம்?."

"வாகனத்தில விடியும் வரை இருப்பம். அல்லது எங்காவது இங்கத்த லொச்சுகளுக்குப் போவம்."

"இவங்கள் செய்யிறது கொஞ்சமும் நல்லாயில்லை. இப்படி பதினான்குபேரை மறிச்சு...போக விட்டிருக்கலாம்."

எல்லாரும் சலித்துக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துவிட்ட உறவினரின் மரணச்சடங்கில் கலந்து கொள்ள வந்த ஒரு குடும்பம் ஓட்டோ ஒன்றில் வந்திறங்கியது. ஒரு பெண் நிலத்தில் உட்கார்ந்து அழத்தொடங்கினாள். "அக்கா, கடைசி உன்ர சவத்திலாவது முழிப்பனா?"

"கடைசியாகக்கேட்டு வாறன். ஏப்படியாவது விடும் படி.. இல்லாவிட்டால் மருதங்கேணிக்காவது போய்த் தங்க வழிப்பாஸை மாற்றித் தரும்படி.." நான் மீண்டும் அவர்களின் பணிமனைக்குச் சென்றேன். பொறுப்பாளர் இருக்கவில்லை. வேறொரு இளைஞன் இருந்தான்.

"அவர் வெளியில போட்டார். உங்கட விடயமாகப் பேசத்தான். ஐசிஆர்சியோட இல்லாவிட்டால் ஆமியோட பேசி ஏதாவது ஒழுங்கு செய்ய.."

முகம் வாட நின்றோம்.

"ஏமாத்துறான்கள். உது சரி வராது. நீங்க வாங்க. இந்தப் பனிகொட்டும் ராவில வெங்கணாந்தி வெளியில இனிக் காலமை பறியர் திறக்கும் வரை நிக்க வேண்டியது தான்."

"என்ன தம்பி செய்யிறது?"

"போய் கொஞ்சம் பொறுமையாக இருங்க ஐயா. சிலவேளை சரி வரும்."

எங்களுக்கு நம்பிக்கை வரவில்லை. எல்லாரையும் மனதிற்குள் திட்டித் தீர்த்தபடி திரும்பி வந்தோம்.

வானம் சற்றுத் தெளிவாகவிருந்தது. இறைந்துகிடந்த நட்சத்திரங்கள் பிரகாசமாகப் புலப்பட்டன. குளிர்காற்று உடலைத் தழுவி அலுப்பைத் தந்தது. அப்போதே மருதங்கேணிக்குப் போய்த் தங்கியிருக்கலாம். பசிவேறு தன் இருப்பினைக் காட்டத் தொடங்கியது. அவசரம் அவசரமாக மதியம் சாப்பிட்டது. விரைந்து வரும் அவசரத்தில் இடையில் எங்கும் வாகனத்தினை நிறுத்தி தேனீர் கூடக்குடிக்கவில்லை.

என்ன வாழ்க்கை?

பளைத்தடைமுகாமில் இரண்டு இளைஞர்கள் காவல் இருந்தனர். அவர்கள் எங்களைப் பற்றி எதுவிதமான அக்கறையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பார்சல்களைப் பிரித்து இரவுணவைச் சாப்பிடத்தொடங்கினர்.

சயிக்கில்களில் போராளிகள் இருவர் வந்தபோது அவசரமாக எழுந்து பறியர் துலாவை உயர்த்திவிட்டனர்.

"உவங்கள் அங்கால போகலாமோ?"

"உதென்ன விசர்க்கேள்வி.?"

இருளை ஊடுருவிக் கொண்டு ரோச் வெளிச்சம் பணிமனைப் பக்கமிருந்து எங்களை நோக்கி வந்தது. யாரோ வருகிறார்கள்.

“ஆரோ வருகினம். எல்லாவிடமும் தொடர்பு கொண்டு பார்த்தம். தொடர்பு கிடைக்கவில்லை. என்ன செய்யிறது ஐயா என்று சாட்டுச் சொல்லப்போகினம்.”

பொறுப்பாளர் எங்களிடம் வந்தான்.

“கொஞ்சம் பொறுத்திருங்கோ. சரி வரும் போல இருக்குது. ஐசிஆர்சியோட தொடர்பு கொள்ள முடியவில்லை. முகமாலைக் கப்ரின் ஒருவரோடு தொடர்பு கொண்டிருக்கிறம். பார்ப்பம்..ஐயா.” என்று அந்த இளைஞனை அவநம்பிக்கையோடு பார்த்தோம். எங்களைத் திருப்திப் படுத்த முயல்கின்றானோ? நேரம் கழித்து வந்துவிட்டு அவர்களை ஏன் நாம் குறை சொல்வான் எனவும் மனதில் பட்டது.

“நான் சொன்னன் அப்படியே சொல்லிப்போட்டினம். இனி ஒருக்கா திரும்பி வந்து சொல்வினம் அது சரி வரவில்லை எண்டு. எனக்குத் தெரியும். ஏதோ கரிசனையாக எங்களுக்காகக் கஷ்டப்படுகிறதாகக் காட்டுகினம்.”

சாப்பிட்டுக்கொண்டிருந்த இளைஞன் சாப்பாட்டை மூடி வைத்துவிட்டு எங்களிடம் ஓடி வந்தான். அவன் கரத்திலிருந்த வாக்கிரோக்கி சிணுங்கியது.

“நீங்கள் போகலாம் ஐயா.”

வீதிக்குக் குறுக்கே இருந்த பறியர் துலா உயர்த்தப்பட்டது. எங்கள் பலரின் தலை கவிழ்ந்து கொண்டது. அவர்கள் எங்களை அளாப்பவில்லை. எங்களை அங்கால் அனுப்பி வைக்க இவ்வளவு நேரமாக முயன்றிருக்கிறார்கள்.

வாகனங்கள் பறியரைக் கடக்கும்போது அந்த இளைஞன் சொன்னான்:”முகமாலை வன்னிப்பக்க தடைமுகாமை நெருங்கும் போது வாகனத்தின் கூட்லைற்றுகளைப் போட்டு உங்களை அடையாளங் காட்டுங்கோ. அங்கால சூனியப்பிரதேசத்தைக்கடந்து

ஆமிப்போயின்ரை பொயின்ரை அடையும் வரை லைற் இருக்கட்டும். ஏலுமெண்டால் செத்தவீட்டிற்கு வந்து தவிக்கிற அந்த மூன்று பேரையும் ஏத்திப்போங்கோ.. அங்கால சொல்லுறம்."

நாங்கள் புலிகளின் தடைமுகாமை நெருங்கியபோது காவலிலிருந்த அந்த இளம் பெண்பிள்ளைகள் எங்களை வழிமறித்தார்கள். இந்த நள்ளிரவில் என் மகள் பேரப்பிள்ளைகள் ஒத்த வயதினர். படுத்து உறங்க வேண்டிய வேளையில் இங்கு காவலிருக்கின்ற அவர்களைப் பார்த்ததும் மனம் கனத்துக் கொண்டது. அந்த உணர்வினை என்னால் விபரிக்க முடிவில்லை. நாங்கள் என்னவென்னவெல்லாம் பேசிக்கொண்டோம்?

"வணக்கம் ஐயா..நீங்க எத்தனைபேர்?." என்று வாகனத்தை நெருங்கிய போராளிப் பெண் கேட்டாள்.

"எல்லாருமா பதின்னான்கு பேர்"

வாகனங்களைப் பார்வையிட்ட அப்பெண் திரும்பி வந்தாள்.

"பயணிகள் மூவர் வருவதாக அறிவிச்சினம் ஐயா."

"பிரச்சினை வரலாமென்று அவர்களை ஏத்திவரவில்லை."

அவள் எங்களை ஏறிட்டுப் பார்த்தாள். அப்பார்வையின் காங்கை எங்களைச் சுட்டது. மீண்டும் தலை குனிந்தது.

"சரி ஐயா நீங்க போகலாம்."

மனம் கனக்கத்தொடங்கியது. சூனியப்பிரதேசத்தினைக் கடந்து இராணுவ சென்றியை அடைந்தோம். வீதிக்குக் குறுக்கே திரைச்சேலை இழுத்து மறைக்கப்பட்டு முட்கம்பிச்சுருள் போடப்பட்டிருந்தது.

வாகனங்களைக்கண்டதும் துப்பாக்கிகளை ஏந்திய இளம் இராணுவ வீரர்கள் முன்னால் வெளிப்பட்டனர். எங்களைப் பார்வையிட்டபின்னர், "பசெஞ்சர் மூணுபேர் வாறதாகச் சொன்னது எல்ரிரி.. அவங்க எங்க.?" என்று கப்ரின் தரத்திலான இராணுவ வீரன் அதே கேள்வியைக் கேட்டான்.

மனம் மீண்டும் கனக்கத்தொடங்கியது.

*- நமது ஈழநாடு 2004*

# அபகமம்

**அ**வனது இரண்டு கைகளும் வலது கரங்களாக இருந்தன. பாதங்கள் இரண்டும் இடது பாதத்திற்குரியவை. அவனது ஒரு காதுச்சோனை முன் பக்கம் நோக்கியும் மற்றக் காதுச்சோனை பின்பக்கம் நோக்கியும் அமைந்திருந்தன. வேறு மாற்றங்கள் அவனிடமில்லை.

உருவ உள்வாங்கியின் முன் தள்ளப்பட்டு உறங்கு நிலை வட்டத்துள் அவன் பிறந்த மேனியாக நின்றிருந்தான். வியப்புடன் அவனை நோக்கிய மயூரன் அந்த உருவத்தை உயிர்ப்பு நிலை வட்டத்துள் தள்ள முயன்றபோது ராசி எச்சரித்தது: "தாமதப்படுத்து தவறு நிகழ்ந்து விட்டது."

*****

**வா**னளாவி உயர்ந்திருந்த அந்தக் கட்டிடத்தினுள் மயூரனுடன் நுழையும்போது எழிலுக்கு வெகு உற்சாகமாகவிருந்தது. நான்கு மாத ஆசை அன்று தான் நிறைவேறியது. கணவனுடன் அவன் வேலை செய்யும் அலுவலகத்திற்குள் பிரவேசிக்கும் அனுமதி இன்று தான் கிடைத்தது. நகரத்தின் மத்தியில் உயர்ந்தமைந்திருந்த அந்தக் கட்டிடத்தையும் அதன் மேலுச்சியில் பொருத்தப்பட்டிருந்த விதம்விதமான அண்ரனாக்களையும் தூரத்திலிருந்து பார்த்ததோடு சரி. அதனுள் இயங்குகின்ற செயற்பாடுகளை அவள்

அறிந்தவளல்லள். அவர்கள் படியேறியபோது 'எம்சிஈஈ' என்ற ஆங்கில எழுத்துக்கள் ஒளிர்ந்தன.

"மினிஸ்ட்ரி ஒப் கன்ஸர்வேர்சன் ஃபார் ஏர்த்ஸ் ஈக்குவிலிபிரியம்" என்றான் மயூரன். தொடர்ந்து "அதாவது பூமியின் சமநிலையைப் பேணும் அமைச்சு." என்று சிரித்தான்.

"இந்தப்பெரிய கட்டிடத்தில் நீங்கள் ஒருவரா வேலை பார்க்கிறீர்கள்?"

"எனது செக்சனில் நான் ஒருவன் மட்டுமே. அனைத்துக் காரியங்களையும் கம்பியூட்டர்கள் கவனிக்கின்றன. இந்த அமைச்சின் தலைமைச் செயலர் ராசி என்ற கணனி தான். ஒவ்வொரு செக்சனிலும் ஒவ்வொருவரே வேலை பார்க்கின்றனர்."

எழிலி சிரித்தாள்.

"இனியாவது சொல்லுங்கள். எனக்கு அனுமதி கிடைத்து விட்டதே? இங்கு உங்கள் பணி என்னவென்று சொல்லலாந்தானே?"

கணவனின் வேலை என்னவென்று அவளுக்கு இன்னமும் தெரிந்திருக்கவில்லை. அவன் பணியின் விபரம் தெரிய வரக் கூடாதென்பது கட்டளை. அவர்களுக்குக் கலியாணமாகி நான்கு வருடங்களாகிவிட்டன. ஒரு குழந்தையும் உள்ளாள்.

"உள்ளுக்குள் வந்து நீயே நேரில் பாரேன்."

"அதற்குள் சொல்லுங்கள்."

"நீயும் தர்சி மாதிரி ஒரு சிறு குழந்தை தான். அவளுக்கு எங்களுடன் இங்கு வரமுடியவில்லை என்பதில் சரியான வருத்தம் கவனித்தாயா?"

"ஆமாம் சொல்லுங்கள்."

"பராக்சிமா செண்டாரி பிளானெட்டுகளில் எங்களுக்கு ஒரு கொலனி உள்ளது. தீயோகு என்ற கோள் பூமிக்குச் சொந்தமாகவுள்ளது. பூமி மாதிரி வளிமண்டலம், நீர், பச்சைப்பசுமை, விலங்குகள் அனைத்துமுள்ளன. ஆனால் அங்கு இன்னமும் மனிதன் பரிணாமமடையவில்லை. தோன்றவில்லை. தியோகுக் கோளில் ஏராளமான கனிப்பொருட்கள், உலோகங்கள் உள்ளன. அங்கு மக்களைக் குடியேற்றி வருகின்றோம். அங்கு மக்களைக் குடியேற்றி வருகின்றோம்."

"இந்த விபரங்கள் எனக்குத் தெரியும். அதற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவசரப்படாமல் கேள் எழிலி. நீ இன்று படு உற்சாகமாக இருக்கிறாய். எமது முன்னோர்கள் நொடிக்கு 30 ஆயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் ராம் ரொக்கெட்களில் பயணப்பட்டு ப்ராக்சிமா சென்றடைய 43 வருடங்கள் எடுத்தது. இன்று அப்படியல்ல. மனோவேகம். அங்கு அனுப்ப வேண்டியவரை உருவெளித் தள்ளியினுள் நிறுத்திவிட்டு பட்டனை டச் பண்ண வேண்டியது தான். அவர் தியோகு கோளின் உரு உள்வாங்கியின் அங்கு வெளிவருவார். அங்கிருந்து ஏதாவது ஒன்றை அல்லது ஒருவரை இங்கு அனுப்ப வேண்டுமாயின் அங்குள்ள ...."

"புரிகிறது. "என்றாள் எழிலி.

"நான் அப்படிப்பட்ட செக்சனில் வேலை பார்க்கின்றேன். உரு உள்வாங்கியையும் உரு வெளித்தள்ளியையும் இயக்கும் பணி என்னுடையது. இதில் வெகு அவதானமாக இருக்க வேண்டும்."

"ஏன்?"

"புவியின் சமநிலையும் தியோகுக்கோளின் சமநிலையும் பாதிக்கப்படக் கூடாது.' என்றான் மயூரன்.

"புரியவில்லை?"

"மண்டு மண்டு.." என்று சிரித்தான்." பூமியில் இயற்கையாக இருக்கின்ற பொருட்கள் பெருகுவதால் பூமியின் பாரம் பாதிப்புறாது. பூமிக்குச் சம்பந்தமில்லாத ஒரு பொருள் இங்கு வந்து சேரும்போது சமநிலை குலையப்பார்க்கிறது. அவ்வாறு தான் தியோகுக் கோளிலும்...அதனால் நாங்கள் வெகு அவதானமாகச் செயற்படுகின்றோம். இங்கிருந்து ஒருவரை அல்லது ஒரு பொருளை உரு வெளித்தள்ளி மூலம் அங்கு அனுப்பும்போது அங்கிருந்து ஒன்றை உரு உள்வாங்கி மூலம் இங்கு எடுத்துக் கொள்கின்றோம். இரு நிகழ்வுகளும் ஒரே நேரத்தில் நிகழ வேண்டும். புரிகிறதா?"

அவளுக்கு நன்கு புரிந்தது.கணவனை வியப்புடன் பார்த்தாள்.

"இருபத்திநான்காம் நூற்றாண்டுப் பெண் நீ. உனக்கு இப்படியான வியப்பு இருக்கத் தேவையில்லை."

அவள் ஏனோ அன்று வித்தியாசமாகச் சிரித்தாள்.

*****

**அ**வனது இரண்டு கரங்களும் வலது கரங்களாகவிருந்தன. பாதங்கள் இரண்டும் இடது பாதத்திற்குரியவை. அவனது ஒரு காதுச்சோனை முன் பக்கம் நோக்கியும் மற்றைய காதுச்சோனை பின்பக்கம் நோக்கியும் அமைந்திருந்தன.

உருவ உள்வாங்கியின் முன் தள்ளப்பட்டு உறங்கு நிலை வட்டத்துள் பிறந்த மேனியாக நின்றிருந்தான். வியப்புடன் அவனை நோக்கிய மயூரன் அந்த உருவத்தை உயிர்ப்பு நிலை வட்டத்துள் நகர்த்த முயன்றபோது ராசி எச்சரித்தது: "தாமதப்படுத்து. தவறு நிகழ்ந்து விட்டது."

மயூரனும் எழிலியும் அடங்கா வியப்புடன் பார்த்தபடி நின்றனர்.

இந்தப் பூமிக்குப் புதியவன். வேறு கிரகத்தவன். எப்படியோ உருவ உள்வாங்கியுள் வந்துவிட்டான்.

"இன்னமும் 3.005 நொடிகளேயுள்ளன" என்றது ராசி.: " அவனுக்குப் பதிலாக வேறொருவரை உடன் வெளியில் தள்ளு."

"யாரை? அவனையே உருவெளித் தள்ளிக்கு நகர்த்தவா?"

"நிறுத்து.."என்று அவசரப்பட்டது, ராசி: " அவன் அராய்ச்சிக்குத் தேவையானவன். அற்புதப்படைப்பு. நல்ல தொரு ஸ்பெசிமன்.."

"இங்குள்ள றொபேட்களில் ஒன்றை..."

"அவை அவசியமானவை."

ரோபேட்களின் லேசர் துப்பாக்கிகள் அவர்களை நோக்கி மெதுவாக உயர்ந்தன. மயூரனும் எழிலியும் ஒருவரையொருவர் பயத்துடன் நோக்கினர். அந்தக் குளுகுளு மண்டபத்தில் வியர்த்துக் கொட்டியது.

மயூரனுக்குப் புரிந்தது, நடக்கவிருக்கும் பயங்கரம்.

"நானே போகிறேன்" என்று அவன் எழுந்தான்.

"ஐயோ.."என்று எழிலி அலற ராசி உறுமியது: "நீ செல்ல முடியாது. நீ இந்தப் பூமிக்கு அவசியமானவன். ஆசாத்திய அறிவாளி. உன்னை இழக்க முடியாது.இன்னமும் 1.005 நொடிகளேயுள்ளன. வேறெவரையும் தயார்ப்படுத்த முடியாது. பூமியின் சமநிலை குலையப் போகிறது. ஆவளை உடன் அனுப்பு."

"முடியாது " என மயூரன் அலறினான்.ரோபேட்கள் அவளை நெருங்கின.

கணப்பொழுதில் அவள் நிர்வாணமாக்கப்பட்டாள். உருவெனித்தள்ளியினுள் எறியப்பட்டாள்.

"ஐயோ..என் குழந்தை..தர்சி. உங்களை.."எழிலி உறங்குநிலையில் ஆழ்ந்துவிட..

"அவளை தியோகு கோளிற்கு அனுப்பிவிடவா?" என மயூரன் கெஞ்சினான்.

"முடியாது. அங்கும் சமனிலை பாதிப்படையும். அனுப்பு.."

அவன் விரல் நடுங்கியவாறு பட்டன் ஒன்றில் பதிந்தது.

எழிலி புவியீர்ப்புக்கு அப்பால் வானவெளியில் வீசியெறியப்பட்டாள்.

- *கலைக்கதிர் பெப்ரவரி 1994*

# நிசப்த நகரம்

'நகரங்கள் உறங்குவதில்லை' என்பதன் அர்த்தம் பனிக்குளிர் நீங்காத வைகறைப் பொழுதொன்றில் அந்த நகரத்தின் எல்லையில் கால்வைத்தபோது வாமாவுக்குத் தெரிந்தது.

சப்தத்தின் ஆதிக்கமே நகரத்தில் மேலோங்கி நின்றது. இயற்கையின் இன்னிசைக்குப் பதிலாக மனித நாகரிகத்தின் குறியீடுகளான கருவிகளின் பேரிசைச்சலே நிறைந்துகிடந்தது.

மேசைமுன் கோவைகள் சில கிடந்தன. அந்த மாதத்திற்குரிய 'ஒலி அறிக்கை மதிப்பீடு' கோவை அவனுக்குத் தேவைப்பட்டது. அழைப்பு மணியை அமுக்கினான். சுரேன் வரவில்லை. பலமாக அமுக்கினான். அவன் செவிப்புலன்களைப் பாதிக்கும் போவ ஒலி. சுரேன் வந்தான்.

"ஒலி அறிக்கை பைலை வாங்கி வா, சுரேன்."

"என்ன சார்?"

வாமா மீண்டும் கூறினான்.

"சற்றுப் பலதாகக் கேளுங்களேன்..வாய்க்குள் முணுமுணுத்தால்.."என்றபடி சுரேன் வெளியேறிக் கோவையுடன் திரும்பி வந்தான்

. கோவையில் நகரத்தின் வெவ்வேறு பகுதிகளில் பகலிலும் இரவிலும் ஒலியதிர்வின் செறிவு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

கைத்தொழிற்பகுதி – 102 dB(A) (டெசிபல்), வர்த்தகப்பகுதி – 98 dB(A), வதிவிடப்பகுதி – 96 dB(A), அமைதி வலயம் (பாடசாலை, வைத்தியசாலை, நீதிமன்றம்) – 78dB(A). சென்ற மாதத்திலும் பார்க்க நான்கு சதவீத அதிகரிப்பு காணப்படுகின்றது. சப்தக்கட்டுப்பாட்டில் ஒருவிதமான அபிவிருத்தியும் காணப்படவில்லை என வாமா கவலையுடன் தனக்குள் கூறிக்கொண்டான்.

அடுத்த அறிக்கையில் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் செவிப்புலன் அறிக்கை இருந்தது. சென்ற மாதத்தில் அவர்களில் தொன்னூறு சதவீதத்தினரின் செவிப்புலன் 8KHz (கேர்ஸ் - Hertz) கேட்கும் சக்தியை இழந்திருந்தனர். இந்த மாதம் அவர்கள் 121KHz கேட்குந் திறன் இழந்திருந்தனர்.

**வா**மா அப்படியே கதிரையில் சாய்ந்து கொண்டான். இந்த நகரம் எத்தகைய அபாயத்தை நோக்கி நகர்கிறது என்பதை அவன் பனிக்குளிர் நீங்காத வைகறைப் பொழுதில் இந்த நகரத்தின் எல்லையில் கால் வைத்தபோதே புரிந்து கொண்டான். அந்த நாள் நன்கு நினைவிருக்கிறது.

வாமா தன்னை ஒரு கணம் சிலிர்த்துக் கொண்டான். புகை படர்ந்த நிலையில் மின் ஒளியில் நகரம் ஒளிர்கிறது. பனிப்புகாருடன் தொழிற்சாலைப் புகையும் படர்ந்து கவிந்திருக்கிறது.

பேரிசைச்சலுடன் டிஜட் விமானம் ஒன்று தளத்தில் இறங்குவதற்காகப் பதிந்து சென்றது. காதுச் சவ்வுகளைக் கிழித்துவிடும் ஒலி அதிர்வு. அவன் அவ்விடத்தில் தரித்து நின்ற ஐந்து நிமிடங்களுள் இரு விமானங்கள் பதிந்து இறங்கியும், இரு விமானங்கள் கிளம்பி எழுந்தும் சென்றுள்ளன. இந்த விமானங்களின் பேரிசைச்சல் 100 dB(A) ஒலி அதிர்வுக்கு மேலாக இருக்குமென வாமா எண்ணிக் கொண்டான்.இந்த அளவு நிச்சயமாகச் செவிப்புலன்களுக்குப் பாதிப்பைத்தரக்கூடியன.

தூரத்தில் பஸ் ஒன்று விரைந்து வருவது தெரிந்தது. அவன் தனது பயணப் பையைத் தூக்கிக் கொண்டு ஆயத்தமாக அவனருகில் பஸ் வந்து நின்றது. பஸ்சின் கதவு தானாகத் திறக்க விரைந்து ஏறிக்கொண்டான். இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. சௌகரியமாக நிற்பதற்கும் இடமற்ற நெரிசல். இருந்தபடியும் நின்றபடியும் அந்த அதிகாலைக் குளிரில் பயணிகள் உறங்கிக்கிடந்தனர்.

"எங்கே போகிறது?" என பஸ் கொண்டக்டர் பெருங்குரலில் சத்தமிட்டுக் கேட்டான். 'ஏன் இப்படி இவன் சத்தமிடுகிறான்?'

"சூழல் பாதுகாப்புத் திணைக்களம்.."

"ஏனய்யா, வாய்க்கள் முணுமுணுக்கிறாய்? சற்றுப் பலமாகச் சொல்லன்."

வாமாவை வியப்பு ஆட்கொண்டது. நிச்சயமாக அவன் சாதாரண சம்பாசனைக்குரிய 30dB(A) ஒலியதிர்வில் தான் பேசினான். அது கொண்டக்டருக்குக் கேட்கவில்லை.

"சூழல் பாதுகாப்புத்திணைக்களம்.."என்றான் பலமாக.

"எந்தக் களம்?"

"டிப்பார்ட்மென்ற் ஒ்.ப் என்வயரர்மென்ற் புறெரெக்சன்..."

"அப்படி நல்ல தமிழில் சொல்வது தானே? ஆதைவிட்டிட்டு ஏதோ களம் என்கிறீர்? நீர் மலையாளியா?"

"இல்லை..யாழ்ப்பாணி..."

"நினைச்சன்.."

பஸ் விரைகிறது. அவன் முன்னூறு கிலோ மிட்டருக்கு அப்பாலுள்ள கிராமம் ஒன்றினைச் சேர்ந்தவன். அது ஓர் அழகிய பழைய கிராமம். நவீனத்துவத்தின் வசதிகள் அக்கிராமத்திலிருந்த போதிலும் பழைய அழகையும் சூழலையும் பேணிப் பாதுகாக்கும் விதத்தில் பொறுப்போடு உருவாக்கப்பட்ட கிராமங்களில் ஒன்று. குளங்கள், வயல் வெளிகள், தோட்டங்கள், பாதுகாக்கப்பட்ட காடு, விலங்குகள் என்பன அக்கிராமத்தின் உயிர்ச்சூழலைப் பேணின. எங்கும் இயற்கையின் இனிய நாதம் பரவிக்கிடக்கும். அத்தகைய சூழலில் வாழ்ந்த வாமா, தொழில் மாற்றத்தால் நகரத்திற்கு வர நேர்ந்து விட்டது. நகரத்தின் யந்திரமயமான இயக்கத்தோடு அவனால் இயைபாக்கம் பெற முடியுமா என்பது இனித் தான் தெரியும்.

பஸ் ஓரிடத்தில் தரித்து நின்றது. அவன் இறங்கி நடைபாதையில் நின்றான். பேரிசைச்சல் காதுகளைத் தாக்கியது. திறந்த வெளியில் நிற்கும்போது நகரத்தின் இரைச்சல் நன்கு கேட்கிறது.

மோட்டார் வாகனங்கள் வரிசையாக விரைந்தன. அருகில் புகையிரதங்களின் இரைச்சல். இனந்தெரியாத தொழிற்சாலை எந்திரங்களின் ஒலி. வானமும் விமானங்களின் விரைவால் கலங்கிக் கிடந்தது.

அவன் இறங்கி நின்ற இடத்திற்கு எதிரே ‘சூழல் பாதுகாப்புத்திணைக்களம்’ என்ற பெயர்ப்பலகையுடன் வெண்ணிற மாடிக்கட்டிடம் ஒன்று உயர்ந்து நின்றது. அவன் பதவி ஏற்கவிருக்கும் பணிமனை அது தான். அங்கு அவனுக்கென ஓரறையும் ஆளணியினரும் இருப்பார்கள்.

அறை வாசலில் ADEP(N) எனப்பெயரிடப்படடிருக்கும். ‘அஸிஸ்டன் டிறக்கர் ஒ.ஃப் என்வயரன்மென்ற் புரட்டக்ஸன் (நொய்ஸ்) - சூழல் பாதுகாப்பு உதவிப் பணிப்பாளர் (ஒலி).’

நகரத்தின் இரைச்சல் அவனுக்குத் தலைவலியைக் கொடுத்தது. அப்பொழுது தான் போட்டலைத் திறந்த எதிர்க் கடைக்காரன்

அத்பிளிபயரைத் திறந்து நகரம் முழுவதும் கேட்கத் தக்கதாகச் சினிமாப்பாடல் ஒன்றை ஒலிபெருக்கத் தொடங்கினான். நிச்சயமா 'இயர்ம.்.ப்' ஒலியடக்கியை நிரந்தரமாகக் காதுகளில் மாட்டிக் கொள்ளத்தான் வேண்டும். திணைக்களம் திறப்பதற்கு இன்னமும் மூன்று மணிநேரம் இருக்கிறது. அதுவரை என்ன செய்வது? எதற்கும் இயர் ம.்.பை மாட்டிக் கொள்வோம்.

அவன் தனது பயணப்பையைத்திறந்து வலது கரத்தால் துளாவி ஒரு சிறு கருவியை எடுத்தபோது திடீரென எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஒருவன் அவனைப் பற்றிக் கொண்டான். அவனது ஒரு கரத்தில் கைத்துப்பாக்கி இருந்தது.

"ஏய்..ஏய்..என்னவிது?"

"நான் உம்மை அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறன். ஐ சஸ்பெக்ற் யூ..பாக்கைத் தூக்கிக் கொண்டு ஸ்டேசனுக்கு நடவும்.."

"நீர் யார்?"

அவன் தனது சேர்ட் பையிலிருந்து ஒரு 'காட்'எடுத்து அவனிடம் நீட்டினான். 'எஸ்.ரகுராம், விசேஷ புலன் ஆய்வுத்துறை' என அவனது படத்துடன் இருந்தது.

காவல்துறையில் அவனது பயணப்பை ஆராயப்பட்டது. கைக்கு அடக்கமான ஒரு கருவி ரகுராமைப் பயப்படுத்தியது.

"இதென்ன..கைக்குண்டா? பொம்ஸா?"

வாமாவிற்குச் சிரிப்பு வந்தது. "இது எஸ்.பி.எல். (SPL) மீட்டர்."

"அப்படி என்றால்..?"

“சவுண்ட பிரஸ்சர் லெவல் மீட்டர்..சத்த அழுத்தமானி. ஓரிடத்தின் சத்த அளவை அளவிடும்..” அவன் தனது அடையாள அட்டையையும் பதவி நியமனக் கடிதத்தையும் எடுத்துக் காட்டினான்.

அவற்றைப் பார்வையிட்ட ரகுராம், “மன்னித்துக் கொள்ளும்” என்றான்.

“பரவாயில்லை..”

“நகரத்தில் சட்ட மீறல்கள் அதிகரித்துள்ளன. ஆயுதக் கலாசாரம் வளர்ந்துவிட்டது. குண்டெறிதலும் பாம்ஸ் வைத்தலும் நிதம் நிகழ்கிறது. ஒவ்வவொரு நாளும் இரண்டு மூன்றுபேர் பாம்ஸ்களுடன் பிடிபடுகிறார்கள்.”

வாமா சிரித்தான்.

“ஒரு ரிக்குவெஸ்ட்..”

“கேளும், வாமா..”

“இன்னும் இரு மணிநேரம் இங்கு இருந்துவிட்டுச் செல்கிறேன்.வீதியில் இறங்கி நிற்கப் பயமாக இருக்கிறது.”

“தாராளமாக...இங்கு என்ன செய்யப் போகிறீர்?”

“நகரத்தின் இரைச்சலை எவ்வாறு குறைக்கலாமென வழிவகை கூறப்போகிறேன்.”

இந்த நகரத்தில் பதவி ஏற்க வந்த முதல் நாளே அவன் கைதாக நேர்ந்த சம்பவத்தை மூன்றாண்டுகளுக்குப்பின் நினைத்தாலும் சிரிப்பாகவும் சற்று வேதனையாகவும் இருக்கிறது. அந்தச் சம்பவத்தின் பின்னர் ரகுராமும் அவனும் நண்பர்களாகிவிட்டனர்.

பொது நிகழ்ச்சிகளுக்கு இருவரும் அடிக்கடி ஒன்றாகச் சென்றனர். மூடிய மண்டபங்களுள் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளில் ஒலிபெருக்கிகள் எழுப்புகின்ற சத்தத்தின் தாக்கம் அவனைப் பயமுறுத்தியது.

"என்ன சவுண்ட் சிஸ்ரம், வாமா. முணுமுணுக்கிறது. கொஞ்சம் சத்தமாக வைக்கலாம்.." என்பான் ரகுராம். வாமா துடித்தப் போவான். அவன் காதுகளில் மாட்டியுள்ள ஒலியடக்கியையும் மீறும் சத்தம். அந்த மண்டபத்தில்இருப்போரில் பெரும்பாலோர் செவிடாகி வருகிறார்கள என்பதை உணர்ந்தபோது வேதனை தலை தூக்கும்.

அவன் இயர் மஃப்பை எப்பொழுதும் மாட்டியிருப்பான். அதனைப்பார்த்துச்சிலர், "உங்களுக்கு காது கேளாதா?"என இரக்கத்தோடு கேட்பார்கள்.

சத்தத்தைக் குறைக்க அவன் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவ்வளவு தூரம் பயனளிக்கவில்லை.

தனது கவலையை ரகுராமிடம் சொல்வான்: "நகரத்திலுள்ளவர்களின் செவிப்புலன் பாதிப்படைந்து வருகின்றது?"

"நானும் கவனித்தேன் வாமா. நகரத்தில் ENT கிளினிக்குகள் அதிகரித்து வருகின்றன. செவிட்டுத் தன்மை அதிகரித்தால் யாது நிகழும்?"

"காது கேளாது. பேச வராது. தான் பேசுவது தனக்குக் கேட்காவிட்டால் பேச வராது. பிறக்கின்ற பிள்ளைகள் ஊனங்களாகிவிடும். கருத்துப் பரிமாற்றம் நிகழாது போய்விடும். மனித வாழ்வே அற்றமற்றதாகிப் போய்விடும். சட்டத்தின் மூலம் தடுக்கப் பார்த்தோம். அரசியல் வாதிகள் குறுக்கிடுகிறார்கள். இயர் மஃப்பை எல்லாரும் பாவிக்கச் சொன்னோம். கஷ்டமென்று எல்லாரும் கழற்றி எறிந்து விட்டார்கள். நானும் எனது அமைதியான கிராமத்திற்குத் திரும்பிச் சென்று விடுவதென முடிவு செய்திட்டேன்."

ரகுராமின் முகத்தில் கவலை படர்ந்தது.

மேசையிலிருந்த அழைப்பு ஒலிப்பானை அமுக்க அது அவனது பணிமனைச் சிற்றூழியனை அழைத்தது. வாசலில் அமர்ந்திருந்த சுரேனுக்கு அது கேட்கவில்லை. காரணத்தைப் புரிந்து கொண்ட வாமா ஒளிப்பானை அமுக்கினான். அது வாசலில் பொருத்தியிருந்த சிவப்பு மின்குமிழை ஒளிரச் செய்தது. சுரேன் விழுந்தடித்து அறைக்குள் ஓடிவந்தான்.

"என்ன சேர்?"

"மணி அடித்தேனே?"

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஒன்று மில்லை..கோப்பி ஒன்று தேவை" என சைகை காட்டினான்.

சுரேன் திரும்பிப்போகும் போது, 'இந்த மனிசன் ஏன் தான் முணுமுணுக்கிறதோ? தொண்டையில் ஏதோ பழுது' என்று கூறிக்கொண்டு செல்வது வாமாவிற்குக் கேட்கிறது.

கவலையை மீறிச் சிரிப்பு அவனை ஆட்கொண்டது.

அன்று காலை அவன் பணிமனைக்கு வந்தான். வழமை போலவே அனைத்தும் நிகழ்ந்தன. ஜெட் விமானங்கள் பேரிசைச்சலுடன் வானில் கிளம்பின. மோட்டார் வாகனங்கள் இடையறாது ஒலி எழுப்பியபடி வீதியில் விரைந்தன. எதிர் ஹோட்டல் அம்பிளிபயர் நகரத்திற்கே கேட்க அலறியது. முக்கள் பெருங்குரலில் சத்தமிட்டுப் பேசியவாறு நடந்தனர்.

சரியாகப் பதினொரு மணிக்குத் தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவனைத் தவிர அந்த அலுவலகத்திலுள்ள அனைவரும் பரபரப்படைந்தனர். சுரேன் ஓடிவந்தான்:

"சேர்..சேர்..உங்களுக்கு வெற்றி..நகரத்தில் ஒரு சத்தமுமில்லை. சத்தமில்லாத நகரமாகிவிட்டது."

வாமாவுக்கு எல்லாச் சத்தங்களும் வழமைபோலக் கேட்டன. இதோ ஜெட் விமானங்களின் இறங்கல் இரைச்சல்.

அவன் வியப்புடன் சுரேனைப் பார்த்தான்.

"நீ பேசுவது உனக்கக் கேட்கிறதா?"

"கோப்பியா? இதோ கொண்டுவாறன்."

வாமா தனது இருக்கையில் தொப்பென அமர்ந்து கொண்டான். தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டான். நெஞ்சம் அழுதது.

அந்த நகரம் செவிடாகிவிட்டது. இனி ஊமையாகிவிடும்?

- ***கலைக்கதிர் ஜனவரி 1997***

# தண்ணீர் தண்ணீர்

ஆயிற்று. கூட்டம் நிறைவுறப் போகின்றது. காற்றில் கலந்து வரும் தன்மையை மீறி ஒட்டியுலர்ந்த அச்சிறுவர்களில் உடல் வெம்மைப்பட்டு வியர்க்கின்றது. கடும் பசியோடு விழி மூடாது நாவில் உமிழ்நீர் சொட்ட இறைச்சிக் கடையில் தொங்கும் ஊனைப்பார்த்து நிற்கும் நாய்களின் நிலையில் அவர்கள் மேடையிலிருந்த மேசையையும் அதில் வைக்கப்பட்டிருந்த அப்பொருளையும் பார்த்துக் கொண்டிருந்தனர். மேடையிலிருந்த பேச்சாளர்கள் இறங்க வேண்டிய தான் தாமதம். மேசையை நோக்கி அவர்கள் பாயத் தயாராகவிருந்தனர். நேற்று மாலை அவர்களுக்கு அரைப் பைந்தளவில் தான் வழங்கப்பட்டது. அடுத்தது இன்று மாலைதான். அதுவரை தாக்குப் பிடிக்க முடியாமலிருந்தது. நாக்கு வறண்டு, உதடுகள் வெடித்திருந்தன.

மேடை காலியாகவில்லை. கதிரைகளை விட்டு எழுந்து நின்ற பேச்சாளர்கள், தமக்குள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்: அரசியல்வாதிகள். பேச்சுக்குக் குறைவா இருக்கப் போகின்றது?

“நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வருகின்றது. இனியும் தொடர விட்டால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எவரும் வாழமுடியாத நிலை தோன்றிவிடும்” என்றார் மதிவாணன். அவர் அரசின் சுற்றுச்சூழல் பேணல் அமைச்சர்.

'உண்மை. குடமுருட்டி நீர்த்தேக்கத்திலிருந்து குடாநாட்டிற்கு அமைக்கப்பட்டு வரும் குழாய் நீர்த்திட்டம் எப்போது நிறைவேறும்...?' என்று கவலையோடு வினாவினார் கலையழகன். அவர் திட்டமிடலமைச்சின் ஆறாவது துணை அமைச்சர்.

'உமக்கு அது தெரியாதா! 2010 அம் ஆண்டு அந்த நீர்த்திட்டத்தை ஆரம்பித்தீர்கள். இப்போ ஐந்து தசாப்தங்கள் முடிந்து 2060 ஆம் ஆண்டில் கால் வைத்துள்ளோம். இவ்வளவு காலமும் என்ன செய்கிறீர்கள்?' என்று முதலமைச்சர் சுவாமிநாதன் கடிந்து கொள்கின்றார். பின்னர் தொடர்ந்தார். 'உங்களையும் உங்கள் குடமுருட்டி நீர்த் திட்டத்தையும் நம்பிப் பயனில்லை. நான் ஜி.ரி.சற் சமர்ப்பித்துள்ள திட்டத்தைப் பரிசீலிக்கவிருக்கிறேன். கடல் நீரை நன்னீராக்குவதைத் தவிர வேறு மார்க்கமில்லை... தமது வருமானத்தில் ஐம்பது சதவீதத்தை அதற்கு ஒதுக்க நேரிடும்...'

முதலமைச்சரை அனைவரும் கவலையோடு பார்த்தார்கள்.

'நாங்கள் தற்போது மக்களுக்கு வழங்கி வருகின்ற நாளாந்த குடிநீர் அளவை இருமடங்காக்கும்படி மக்கள் வேண்டுகின்றார்கள், தலைவரே' திட்டமிடல் அமைச்சர் அவசரமாகக் குறுக்கிட்டார். 'அது சாத்தியமில்லை... யாழ்ப்பாணக் குடாநாட்டின் இருபத்திநாலாயிரம் கிணறுகளில் இறுதியாக எடுத்த அளவீட்டின்படி பதினெண்ணாயிரம் கிணறுகள் மிகை நீர்பாவிப்பால் உவர் நீராகிவிட்டன. யாழ்ப்பாண நகரம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரக் கிணறுகளில் மூவாயிரம் கிணறுகளில் மாசு சேர்ந்து விட்டது. மலக்குழிகளை அளவு கணக்கின்றி கிணறுகளருகே வெட்டி தரைக்கீழ் நீரை நாசப்படுத்திவிட்டனர். தரைக்கீழ் நீர் முற்றாக நாசமாகி விட்டது. தேக்கும் மழைநீரையும் இறக்குமதியாகின்ற ஸ்பிரிங்வாட்டரையும் சேர்த்து ஒன்றரை லட்சம் மக்களுக்கு நாளாந்தம் தலைக்கு அரைப்பைந்துக்கு மேல் வழங்க முடியாது இருக்கின்றது... இந்தியாவிலிருந்து இம்முறை தண்ணீர்க் கப்பல் வரப்பிந்தியும் விட்டது.... காங்கேசன் துறையிலுள்ள இராட்சத நீர்த்தொட்டிகளில் ஒன்றில் வெடிப்பும் அவதானிக்கப்பட்டுள்ளதாம்...'

முதலமைச்சர் தலையில் கைவைத்து பெருமூச்சு விட்டார். "யாழ்ப்பாணக் குடாநாடு எவ்வளவு அற்புதமான நாடாக விளங்கியது. மயோசீன் காலச் சுண்ணாப்புக்கல் படுக்கைககள் மழைநீரைப் பொசிய விட்டு தரைக்கீழ் நீர் அமுதைத் தேக்கி மக்களுக்கு தேவைப்படும் போது வழங்கி வந்தன. இன்றும் நீர்ப்படுக்கைகள் இருந்தாலும் அவை மானிடத் தேவைக்கு உதவாதவையாக தம் இயல்பை இழந்துவிட்டன."

"எமது மூதாதையர் விட்ட தவறுகள்... 1981களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒன்பது லட்சம் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் குளிக்க, குடிக்க, தோட்டம் செய்ய தரைக்கீழ் நீர் கிணறுகள் மூலம் போதுமான அளவு கிடைத்தது. 1978ல் இருந்து 2010 வரை நிகழ்ந்த யுத்தத்தால் ஐந்து லட்சம் மக்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்து குடியேறிவிட்டனர்... யாழ்ப்பாணக்குடாநாட்டின் தரைக்கீழ் நீர் மாசடைந்து போனதால், இக்குடாநாட்டைவிட்டு மூன்று லட்சம் மக்கள் 2040 களில் வன்னிக்கும், திருமலைக்கும், கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்துவிட்டனர். ஆயிரக்கணக்கில் மாண்டு இப்போது எஞ்சியிருப்பது ஒன்றரை லட்சம் மக்கள் தாம்... அவர்களும் வெளியேறிவிடுவார்கள்.... இப்போதுள்ள நீர்த்தட்டுப்பாடு தொடர்ந்தால்...."

"குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தை சீர்ப்படுத்த மார்க்கமில்லையா? மக்கள் நாளாந்தம் தாகத்தால் வாடுகிறார்கள்.... ஒருவருக்கு இரண்டு லீற்றர் நீர் தேவைக்குப்பதிலாக அரைப்பைந்து....? எவ்வளவு இழிநிலை...? மழைக்காலத்தில்தான் யாழ்ப்பாண மக்களுக்கு நாவாற நீர் குடிக்க கிடைக்கின்றது..."

"நாங்களாகத் தேடிக்கொண்டவைதாம். சூழலியலாளரின் எச்சரிக்கைகளை புறக்கணித்தோம்.... தரைக்கீழ் நீரின் கொடையாக விளங்கிய யாழ்ப்பாணக்குடாநாட்டைக் தரிசாக்கி விட்டோம். நீருக்காக நிலத்தைப் பார்த்த நாங்கள், இப்போது நீருக்காக வானத்தையும் கப்பல்களையும் பார்க்கவேண்டியவர்களாகி விட்டோம். மழைநீரை வீட்டடித் தாங்கிகளின் சேகரித்தும் போதவில்லை...." என்றார் மதிவாணன்.

மேசையில் வைத்திருந்த போத்தலில் இருந்த “ஸ்பிரிங்வாட்டரை” எடுத்து அருந்திக் கொண்டார்.

அதனையே பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. முக்கால் போத்தல் நீர் எஞ்சியிருந்தது இப்போது அரைப்போத்தல் நீராக குறைந்துவிட்டது. அதாவது எஞ்சுமா?

அவர்கள் எதற்கும் மேடையிலிருந்து இறங்கியாகவேண்டும்.

தாகம் சிறுவர்களின் நாக்குகளை வறட்டியது. நேற்றுமாலை அருந்திய அரைப்பைந்து நீர்தான். இனி இன்று மாலைதான் அடுத்த அரைப்பைந்து நீர் கிடைக்கும். அந்த அரைப்பைந்தும் முழுமையாக கிடைப்பதில்லை. வழங்குபவர்கள் கொஞ்சத்தை அளக்கும் போது வெட்டிவிடுகின்றார்கள்.

குடாநாட்டின் தோட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன உவர்நீரை அருந்தி இயல்பாக்கம் பெற்ற ஆடு, மாடு, நாய்கள் கூட மிக மிக அருகியே காணப்பட்டன. பச்சைப்பசேல் என காற்றில் ஆடும் தோட்டங்களில் செம்மண் பறக்கிறது. உவர்த்தாவரங்கள் படரத்தொடங்கி விட்டன.

“இந்தியாவில் இருந்து கடலடிக்குழாய் மூலம் நீரைப்பெற ஒப்பந்தம் செய்யலாமே?”

“அதுவும் சாத்தியமல்ல. அங்கும் நீர்த்தட்டுப்பாடாம்.... இருநூறு கோடி மக்கள் அங்கு.....! மேலும், கடலடிக் குழாயமைத்து நீரைப்பெறும் பொருளாதார நிலையிலா நாம் இருக்கின்றோம்?”

“நேற்று புதிதொரு செய்தியும் வந்துள்ளது... நகரத்தில் குளிப்பதற்கும், கழுவுவதற்கும் உதவிய உவர் நீர்க்கிணறுகள் சிலவற்றில் நீர் கருமைநிறமாகி விட்டனவாம்...”

“அப்படியா? இனிக் குளிப்பதற்கும் நீர் இல்லாது போய்விடும் போலும், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உடல்களில் உப்புப்படிந்து பொருக்குகள் படரத்தொடங்கிவிட்டன.”

“இன்னும் நாலைந்து வருடங்களில் (2064) குடாநாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டி ஏற்படலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டை பாலைநிலமாக கைவிட்டுவிட வேண்டியதுதான். வெளியேற வேண்டித்தான் வரும் போல் உள்ளது...”

“வெளியேறுவதிலும் சிரமம் உள்ளது... வன்னியரசு, திருமலையரசு, மட்டக்களப்பு அரசு, மன்னார் அரசு அனைத்தும் தம் எல்லைகளை அடைத்து விட்டன. பிரதேச ரீதியாக தமிழ் மக்கள் பிரிந்துவிட்டார்கள்.... சூழலியலாளர்களின் எச்சரிக்கைகளை புறக்கணித்து விட்டோம்.... வலிகாமத்தின் மத்தியில் எஞ்சியிருக்கின்ற சொற்ப நன்னீர்க் கிணறுகளையாவது பேணவேண்டும்.”

மேடையிலிருந்து ஒவ்வொருவராக கீழே இறங்கத் தொடங்கினார்கள். கடைசியாகக் கலையழகன் இறங்கினார். அடுத்த கணம், சிறுவர்கள் மேடையை நோக்கிப் பாய்ந்து ஓடினார்கள் ஒரே களோபரம். இடிபட்டு, மிதிபட்டு, இடறிவிழுந்து.... எஞ்சிய சிறுவர்கள் மேடையில் தாவி ஏறினார்கள். சிலர் கீழே விழுந்தனர். மேடையில் ஏறியவர்கள், மேடையில் இருந்த தண்ணீர் போத்தலைக் கைப்பற்ற பாய்ந்தனர்.

பெரும் போராட்டம் ! கையிலிருந்து இழுபறிப்பட்டு இடறுண்ட நீர்ப்போத்தல் கீழேவிழுந்தது. ஒருகணத்தில் முழு நீரும் மண்ணில் சரிந்து கொட்டியது. ஒரு சிறுவன் ஓடிவந்து போத்தலை தூக்கி எஞ்சி நின்ற இரண்டு சொட்டு நீரால் வாயை நனைத்தான். இன்னொரு சிறுவன் நிலத்தில் தவழ்ந்து, மண்ணில் ஊறிக் கொண்டு இருந்த நீரை நாவால் பற்றியிழுக்க முயன்றான்.

- ***நுண் அறிவியல் 2000***

# பிரபஞ்ச இரகசியம்

இமைப்பொழுதில் பூமி ஒரு சிறு புள்ளியாகிப் பார்வையிலிருந்து மறைந்தது. தும்பா விண் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஏவப்பட்ட ராம்ஜெட் விண்ணூர்தி, சூரியகதிர்களை ஜீரணித்துச் சக்தியாக மாற்றிக்கொண்டு நொடிக்கு முப்பதினாயிரம் கிலோ மீட்டர் அசுர வேகத்தில் விண்ணைக் கீறியபடி விரைந்தது. காவரைட் நிறை ஈர்ப்புத்துடப்பு உடையுடன் அமர்ந்திருந்த இளங்கோ, ராம் ஜெட்டைச் செலுத்திக் கொண்டிருந்த எக்ஸ் 156 ஐப் பார்த்துக் கேட்டான்.

"நாம் தும்பாவிலிருந்து புறப்பட்டு ஒரு மணி நேரமாகிவிட்டது?"

"உன் கடிகாரத்தைக் கழற்றி எறி. அது நீ வாழ்ந்த பூமிக்குத் தான் பொருந்தும். இங்கு நான்கு நாள் இயக்கம் பூர்த்தியாகிவிட்டது."

"இளங்கோவிற்குத் தன் தவறு இப்பொழுது புரிந்தது. விண்வெளியில் காலமும் நேரமும் இரவும் பகலும் ஏது?

"நமது இலக்கான ப்ராக்சிமா செண்டாரியை எப்பொழுது சென்றடைவோம்?"

எக்ஸ்156 அவனைத் திரும்பிப் பார்க்காமலேயே, "இதே கேள்வியை நீ எத்தனை தடவை கேட்டுவிட்டாய்? பயண ஒழுங்கைச் சொல்கிறேன் கேள். சூரிய மண்டலத்திற்கு மிக அருகில் அண்டம் ப்ராக்சிமா செண்டாரி. சுமார் 4.3 ஒளியாண்டு தூரத்தில் இருக்கிறது. நாம்பயணம் செய்யும் ராம் ஜெட் நொடிக்கு முப்பதினாயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் செல்கிறது. எனவே அது கணித்தபடி ப்ராக்சிமா செண்டாரியைச் சென்றடைய 45 ஆண்டுகள் எடுக்கும். சூரிய மண்டலத்தினைக் கடந்ததும் விண்வெளியில் கிடைக்கும் ஹைட்ரயன் துகள்களைத் திரட்டி எரிபொருளாக்கிக் கொண்டு இலக்கினை நோக்கி..." என்றபோது இளங்கோ அலுப்புடன் "நிறுத்து' என்று கை அசைத்தான்.

"உனக்கு அலுப்பாகத் தான் இருக்கும். நீ ஒரு மனிதன்." என்றது எக்ஸ் 156: "இன்னொரு விசயம் சொல்கிறேன் கேள்."

"சொல் விரைவாகச் சொல். நான் என் குடும்பத்தினருடன் பேசவேண்டும்."

சீறிப்பாய்ந்து கொண்டு அந்த விண்ணூர்தி விரைவதை அதனுள் அமர்ந்திருக்கும் அவர்களால் உணரமுடியவில்லை. கோள்கள் பின் தள்ளப்பட்டன. ஆகாயக் கற்கள் சீறி வரும்போது தானாக விலகி விரைந்தது.

"சூரிய மண்டலத்தைக் கடந்ததும் ஹைட்ரயன் துகள்களை எரிபொருளாகக் கொள்ளும்போது ராமஜெட'டின் வேகம் அதிகரிக்கும் என நான் கணித்துள்ளேன். நொடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீட்டராக மாறும்"

இளங்கோ திகைப்புடன் எக்ஸ் 156 ஐப் பார்த்தான்.

"இதையேன் முன்னரே ஆய்வுத் தளத்தில் நீ கூறவில்லை?" குரலில் பயம் கவ்வியது.

"அவர்கள் என்னிடம் கேட்கவில்லை."

“நீ வெறும் யந்திரம்..”என்று எரிந்து விழுந்தான் இளங்கோ: “அவர்களின் கண்டுபிடிப்புகள் ஒரு போதும் தப்பாகாது.”

எக்ஸ் 156 அவனைத் திரும்பிப் பார்த்தது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த அதனால் முடியாது.

“கண்டு பிடிப்புகள் என்று சொல்லாதே. ஏதோ புதிதாகக் கண்டு பிடித்த மாதிரி பெருமை பேசிக்கொள்கிறீர்கள். இயற்கையில் இல்லாத எதைக் கண்டு பிடித்தீர்கள்? கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார் என்றால் அது எவ்வளவு அபத்தம்? இருந்த கண்டத்தை அவர் கண்டறிந்தார். அப்படித் தான் ஒவ்வொன்றும். யுரேனி'யத்திலிருந்து அணுவைக் கண்டறிந்தீர்கள். இயற்கை தன் இரகசியங்களை நெகிழ்த்தும்போது நீங்கள் கண்டறிகிறீர்கள்.”

“உன்னைப்போன்ற றொபேட்களை மனிதன்...”

“அதுவும் அப்படித் தான்.இயற்கையில் இருக்கின்ற பருப்பொருட்களை நியதிப்படி பொருத்தினீர்கள். அவ்வளவு தான்.”

இளங்கோ மௌனமானான்.

“உன் குடும்பத்தாருடன் பேச வேண்டும் என்றாயே? இதோ பார் இளங்கோ.”

டி.வி திரையில் நளினி தெரிந்தாள். இளமை கொஞ்சும் அவளை அவன் ஏக்கத்துடன் பார்த்தான்.

“ஒரு மாதமாகிறது. இப்போது தான் எங்கள் நினைவு வந்ததா? உங்கள் கடைசி மகள் உங்களைக் காணாது ஏங்கிவிட்டாள்.” என்றாள் நளினி.

“ஒரு மாதமாகிறதா? ஆறு மணி நேரம் என நினைத்தேன்.” பலவற்றையும் பேசிக்கொண்டார்கள்.

"இளங்கோ நேரமாகிறது." என்றது எக்ஸ் 156.

"கொஞ்சம் பொறு."

டி.வி. திரை இருண்டது.

"அவர்களுடன் பேசவிடாது தடுத்துவிட்டாயே?"

"என்ன செய்வது? கட்டளை அப்படி. நீ உறக்க நிலைக்குச் செல்லத் தயாராகு."

"எனக்குத் தூக்கம் வரவில்லை. புரோக்கிராமில் சில மாற்றம் செய்வோம். நான் உன்னுடன் கூடவே இருக்கிறேனே? உனக்குப் பேச்சுத் துணைக்கு.."

"முடியாது. 45 வருடங்கள் நீ என்னுடன் இருக்க முடியாது. இப்பொழுதே உனக்கு வயது முப்பத்தைந்து. வயதாகிவிடுவாய். பின்னர் இலக்கினை அடையும்போது பணிக்கப்பட்ட செயல்களை உன்னால் ஆற்றமுடியாது. உறக்க நிலையில் ஆழ்ந்தால் நீ விழிக்கும்போது இப்பொழுது இருப்பதைப்போலவே இருப்பாய். முதிர்ச்சி அடைந்திருக்க மாட்டாய்."

"எப்பொழுது என்னை எழுப்புவாய்?" என்று இளங்கோ ஏக்கத்துடன் வினாவினான்.

"நாற்பத்தைந்து ஆண்டுகளின் பின்னர்.."

அவன் அதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட கேப்சூலினுள் புகுந்து கொண்டான். எக்ஸ் 156 சில இணைப்புகளைச் செய்ய அவன் உறங்கிப்போனான். அவன்மீண்டும் வழித்தபோது நாற்பத்தைந்து ஆண்டுகள் கழிந்திருந்தன.

ஒரு இரவு உறக்கம் மாதிரி மனநிலை இருந்தது.

"நாம் ப்ராக்சிமா செண்டாரியைக் கடந்து விட்டோம்.புவிக்கணக்கில் நாற்பத்தைந்து வருடங்கள்..."

"நிறுத்து எக்ஸ் 156. முதலில் என் குடும்பத்தாருடன் பேச வேண்டும். என் பிள்ளைகளுடன் பேசவேண்டும்? "என்று இளங்கோ அவசரப்பட்டான்.

எக்ஸ் 156 அவனைப் பரிதாபமாகப் பார்ப்பது போலப்பட்டது.

"ஒரு இலட்சம் ஆண்டுகள் கழிந்து விட்டன, இளங்கோ. அவர்களுடன் இனி நீ எப்பொழுதும் பேசமுடியாது. விண்ணில் ஏவப்பட்ட ராம் ஜெட்டை மனித குலம் மறந்திருக்கும் "

"ஐயோ.."என அலறினான் இளங்கோ: நாம் வாழவில்லையே?"

"நீ இனி பேசப்போவது அவருடன் தான்."

ராமஜெட் தரித்து நின்றது. அது எந்த இடம்? பிரபஞ்சத்தின் எந்த மூலை? அவர்கள் இறங்கினார்கள்.

அவர் அமர்ந்திருந்தார்.

"நீங்களா அவர்?" என வியப்புடன் இளங்கோ வினவினான்.

"அப்படித் தான் பூமியில் சொல்கிறார்கள்."என்று அவர் சிரித்தார். எங்கோ பார்த்த மாதிரி..உணர்ந்த மாதிரி..

"பிரபஞ்ச இரகசியத்தை நீ தெரிந்து கொண்டாய். மனித குலம் தெரிந்து கொள்ளவேண்டிய கடைசி எல்லை இது தான்."

“பூமியில் ஏன் இத்தனை இயற்கை அனர்த்தங்களைச் செய்தீர்கள்? “

“அவை இயற்கை நிகழ்வுகள் அப்பா. நீங்கள் தான் அனர்த்தங்களைச் செய்து கொண்டீர்கள். இயற்கை நிகழ்வுகளான புவிநடுக்கம், எரிமலைத் தாக்கம், சூறாவளி முதலியன இயற்கைச் சமநிலையைப் பாதிப்பதில்லை. ஆனால் நீங்கள்..உறங்கிக்கிடந்த அணுவைப் பிளந்தீர்கள். காடுகளை அழித்தீர்கள். நிலத்தினுள் கிடந்தவற்றை அளவோடு பயன்படுத்தாது கிளறி எடுத்து அழித்தீர்கள். கடைசியாகச் சூரிய கதிர்களைச் சக்தியாகப் பெருக்கினீர்கள். பூமிக்குத் தேவையான அளவு கதிர்களை நான் தந்தேன். நீங்கள் பல மடங்காகப் பெருக்கி நாசத்தைத் தேடிக்கொண்டீர்கள். வளிமண்டலத்தில் பொத்தல்கள் விழுந்துவிட்டன. அதோ பார் உன் பூமியை...”

அவன் பார்த்தான். முதலில் எதுவும் தெரியவில்லை. ஒரு புள்ளி பின்னர் வளர்ந்து...அவன் வாழ்ந்த பூமி.

முனைவுகளில் இருந்த பனிக்கட்டிக் கவிப்புகள் உருகி நீராவதைக் கண்டான். சமுத்திரங்களின் நீர் மட்டம் உயர்ந்து நிலப்பரப்பினை மூழ்கடிப்பதைக் கண்டான். அணு ஆயுதங்கள் தாமாகச் சிதறி வெடிப்பதைக் கண்டான். நிலப்பரப்பு எதுவுமில்லை. ஒரே நீர்ப்பிரவாகம். சில கணந்தான். அவை கடும்வெப்பத்தால் ஆவியாகி விண்ணில் திரள் திரளாக எழுந்து மறைந்தன. பூமி எல்லாவற்றையும் இழந்து பசுமை எதுவுமின்றி பரல், மணல் வெளியாகக் கனலை வீசியது.

“ஐயோ...கொடுமை..”என்று இளங்கோ அலறியபோது, அவன் பாதங்கள் உருகத் தொடங்கியதைக் கண்டான்.

***- கலைமகள் யூன் 1995***

"பயிரில் ஏன் இந்த இயற்கை அனர்த்தங்களைச் செய்கிறாள்?"

அவள் இயற்கை நேசத்தின் அடையாளம். பூமியின் ஆன்ம சொரூபத்தைக் கொஞ்சிக் கொண்டாடுகிறாள். இயற்கை மகிழ்வுகளை புசிக்கும், எரிமலை, நதிக்கும், சூறாவளி புயல் இயற்கைச் சீற்றங்களைப் பாதுகாப்பதில்லை. அவளை நீண்ட உறக்கத்தில் ஆழ்த்திய மனிதனின் ஆசைகளை அழிக்கவே பிரசவிக்கிறாள். கடுஞ்சீற்றம் கொண்டு பலிவாங்குகிறாள் மனித அழிவுகளுக்கும் காடுகளை அழிப்பு அதிகளவாய் எடுப்பதால் கொதிக்கின்றாள். புவியைத் தேவையற்ற அளவு அழிக்கும் நாம் அழிவுக்கு நேரடியாக பல மடங்காய் பெருகும் நாசத்தைத் தேடிக்கொள்வோம். வடிவமைக்கப்பட்ட தேவைக்கு மீறிப் பயன்படுத்தும் அதனால் பாதிப்பு உண்டு பண்ணும்.

அவள் பாவத்தால், முதலில் எழும் இயற்கையின் இரு பக்கங்களைக் காண்பது அவள் வாழ்வுக்கு பயம்.

முதலாளித்துவம் இன்றைய பலிக்கடா வாழ்வுக்கு உடலை தியாகம் செய்ய கற்றுக்கொடுக்கிறது மட்டும் அல்லாது மேம்பாட்டுக்கான அறிவுடைமைக் கருவிகளுக்குள் அடங்கி வாழச் சிறு வெற்றியைக் கண்டோம். நிலையாய் எழுப்பினோம். இது நிரூபணம். சில காட்டுயிர்கள் அவளை அச்சுறுத்தினால் அதுவும் இழப்பதில் தீரா கோபம் வீழ்ச்சியை முழுமையும் எல்லாவற்றையும் இழந்து பலரை அழித்தொழித்து புதிய பலவற்றைப் பெரியதாக் கொள்ள விரும்பும்.

இப்படியெல்லாம் எனது இதயத்தை அழுத்தியபடி அவள் பற்றிய உருக்கு, பொருட்பிறழ்வுத் தன்மை கண்டான்.

கலைமகள் மே 1995



செங்கை ஆழியான்





ISBN 955 - [illegible]

180/=

13. Tel: [illegible]0195